தர்மசக்கரம்



துந்துபி ௵ கார்த்திகை ௴ சக்கரம் 31 ஆரம் 11

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை, எலமனூர் ஸ்டேஷன், திருச்சி ஜில்லா.

வேண்டுகோள்

திருப்பராய்த்துறையில் உள்ளூர் மாணவ மாணவிகளுக்காக என்று தபோவனம் நடத்திவரும் விவேகானந்த உயர்நிலைப்பள்ளி இதுகாறும் பழங்கால வேத பாடசாலை, அன்னசத்திரம் ஆகிய பழைய கட்டடங்களில் நடைபெற்று வந்தது. ஆண்டுதோறும் மராமத்து பண்ணிக்கொண்டே பள்ளி நடைபெற்று வந்தது. 6 முதல் 10 ஆம் வகுப்புவரை சுமார் 600 பிள்ளைகள் அதில் படித்து வருகிறார்கள். இதற்கு நல்ல கட்டடம் இதுநாள்வரை கட்ட வசதிப்படாமலேயே நடந்துகொண்டிருந்தது. இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் இதற்கென்று 24 அறைகள் கொண்ட 3 மாடி கட்டடம் கட்டத்துவங்கியுள்ளோம். இந்தக் கட்டடம் பூர்த்தியானதும் இதை மேல்நிலைப் பள்ளியாக்கக் கருதியுள்ளோம். இதன் மூலம் பத்து மைல் சுற்று வட்டாரத்தில் சுமார் ஆயிரம் பிள்ளைகள் நல்ல கல்வியும் நல்ல வாழ்க்கைப் பயிற்சியும் பெறுவார்கள். இதன் உத்தேச செலவு ரூபாய் பத்து லட்சம் ஆகும். ஆயினும் இப்போதுள்ள கூலி, சிமெண்ட், கம்பி விலை ஏற்றங்களினால் இந்தக் கட்டடச் செலவு நாம் உத்தேசித்திருக்கிற திட்டத்தில் அடங்குவதாக இல்லை. இந்தத் திட்டத்திற்காக இப்போது நமக்குப்பொருள்வசதி தேவைப்படுகிறது. சேமிப்புப்பணம் வைத்துள்ளவர்கள் பேங்கில் டிபாஸிட் செய்வதுபோன்று இந்த நற்காரியத்திற்குக் கடன் தந்து உதவலாம். ரூபாய் 1000மும் அதற்கு மேற்பட்ட தொகைகளும் ஏற்றுக்கொள்ளப் பெறும். அதற்கு பேங்க் டிபாஸிட் முறையில் மூன்று வருஷ கெடு போட்டு ரசீது வழங்கி நூற்றுக்கு வருஷம் ஒன்றுக்கு ஒன்பது வீதம் வட்டி செலுத்துவோம். மூன்று வருஷ கெடு போட்டிருப்பினும் இடையில் அவசரத்தேவையிருப்பின் எப்போது வேண்டுமானாலும் முதலும் வட்டியும் வாங்கிக்கொள்ளலாம். ஆகவேதான் டிபாஸிட்டின் கால அளவைக்கு ஏற்ற வட்டி விகிதம் போடாமல் எவ்வளவு காலத்திற்கானாலும் 9% வட்டி என்று நிர்ணயித்துள்ளது. ஆண்டுதோறும் வட்டி வாங்கிக்கொள்ளாவிட்டாலும், அடுத்த ஆண்டிற்கு வட்டி முதலுடன் சேர்ந்து அதுவும் வட்டி பெறுகிறது. ஆகவேதான் 9% வட்டி என்று நிர்ணயித்துள்ளது. பணம் அனுப்பும் முறை: ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் என்ற பெயரில் தாங்கள் அனுப்புகிற தொகைக்கு திருச்சியில் உள்ள பேங்குகளில் மாற்றத்தக்கதாக டிராப்ட் எடுத்து A/C Payee என்று கிராஸ் செய்து சாதாரணத் தபாலிலேயே இங்கு அனுப்பிவைக்கலாம். யார் பெயருக்கு ரசீது போடவேண்டுமோ அவரது தபால் விலாசம் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

திருப்பராய்த்துறையில் உள்ளூர் மாணவ மாணவிகளுக்கு இப்பள்ளிக் கட்டடம் அமைய வேண்டியது அவசியம். தொழில் துறையில் பெரிய தொழிற்சாலைகள் ஏற்படுவதற்குப் பங்காளர்கள் (share holders) முன்வருவதுபோன்று இதற்கு முதலீடு செய்பவர்களுக்கு மூன்று வருடங்களில் வட்டியும்முதலும் திரும்ப வந்துவிடுகிறது; ஒரு ஸ்தபானமும் உருவாகிறது. பணவசதி உள்ளவர்கள் இப்பள்ளிக் கட்டடம் உருவாக தபோவனத்தில் வட்டிக்குப் பணம் டிபாசிட் செய்து உதவ மனமுவந்து முன்வருவார்களாக.

சித்பவானந்த

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 31	துந்துபி ஹூ கார்த்திகை மீ	ஆரம் 11

பொருளடக்கம்

வருட சந்தா :	உள்நாடு	ரூ. 15-00	வெளிநாடு	ரூ. 35-00
தனி இதழ்	,,	ரூ. 1-50	,,	ரூ. 3-00

அந்தர்யோக விவரங்கள்

பெரியார் ஜில்லா—ஈரோட்டில் 21—11—82 ஞாயிற்றுக்கிழமை
இடம்: ஈரோடு மஞ்சள் வியாபாரிகள் சங்கம், பார்க்-ரோடு
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—தூத்துக்குடியில் 21—11—82 ஞாயிற்றுக்கிழமை
இடம்: சிவன்கோவில் தெருவிலுள்ள சச்சிதானந்த சபை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்

கோவை ஜில்லா—அன்னூரில் 21—11—82 ஞாயிற்றுக்கிழமை
இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—ஸ்ரீ வைகுண்டத்தில் 28—11—82 ஞாயிற்றுக்கிழமை
இடம்: இந்து வித்யாலயா ஆங்கிலப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் பிற்பகல் 12-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

[P.T.O.]

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

திருச்சி ஜில்லா—கரூரில் 28—11—82 ஞாயிற்றுக்கிழமை
இடம்: பசுபதிபாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
பகல் உணவுக்கு ரூ. 1-50 நேரில் செலுத்திப் பதிவு செய்துகொள்ளவும்.

வடஆற்காடு ஜில்லா—வேலூரில் 28—11—82 ஞாயிற்றுக்கிழமை
இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம், பாலாற்றங்கரை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்
பகல் உணவுக்கு ரூ. 1-50 நேரில் செலுத்திப் பதிவு செய்துகொள்ளவும்.

தென்ஆற்காடு ஜில்லா—ஆவணிப்பூரில் 4—12—82 சனிக்கிழமை
இடம்: அரசினர் உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—சித்திரச்சாவடியில் 5—12—82 ஞாயிற்றுக்கிழமை
இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
பகல் உணவு ரூ. 1-50; மாலை சிற்றுண்டி ரூ. 1-00. நேரில் செலுத்தவும்.

தென்ஆற்காடு ஜில்லா—அவலூர்பேட்டையில் 5—12—82 ஞாயிற்றுக்கிழமை
இடம்: அகத்தீஸ்வரர் ஆலயம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

பெரியார் ஜில்லா—அம்மாப்பேட்டையில் 11—12—82 சனிக்கிழமை
இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ஞானயோக தபோவனம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

சேலம் ஜில்லா—வனவாசியில் 13—12—82 திங்கட்கிழமை
இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண விவேகானந்த தவ இல்லம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—சேரன்மகாதேவியில் 19—12—82 ஞாயிற்றுக்கிழமை
இடம்: பாரத்வாஜ ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
பகல் உணவு ரூ. 1-50; மாலை சிற்றுண்டி ரூ. 1-00. நேரில் செலுத்தவும்.

கோவை ஜில்லா—குமரன்குன்று ஆலயத்தில் 19—12—82 ஞாயிற்றுக்கிழமை
இடம்: அருள்மிகு ஸ்ரீ கல்யாண சுப்பிரமணிய சுவாமி ஆலயம்
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 31 | துந்துபி ௵ கார்த்திகை ௴ | ஆரம் 11

பிரார்த்தனை

योऽन्तस्तिष्ठत्यशेषस्य पश्यतीशः शुभाशुभम् ।
तं सर्वसाक्षिणं विष्णुं नमस्ते परमेश्वरम् ॥

— विष्णु पुराणम्

யோऽந்தஸ்திஷ்டத்யசேஷஸ்ய பச்யதீச: சுபாசுபம் ।
தம் ஸர்வ ஸாக்ஷிணம் விஷ்ணும் நமஸ்தே பரமேச்வரம் ॥

— விஷ்ணு புராணம்

எல்லாருடைய உள்ளத்தில் வீற்றிருப்பவரும் நலம் கேடுகளைக் காண்பவரும் அனைத்துக்கும் சாட்சியாயிருப்பவரும் ஆன பரம்பொருளாகிய விஷ்ணுவைப் போற்றுகிறேன்.

மாயைமுதல் ஆம்வினைநீ மன்உயிர்நீ மன்உயிர்தேர்ந்து
ஆயும்அறிவு ஆனதுநீ அன்றோ பராபரமே.

— தாயுமானவர்

அருள் விருந்து

அடக்கம் யாண்டும் இன்பம் நல்குகிறது.

ஆசைகளனைத்தும் அஞ்ஞானத்தில் உதிக்கின்றன.

கேடதனில் மனத்திருப்தியில்லை. நல்லதில் அது நிலைத்திருக்கிறது.

சங்கல்ப விகல்பங்களை ஒதுக்கிவிட்டு நிம்மதியாயிருப்பது நிஜ நிலை.

அப்போதைக்கப்போது கையாளப்படாத பகுத்தறிவு பயனற்றதாம்.

பெரியாரைத் துணைக்கொள்ளுதல் முன்னேற்றத்துக்கு உற்ற உபாயமாம்.

தோல்வியிலும் நன்மையைக் கடைப்பிடி. இறுதியில் அது வெற்றி தருகிறது.

விருப்பு வெறுப்பு அற்ற மனதில் மெய்ப்பொருளைப்பற்றிய உண்மை தெளிவடைகிறது.

பிறப்பை முன்னிட்டு மனிதனை மனிதன் புறக்கணிப்பது பொல்லாத தொழுநோயாம்.

உறுதியான உள்ளம் படைத்திருப்பது மெய்ப்பொருளை அடைதற்கு உற்ற உபாயமாம்.

நலன் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளுகிறது. தீது தன்னைத்தானே கீழ்மைப்படுத்துகிறது.

யுக்திக்கு மிகைபட்ட மதிப்புத் தராதே. சில வேளைகளில் அது மனிதனைத் தீய வழியில் கொண்டு சேர்க்கிறது.

இரவு பகல் மயமாயிருப்பது இவ்வுலகம். இரவு பகலுக்கு அப்பாலிருப்பது ஆத்ம சொரூபம். அதில் நிலைத்திரு.

வாழ்வு என்னும் நெடும்பயணத்தை முடித்துக் கொண்டவனுக்குத் துன்பமில்லை. இன்பம் தானே திகழுகிறது.

நூல் ஒன்றும் கல்லாதவர்களுக்கிடையில் நல்லார் பலர் உளர். நூல் பல கற்றிருந்தும் நல்வழி செல்லாதவர் பலர் உளர்.

மற்றவர்களை விடத் தன்னை மேலோனாக நினைக்கிறவன் கீழ்மையுறுகிறான். பிறரைப் பாராட்டுதற்கேற்ப மனிதன் மேன்மையுறுகிறான்.

கனவில் உன்னைக்கடிக்க வரும் கரடியைக் கற்பனை பண்ணியது நீயே. நனவில் உன்னை எதிர்க்கும் எதிரியைக் கற்பித்துக் கொண்டவனும் நீயே.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பக்தி நிறைந்த இளைஞனுகிய பூரணனைப் பற்றிப் பரமஹம்சதேவருக்கும் மகேந்திரருக்கும் இடையில் சம்பாஷணை நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

பரமஹம்சதேவர்: ''உள்ளத்தினுள்ளே எழுகின்ற உணர்ச்சிகளைப் பூரணன் வெளிப் படையாகக் காட்டிக்கொள்வதில்லை. அவன் அடக்கமே வடிவெடுத்தவன். விளம்பரப் பிரியன் அல்லன். அவன் மேனியில் நல்ல அறிகுறிகளே அமைந்திருக்கின்றன. அப்படி அல்லவா?''

மகேந்திரர்: ''பூரணனுடைய கண்கள் பெரியவைகளாகவும் ஒளி நிரம்பப் பெற்ற வைகளாகவும் இருக்கின்றன.''

பரமஹம்சதேவர்: ''கண்கள் ஒளி நிரம்பப் பெற்றவைகளாக இருப்பது மட்டும் போதாது. பரநாட்டம் படைத்தவனுடைய கண் அமைப்பு அலாதியானது. இங்கே வந்து நம்மோடு உரையாடிய பின் அவனுடைய மனப்பாங்கில் ஏதாவது மாறுதல் உண்டாயிருக்கக்கூடும். அதைப்பற்றி நீ அவனிடம் விசாரித்தாயா?''

மகேந்திரர்: ''ஆம் ஐயனே. நாங்கள் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தோம். கடந்த சில நாட்களாகக் கடவுளைப் பற்றி நினைக்கின்ற பொழுதும், அவருடைய நாமத்தை உச்சரிக்கின்ற பொழுதும், அவனுடைய கண்களினின்று கண்ணீர் பெருக் கெடுத்தது என்றும், மயிர்க்கூச்சு உண்டானது என்றும் அவன் இயம்பினுன். அந்நிலை அவனுக்கு ஆனந்தப் பரவசத்தை ஊட்டியது.''

பரமஹம்சதேவர்: ''அப்படியா, அத்தகைய மனநிலைதான் அவனிடத்து வேண்டப் படுகிறது.''

இப்பேச்சுக்குப் பிறகு இருவரும் சிறிது நேரம் மௌனமுற்று இருந்தனர். அதன் பிறகு மகேந்திரர் மொழிந்ததாவது: ''வெளியில் ஒருவன் காத்துக் கொண்டிருக்கிறுன்.''

பரமஹம்சதேவர்: ''யார் அவன்?''

மகேந்திரர்: ''வெளியில் பூரணன் காத்துக்கொண்டிருக்கிறுன். தன் வீட்டு வாயிலிலும் இதே பாங்கில் அவன் நின்று கொண்டிருப்பது வழக்கம். அவ்வழியே நம்மில் யாராவது சென்ருல் அவன் ஓடி வந்து பாதத்தைத் தொட்டு வணங்குவான்.''

பரமஹம்சதேவர்: ''அப்படியா?''

திண்டு ஒன்றின்மீது சாய்ந்து பரமஹம்ச தேவர் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். தம் பள்ளியிலே பயின்று வந்த மாணுக்கன் ஒருவனை மகேந்திரர் தம்மோடு அழைத்து வந்திருந்தார். அவனுக்கு வயது சுமார் பன்னிரண்டு ஆகும். அவன் பெயர் க்ஷிரோத்.

மகேந்திரர்: ''இந்த இளைஞன் நல்லியல்பு வாய்க்கப்பெற்றவன். பரம்பொருளைப் பற்றிய பேச்சில் அவன் பெருமகிழ்வு எய்துகிறுன்.''

பரமஹம்சதேவர் புன்னகை பூத்தார். அவர் இயம்பியதாவது: ''இந்த இளைஞனுடைய கண்கள் மானின் கண்கள் போன்று தென்படுகின்றன.''

அப்போது அவ்விளைஞன் பரமஹம்ச தேவர் திருவடிகளைத் தொட்டு வணங்கினுன். அதன் பிறகு அவர் பாதங்களை வருட்வும் செய்தான். மகேந்திரரிடம் பரமஹம்ச தேவர் மேலும் மொழிந்ததாவது: ''இந்நாட்களில் ராக்கால் தன் இல்லத்தில் வசித்து வருகிறுன். அவன் மேனியில் கட்டி ஒன்று கிளம்பியிருக்கிறது. அதை முன்னிட்டு அவன் சிறிது உடல் நலம் குன்றியவனுகவிருக்கிறுன். அவன் மனைவி இப்பொழுது கர்ப்பிணியாயிருக்கிருள்.''

பால்த்துவும் விநோத்துவும் பரமஹம்சர் எதிரே அமர்ந்திருந்தனர். புன்னகை பூத்தவராகப் பரமஹம்சதேவர் பால்த்துவிடம் கேட்டதாவது: ''உன் தந்தையிடம் நீஎன்ன பகர்ந்தாய்? (மகேந்திரரைப் பார்த்து) இவனுடைய தந்தை இவன் இங்கே வரக் கூடாது என்று தடை சொன்னுர். (மறுபடியும் பால்த்துவைப் பார்த்து) அதற்கு நீ

விடுத்த விடை யாது?''

பால்த்து: ''ஆம். பரமஹம்சரைப் பார்க்க இடையிடையே நான் போவதுண்டு. அதில் குற்றம் ஏதாவது உண்டா?''

இதைக் கேட்ட பரமஹம்சதேவரும் மகேந்திரரும் நகைத்தனர்.

''தேவை ஏற்படும் பொழுது தக்க விடையை மேலும் பகர நான் ஆயத்தமாயிருக்கிறேன்.''

மகேந்திரரிடம் புன்னகை பூத்தவராகப் பரமஹம்சர் மேலும் மொழிந்ததாவது: ''வேண்டாம்; வேண்டாம். வரம்புகடந்து அவன் வார்த்தையை வளர்க்கவேண்டிய அவசியமில்லை.''

மகேந்திரர்: ''ஆம் ஐயனே; வரம்பு கடந்து அவன் பேசவேண்டிய அவசியமில்லை.'' அதைக் கேட்டுப் பரமஹம்சர் புன்முறுவல் பூத்தார்.

இப்போது விநோத்திடம் பரமஹம்சதேவர் வினவியதாவது: ''நீ உடல் நலமுற்று இருக்கின்றாயா? நெடுநாளாக நீ ஏன் தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு வரவில்லை?''

விநோத்: ''நான் இடையில் ஒரு தடவை வரத் தீர்மானித்தேன். ஆயினும் நான் நோய்வாய்ப்படக்கூடும் என அஞ்சி வருவதை ஒத்திவைத்தேன். சிறிதுகாலம் நான் நோய்வாய்ப்படலாயினேன். இன்னும் நான் முற்றிலும் குணமடையவில்லை.''

பரமஹம்சதேவர்: ''என்னோடு நீ இப்பொழுது புறப்பட்டுத் தக்ஷிணேசுவரத்துக்கு வா. அங்கு வீசும் தூயகாற்று உன்னை அதிவிரைவில் குணப்படுத்தும்.''

இப்பொழுது இளைய நரேந்திரன் அறையினுள்ளே வந்தான். அதே வேளையில் பரமஹம்சதேவர் முகம் கழுவ வெளியே போனார். இளைய நரேந்திரன் அவரைப் பின்தொடர்ந்தான். கைகளையும், முகத்தையும் கழுவுவதற்கு அவன் நீர் வார்த்தான். அவ்வேளையில் மகேந்திரரும் ஆங்கு நின்றுகொண்டிருந்தார்.

பரமஹம்சதேவர்: ''இன்றைக்கு வெப்பமும் புழுக்கமும் மிகுந்திருக்கின்றன.''

மகேந்திரர்: ''ஆம் ஐயனே.''

பரமஹம்சதேவர்: ''அந்தச் சிறிய அறையிலே நீ எப்படித் தாக்குப்பிடிக்கின்றாய்? அது விரைவில் வெப்பம் நிறைந்ததாகி ஆய்விடுகிறதன்றோ?''

மகேந்திரர்: ''ஆம் ஐயனே, அவ்வறை அதி விரைவில் வெப்பம் நிறையப்பெற்றதாகிறது.''

பரமஹம்சதேவர்: ''அதுமட்டுமன்று. உன் மனைவி இந்த வெப்பத்தால் மனத்தடுமாற்றமடைகின்றாள். குளிர்ந்துள்ள ஓர் அறையில் வசித்திருக்கும்படி அவளுக்கு ஏற்பாடு செய்வது அவசியம்.''

மகேந்திரர்: ''ஆம் ஐயனே. மாடிக்கு வர வேண்டாம் என்றும் கீழே இருக்கும் குளிர்ந்த அறை ஒன்றில் வசித்திருக்கும்படியும் நான் அவளுக்குச் சொல்லியிருக்கிறேன்.''

வீட்டின் முன் மண்டபத்திற்குத் திரும்பி வந்து பரமஹம்சதேவர் ஆசனத்தில் அமர்ந்தார்.

''சென்ற ஞாயிறன்று நீ ஏன் தக்ஷிணேசுவரத்திற்கு வரவில்லை?'' என்று பரமஹம்சதேவர் மகேந்திரரிடம் வினவினர்.

மகேந்திரர்: ''ஐயனே, நோய்வாய்ப்பட்டிருந்த என் மனைவியைக் கவனித்துக்கொள்வதற்கு வீட்டில் யாரும் அன்று இல்லை. ஆகையினால் நான் வரமுடியவில்லை.''

கல்கத்தாவிலே நிமுகோஸ்வாமி சந்திலே இருந்த தேவேந்திரருடைய இல்லத்துக்குப் பரமஹம்சதேவர் வண்டியில் போய்க்கொண்டிருந்தார். அவரோடு அவ்வண்டியில் மகேந்திரர், இளைய நரேந்திரன், மற்றும் இரண்டொருவர் போய்க்கொண்டிருந்தனர். பரமஹம்சதேவர் பரமானந்தத்தில் மூழ்கியிருந்தார். பூரணன் மீது பரமஹம்சதேவர் கருணைமிக வைத்திருந்தார். அந்த இளைய பக்தனைப்பற்றி அவர் உரையாடலானார்.

மகேந்திரரிடம் பரமஹம்சதேவர் மொழிந்ததாவது: ''அவன் ஒரு தூயஆத்மா. அவன் யாண்டும் முன்னேற்றமடைய வேண்டுமென்று அம்பிகையிடம் நான் பிரார்த்திக்கிறேன். நான் அப்படிச் செய்வதைப் பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாது.''

மகேந்திரரும் உடன் வந்துகொண்டிருந்த ஏனைய பக்தர்களும் பூரணனிடம் பரமஹம்சதேவர் காட்டிய கருணையைக் குறித்து வியப்படைந்தனர்.

பரமஹம்சதேவர்: ''அவனை இன்று நீ இங்கே அழைத்து வந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். நீ ஏன் அழைத்து வரவில்லை?''

வண்டியில் அவர்கள் போய்க்கொண்டிருந்தபொழுது பூரிப்பு நிறைந்திருந்த இளைய நரேந்திரனுடைய முகத்திலே மகிழ்வு தாண்டவமாடியது. அதைப் பார்த்த ஏனையவர்களுடைய முகங்களிலும் ஆனந்தம் ஊற்றெடுத்தது. இக்காட்சியைக் காணலுற்ற பரமஹம்சதேவர் மகேந்திரரிடம் மொழிந்ததாவது: ''இச் சிறுவனைச் சற்றுக் கவனித்துப் பார். களங்கமற்றப் பேரானந்தத்தில் இவன் திளைத்திருக்கிறான். முற்றிலும் தூய மனம் படைத்திருக்கும் ஒருவனுக்கே இத்தகைய தெய்விக மகிழ்வு சாத்தியமாகும். மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய மூன்று பொல்லாத ஆசைகளுக்கும் இவனுக்கும் வெகுதூரம். இந்த ஆசைகளினின்று அறவே நீங்கிய மனம் படைத்திருப்பவன் பாக்கியவான். அன்னவனே கடவுள் காட்சிக்குத் தகுதியுடையவனாகிறான்.''

பரமஹம்சதேவர் ஊர்ந்து வந்த வண்டி தேவேந்திரநாதருடைய இல்லத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. முன்பொரு நாள் தக்ஷிணேசுவரத்தில் பரமஹம்சதேவர் தேவேந்திரநாதரிடம் இயம்பியதாவது: ''வசதி வாய்க்கின்ற பொழுது உன் இல்லத்திற்கு ஏதேனும் ஒரு நாள் வரவேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தேன்.'' அதற்குத் தேவேந்திரன்விடுத்த விடையாவது: ''அதே எண்ணந்தான் என் மனதிலும் உதித்தது. அதை நிறைவேற்றி வைத்தல் பொருட்டு இன்றைக்கு நான் தங்களை அணுகியிருக்கிறேன். வருகிற ஞாயிற்றுக்கிழமையன்று தாங்கள் அடியேனுடைய இல்லத்துக்கு எழுந்தருள வேண்டுமென்று பணிவுடன் வேண்டுகிறேன்.'' பரமஹம்சதேவர் கொடுத்த எச்சரிக்கையாவது: ''உன் வருவாய் மிகச் சாமானியமானது. உன் வீட்டுக்கு வரவேண்டுமென்று பலரை அழைக்கவேண்டாம். குறிப்பிட்ட ஒரு சிலர் மட்டும் அங்கு வந்தால் போதுமானது. வண்டி வாடகையையும் நீ எளிதில் சமாளிக்க முடியாது.'' புன்னகை பூத்த பாங்கில் தேவேந்திரன் விடுத்த விடையாவது: ''என் வருவாய் மிகச்சிறியதாய் இருப்பதைக் குறித்துக் கவலைப்படுவானேன். கடன் பட்டாவது வெண்ணெய் வாங்கி அருந்துவது அல்லவா பழமொழி!'' இக்கூற்றைக் கேட்ட பரமஹம்சதேவர் நீண்டதொரு நகைப்பில் மூழ்கலாயினர்.

வண்டியும் தேவேந்திரருடைய வீட்டை நெருங்கியது. அப்பொழுது பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: ''விரிவான ஏற்பாடு ஏதும் செய்ய வேண்டாம். இன்று என் உடல் நிலையும் சரியாகவில்லை. ஏதோ பெயரளவில் ஒரு சிறிய ஏற்பாடு செய்தால் போதுமானது.''

தேவேந்திரனுடைய இல்லத்திலே மாடிக்குக் கீழே இருந்த முன் மண்டபத்தில் பரமஹம்சதேவர் அமர்ந்து கொண்டார். பக்தர்கள் பலர் அவரைப் புடைசூழ்ந்திருந்தனர். அப்பொழுது மாலை நேரம். அறையிலே தீபங்கள் பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தன. இளைய நரேந்திரன், ராம், மகேந்திரர், கிரீஷ், தேவேந்திரன், அக்ஷயன் உபேந்திரன் ஆகிய அன்பர்கள் பலர் அங்கு வந்திருந்தனர். வயதில் இளையவனாகவிருந்த பக்தன் ஒருவனைப் பரமஹம்சதேவர் சிறிது கவனித்துப்பார்த்தார். அப்போது அவருடைய முகத்தில் திருப்தி தென்பட்டது. அந்த இளைஞனைக் குறித்து மற்றவர்களிடம் பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: ''மனிதன் ஏன் கடவுள் நாட்டம் உடையவனாக இல்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய மூவித ஆசைகள் மனிதனை உலகபந்த பாசத்தில் பிடித்துக் கட்டிவைக்கின்றன. இந்த மூன்றுவித ஆசைகளில் மூழ்கிக் கிடக்கும் மனது கடவுள் நாட்டங்கொள்ளாது.'' தெய்விகக் காட்சி ஒன்று அப்பொழுது பரமஹம்சதேவருக்குத் தென்பட்டது.

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

8-7. சூரியர்கள் சந்திரர்கள் தோன்றுச் சுயம்ஜோதிப்
பூரணதே சத்தில் பொருந்துநாள் எந்நாளோ.

பௌதிக உலகில் சூரியன், சந்திரன், அக்னி, மின்னல் ஆகியவைகள் பிரகாசம் வாய்ந்தவைகள். இவைகளுள் சந்திரன் பிரகாசிப்பது சூரியனிடத்திருந்து பெற்ற வெளிச்சத்தின் விளைவாம். ஏனைய மூன்றும் சுயப்பிரகாசம் வாய்க்கப்பெற்றவைகள். ஆயினும் பிரளய காலத்தில் பிரபஞ்சம் முழுதும் தோன்றுநிலை எய்துமிடத்து இவைகளும் மறைந்துபட்டுப் போகின்றன. இவைகளுள் சூரியன் ஒன்று மட்டுமே கிட்டத்தட்ட ஆத்மப்பிரகாசத்தை ஒத்திருக்கிறது. ஆயினும் சூரியப்பிரகாசத்துக்கும் துவக்கமும் முடிவும் இருப்பதால் அது நிலையற்றதெனக் கருதப்படுகிறது. பிரகாசிக்கும் பாங்குடைய இவைகளின் துணைகொண்டு உலகப்பொருள்களை நாம் பார்க்கவும் ஆராய்ச்சி பண்ணவும் செய்கிறோம். இவைகளுக்கு அன்னியமாக நம்மிடத்து உள்ளத்தினுள்ளே ஆத்மப் பிரகாசம் மிளிர்ந்துகொண்டிருக்கிறது. அந்த ஆத்மப் பிரகாசத்துக்கு ஆதியும் அந்தமுமில்லை. அது யாண்டும் தன்னைத் தானே விளக்கிக்கொண்டிருக்கிறது. அதை அறிந்துகொள்ளுதற்குப் பௌதிக வெளிச்சங்களாகிய சூரியன், சந்திரன், அக்னி, மின்னல் முதலியன உதவமாட்டா.

அது எப்படி என்று ஆராய்வோம். கார் இருளிலே மானுடன் ஒருவன் ஓரிடத்தில் தன்னந்தனியனாக அமர்ந்திருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அவ் இருள்வேளையில் அவ்வழியே நடந்து சென்ற சிலர் இங்கு யாருமில்லை என்று தங்களுக்கிடையில் பேசிக்கொண்டனர். அவர்கள் பேச்சுத் தனியாக அமர்ந்திருந்தவன் காதில் விழ்ந்தது. அப்பேச்சைக் கேட்ட அவனுக்குத்தான்இருப்பதைப் பற்றிய சந்தேகம் வரவில்லை. ஆங்குச் சூரியப்பிரகாசமில்லை; சந்திரனும் வெளிச்சம் தரவில்லை; நட்சத்திரங்களோ, மின்னலோ அக்னியோ அவனை விளக்கிக்காட்டுதற்கு ஆங்கு இல்லை. அப்படியிருந்தும் தான் இருப்பதைக் குறித்து அம் மனிதனுக்குச் சந்தேகம் சிறிதும் வரவில்லை. தான் இருப்பதைத் தானே அறிவது ஆத்மப்பிரகாசம். இந்த ஆத்மப் பிரகாசம் ஒவ்வொரு ஜீவனுடைய உள்ளத்திலும் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. உண்மையில் ஆத்மப் பிரகாசமே அவனுடைய நிஜசொரூபம். ஜீவகோடிகளனைத்தும் உண்மையில் ஆத்ம சொரூபம். அந்தந்த ஜீவன் அதனதன் வினைக்கேற்ற உடலை எடுத்து வாழ்வு என்னும் விவகாரத்தைச் செய்துகொண்டிருக்கிறான். இத்தகைய சூழ்நிலையிலும் ஆத்மப் பிரகாசம் யாண்டும் தன்மயமாய் மிளிர்ந்துகொண்டிருக்கிறது. அந்த ஆத்மப் பிரகாசத்தை விளக்குதற்குப் பௌதிகப் பிரகாசப் பொருள்களாகிய சூரியன், சந்திரன், நட்சத்திரம், அக்னி, மின்னல் முதலியன ஒரு பொழுதும் உதவமாட்டா. ஆத்மப் பிரகாசத்தை ஜடப்பொருள்களின் பிரகாசத்தோடு ஒப்பிடுவதும் பொருந்தாது. ஆத்மப் பிரகாசம் சின்மயம். அது முற்றிலும் தன்னைத் தானே எல்லா நிலைகளிலும் அறிந்துகொண்டிருக்கிறது. அங்ஙனம் தன்னில் தானாக நிலைத்திருப்பது வாழ்க்கையின் குறிக்கோள். அங்ஙனம் தன்னில் தானே திகழ்ந்துகொண்டிருப்பது அப்பொருளுக்குரிய சுவதேசமாகிறது.

மனிதன் தன்னுடைய சுயராஜ்யமாகிய தன்னிடத்தே யாண்டும் பொருந்திக்கொண்டேயிருக்கிறான். அதற்கிடையில் பொருந்து நாள் எந்நாளோ என்று வருந்துவது அஞ்ஞானத்தின் கூறு ஆம். எது எல்லாம் மனிதனிடத்திருந்து பிரித்து ஒதுக்கப்படுகிறதோ அது அவனுக்குச் சொந்தம் அன்று. எக்காரணத்தை முன்னிட்டும் ஆத்மாவானது தன்னிடத்திருந்து பிரிந்திருக்க முடியாது. இவ்வுண்மையை அறிந்து தன் நிஜசொருபத்தில் நிலைத்திருப்பது சாதனத்தின் முடிந்த நிலையாம்.

8-8. கன்றுமன வெப்பக் கலக்கம்எலாம் தீரஅருள்
தென்றல்வந்து வீசுவெளி சேருநாள் எந்நாளோ.

சன்று-வருத்தம்.

கோடை வெப்பத்தின் கொடுமையை அறி திரேம். அப்பொழுது காற்றடிப்பதில்லை. யாண்டும் புழுக்கம். கிட்டத்தட்ட நீருக்குள் அமிழ்த்தி வைத்த நிலைக்கொப்பாக அது இருக்கிறது. மனிதன் அப்போது திணறுகிருன். அந்த நெருக்கடியிலே ஒரு சிறிதளவு மெல்லிய பூங்காற்று வீசுமாகில் மனிதனுக்கு அக்கணமே புத்துயிர் வருகிறது. அவன் ஆனந்தத்தில் மூழ்கியவனுகிருன். இத்தகைய நெருக்கடியை உண்டு பண்ணுவது புறத்தில் அமைந்துள்ள கோடை வெக்கை என்பதாம். இதற்கு ஒப்ப மனிதன் தனக்குத்தானே அகத்தில் ஒரு நெருக்கடியை உண்டுபண்ணிக் கொள்ளுகிருன். அதற்கு முகாமையாயிருப்பது கட்டிலடங்காத மனதாம். தன்னுடைய நிஜ சொரூபத்தோடு சம்பந்தப்படாத ஏதேதோ எண்ணங்களையெல்லாம் அம் மனது தோற்றுவித்துக் கொள்ளுகிறது. அது கற்பித்துக்கொண்ட சத்துருவின் உபத்திரவம், வறுமை நோய், உடலில் அமைந்துள்ள உபாதிகள், உற்ருர் உறவினர்க்கு ஏற்பட்டுள்ள குறைநிலைகள் ஆகிய துன்பங்களில் ஈடுபட்டவனுக மனிதன் துயருறுகிருன். ஆனுல் தன் பொல்லாத மனதை மனிதன் சிறிது நேரமாவது ஒதுக்கி வைப்பானுகில் தன்னுடைய நிஜ சொரூபம் தனக்கு விளங்குகிறது. ஓர் உபமானத்தின் மூலம் இந்நிலையைத் தெளிவுபடுத்துவது உசிதம். நிறை நிலா மிளிர்ந்து கொண்டிருக்கும் இரவிலே ஒரு பருவத்திலே படலம் படலமாகக் கார்மேகம் வானத்தில் சஞ்சரிக்கிறது. அங்ஙனம் சஞ்சரிக்கின்ற கார் மேகம் யாண்டும் இன்பத்துக்கு இருப்பிடமான நிலா வெளிச்சத்தை மறைத்துக்கொண்டிருக்கிறது. திடீரென்று சிறிது நேரத்துக்குக் கார்மேகம் வாராது ஒழியுமானுல் நிலா வெளிச்சத்தின் மகிமை அக்கணமே வெளியாகிறது. அதற்கு நிகராக மனிதன் போராடுகிற தன் மனதோடு தன்னை இணைத்துக் கொள்ளாது சிறிது நேரமாவது இறைவனுடைய அருளைச் சார்ந்திருக்கக் கற்றுக் கொள்வானுனல் அக்கணமே அவன் பேரானந்தத்துக்கு இருப்பிடமாகிருன். துன்பமனைத்துக்கும் மூலகாரணமாயிருக்கும் மனதை ஒடுக்க மனிதன் கற்றுக் கொள்வானுகில் அப்பொழுதே அவனுக்குச் சொந்தமாயிருக்கும் பேரானந்தத்தோடு அவன் ஒன்றுபட்டவனுகிருன் என்பது இக்கண்ணியின் உட்பொருளாம்.

8-9. கட்டுநமன் செங்கோல் கடாஅடிக்கும் கோலாக
வெட்ட வெளிப்பொருளை மேவுநாள் எந்நாளோ.

எமனுடைய பிடிகயிருனது மக்களை மரணத்தில் பிடித்துக் கட்டுகிறது. அதே கயிருனது அவன் ஊர்ந்துவரும் எருமைக் கடாவை விரட்டியோட்டும் கோலாக மாறி அமையும்படி தில்லைத் திருநட்னம் செய்கின்ற கூத்தப்பெருமானுடைய அனுக்கிரஹம் பண்ண வல்லதாகிறது. அத்தகைய அனுக்கிரஹத்துக்கு நான் அதிவிரைவில் ஆளாவேனுக என்பது இக்கண்ணியின் உட்கருத்து.

8-10. சாலக் கபாடத் தடைதீர எம்பெருமான்
ஓலக்க மண்டபத்துள் ஓடுநாள் எந்நாளோ.

சாலக்க பாடத் தடைத்தீர—மாயையின் பெரிய கதவு என்னும் தடை அகல.

சூரியப்பிரகாசமும், அமாவாசை இருளும் சேர்ந்திருக்கமாட்டா. அதேவிதத்தில் இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாயிருப்பவர்கள் மரணத்தை விளைவிக்கின்ற மாயாஜாலத்துடன் சேர்ந்திருப்பதில்லை. இதை அனுசரித்து ராமன் இருக்குமிடத்தில் காமன் இல்லை என்றும், காமன் இருக்குமிடத்தில் ராமன் இல்லை என்றும் பரமஹம்சதேவர் பகர்ந்தருளுகின்ருர்.

ஓர் அறையில் எவ்வளவு காலம் இருள் சூழ்ந்திருந்தாலும், வெளிச்சம் வந்தவுடன் இருள் அவ் அறையைவிட்டு ஓடிவிடுகிறது. அங்ஙனம் நாம் பல ஜன்மங்கள் மாயைக்கு வசப்பட்டு அல்லலுற்று வந்துள்ளோம். ஈசனருள் நமக்கு வாய்த்துவிட்டால் அந்த மாயை நம்மை விட்டு விலகி விடுகிறது. மாயை தம்மை விட்டு ஓடும் நாள் ஈசனருள் தமக்கு வந்து வாய்க்கும் நாளாகும். அந்த நாள் எந்நாளோ என்று தாயுமானவர் வினவுகின்ருர்.

மதமாற்றத்துக்கும் கீழ்மைக்கும் யார் பொறுப்பாளி?

(சுவாமி விவேகானந்தர்)

இந்தியாவிலுள்ள ஏழை மக்களுக்கிடையில் முகமதியர்கள் அதிகம் இருக்கின்றனர்கள். அதற்குக் காரணம் என்ன? கத்தியையும் வாளையும் காட்டிப் பயமுறுத்தி இந்துக்கள் முகமதியர்களாக மாற்றப்பட்டார்கள் என்று சொல்லுவது அறிவுடைமையாகாது. நம் நாட்டிலுள்ள ஜமீன்தார்களிடமிருந்தும் புரோகிதர்களிடமிருந்தும் சுதந்திரம் பெற்று வாழ்வதற்காகத்தான் இந்துக்கள் முஸ்லீம் மதத்துக்கு மாறினர்கள். வங்காளத்தில் விவசாயிகளுக்கிடையில் இந்துக்களைவிட முஸ்லீம்கள் அதிகமாகவிருப்பதைக் காணலாம். அதற்குக் காரணம் என்னவென்று தெரியுமா? அக்காலத்தில் விவசாயிகளுக்கிடையிலிருந்த ஜமீன்தார்களுடைய கொடுமையிலிருந்து விலகிக் கொள்வதற்காக இஸ்லாம் மதத்துக்கு மாறியுள்ளார்கள்.

தோட்டிகளையும் பறையர்களையும் இன்றைய இழிநிலைக்குக் கீழே இறக்கிக்கொண்டு வந்தவர்கள் யார்? அவர்கள் கீழ்மை அடைவதற்குப் பொறுப்பாளிகள் யார் என்னும் கேள்வி எழுமாயின் அதற்கு விடை வருமாறு: அவர்கள் கீழ்நிலை அடைதற்கு ஆங்கிலேயர்கள் பொறுப்பாளிகள் அல்லர். அவர்கள் கீழ்நிலைக்கு வந்ததற்கு நாமே பொறுப்பாளிகளாவோம். நம்முடைய துன்பத்துக்கும் நம்முடைய கீழ்மைக்கும் நாம் தாம் பொறுப்பாளிகள். மதத்தில் போலிகளும், அவநம்பிக்கை உடையவர்களும் இருக்கின்றனர்கள். அத்தகைய நயவஞ்சகர்கள் மதத்தின் உட்கருத்தை வலியுறுத்தாமல் வெளி ஆசாரங்களைப் பிரமாதப்படுத்திச் சுயநலத்தை வளர்ப்பவர்களாகவிருக்கிறர்கள். அவர்கள் பாரமார்த்திகம், வியவகாரிகம் என்ற கொள்கைகளின் வடிவங்களில் கொடுமையான செயல்கள் பலவற்றை உருவாக்கியுள்ளார்கள். அவை அவர்களுடைய குற்றங்களாகும்.

ஏழைகள் என்று கூக்குரலிடுவதற்குப் பலர் இருக்கின்றனர்கள். ஏழைகளின் நலனுக்காக ஏதாவது செய்வதற்குச் சங்கங்கள் எத்தனை இருக்கின்றன? இந்தியாவிலுள்ள லக்ஷக்கணக்கான ஏழைகளுடைய துன்பத்திலும் துக்கத்திலும் பங்குகொண்டு, உண்மையாகவே உருகி அழுபவர்கள் எத்தனை பேர் இருக்கிறர்கள்? மக்கள் இனத்துக்காகப் பாடுபடும் மக்கள் எத்தனை பேர் இருக்கிறர்கள்? மனிதர்களாகப் பிறந்துள்ள நாம் மனிதர்களுக்காக உருகாவிட்டால் நம்மை மனிதர்கள் என்று சொல்லிக்கொள்ள முடியுமா? பசியின்றி, பட்டினியின்றி மக்களினம் வாழ நாம் என்ன செய்கின்றேம்? மக்களையெல்லாம் மகேசுவரன் நிலைக்கு உயர்த்த நாம் என்ன செய்கின்றேம்? இவ்வுலக வாழ்வை நன்கு வாழ்வதற்கும், இவ்வுலக வாழ்வைக் கடந்து அப்பால் செல்லுவதற்கும் இந்து மதம் சிறந்த வழிகாட்டியாகவிருக்கின்றது. இந்துமதத்தைச் சரியாக அறிந்து அதை மக்களுக்குப் புரியும்படி செய்வது இந்துவினுடைய பொறுப்பாகும். இதைச் செய்யாததால் இந்து மதத்திலிருந்து மற்ற மதங்களுக்கு மக்கள் போகின்றனர்கள்.

பொதுவாக நம்மவர்களிடையே பேச்சு அதிகம். செயல் குறைவு. கிளிப்பிள்ளை போன்று புத்தகத்தில் படித்தவற்றையும், பிறரிடமிருந்து கேட்டவற்றையும் பேசிக்கொண்டிருப்போம். நமக்குப் பேசத்தான் தெரியும். நமக்கு எதையும் செயல்படுத்தத் தெரியாது. அதற்குக் காரணம் என்ன தெரியுமா? நம்மிடம் போதுமான உடல் பலம் இல்லை. நம்முடைய துன்பத்துக்கு நம்மிடமுள்ள உடல் பலஹீனமே காரணமாகும். மேலும் நாம் சோம்பேறிகளாகவிருக்கின்றேம். செயல்புரியவேண்டும் என்ற உற்சாகம் நம்மிடம் இல்லை. நம்மிடம் ஒற்றுமையும் இல்லை. ஒருவரை ஒருவர் நேசிக்கும் தன்மையும் இல்லை. நம்மிடம் சுயநலம் மிகவும் அதிகம். கீழ்நிலையிலுள்ள மக்களை மேல் நிலையிலுள்ள மக்கள் புறக்கணிப்பது மதமாற்றத்துக்கு ஒரு காரணமாகும்.

சுவாமி விவேகானந்தரின் கடிதம்

(சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் வெற்றியடைந்த செய்தியை அறிந்த சென்னை இந்துக்கள் விவேகானந்தருக்கு அளித்த பாராட்டுரைக்கு அவர் எழுதிய பதில் கடிதம்)

[370 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நவீன விஞ்ஞான ஆராய்ச்சி மதக்கோட்பாடுகளைப் பலமாகத் தாக்குகின்றது. அத்தாக்குதலைச் சமாளிக்க முடியாத மேல்நாட்டுப் பழைய மதக்கோட்பாடுகள் சிதைந்து மறைகின்றன. விசுவாசம் அல்லது நம்பிக்கையின் அஸ்திவாரத்திலும் பெரும்பான்மையான மக்கள் வாக்குரிமைகளின் அஸ்திவாரத்திலும் அமைந்துள்ள கிறிஸ்துவ சமயம் என்னும் பீங்கான் சாமான் நவீன விஞ்ஞானம் என்னும் சம்மட்டி அடிகளால் துகள் துகளாகிக்கொண்டு இருக்கிறது. அலைபோன்று எழுந்து ஆக்கிரமித்து வரும் நவீனச் சிந்தனையுடன் எவ்வாறு இணங்கிப் போவது என்பதை அறியாமல் மேல்நாட்டுச் சமய சித்தாந்தமானது விழித்துக் கொண்டு இருக்கிறது. நாளுக்கு நாள் முன்னேறிக்கொண்டிருக்கும் விஞ்ஞானச் சிந்தனையானது பெரும்பாலான கிறிஸ்துவ சமய நூல்களை உபயோகமற்ற பொருள்களைப்போடும் அறைக்கு அனுப்பிக்கொண்டிருக்கின்றது. சிந்தனைசக்தியுள்ள மேல்நாட்டவர்களுள் பெரும்பாலோர் கிறிஸ்துவ சமயத்துடன் உள்ள தொடர்வை அறுத்துக் கொண்டு அமைதியற்ற கடலில் தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள். வேதத்தின் ஒளி பெற்றுத் திகழும் ஹிந்துமதமும் புத்தமதமும் மறுமலர்ச்சியடைந்து வருவதைக்கேட்க ஆவலாக இருக்கிறதன்றோ!

மேல் நாட்டு நாஸ்திகனும் அக்ஞேயவாதியும் அமைதியற்றவர்களாக இருக்கிறார்கள். கீதையும் தம்மபதமும்தாம் தங்கள் மனம் நிலைபெறுவதற்குரிய இடங்கள் என்று கருதுகின்றனர்.

காலம் மாறிக்கொண்டிருக்கிறது. அந்நியர்கள் பழைய இந்துமதத்தை அழிப்பதைத் துக்கக்கண்ணீருடன் பார்த்த ஹிந்து இப்பொழுது நவீனச்சிந்தனையாளருடைய அறிவு ஒளியினால் அந்நியர்களுடைய மதங்கள் மறைந்து இந்துமதம்தன் முழுப்பலத்துடன் இருப்பதைக் காண்கின்றான். நவீனச்சிந்தனையின் ஒளியினால் பழைய மதங்கள் இருக்கின்ற இடம் தெரியாமல் அழிகின்றன; அல்லது இந்துமதத் திட்டத்தை ஒட்டி அவைகள் மாறி வருகின்றன. இதைக் கண்டு ஹிந்து சமாதானம் அடைகின்றான்.

தன்னுடைய சாஸ்திரத்தைத் திருத்தி அமைக்க வேண்டியதில்லை என்பதை ஹிந்து அறிந்து கொண்டான். தன் மதத்தைக் காப்பாற்ற விவேகத்தை அழித்து விட வேண்டும் என்றும் அவன் கூறுவதில்லை. தன் மதத்தை விளக்கும் சுருதிகளில் பலஹீனமாயுள்ள பகுதியும் இருக்கின்றது. பலஹீனர்களுக்கு உதவும் பொருட்டு அக்கோட்பாடு சுருதிகளில் சேர்க்கப்பட்டுள்ளது. பழங்கால ரிஷிகளுக்கு நாம் நன்றி செலுத்தக் கட்மைப்பட்டிருக்கிறோம். அருந்ததி நியாயம் ஒன்று உண்டு. அதைச் சற்று விளக்குவோம். மணப்பெண் கணவன் வீட்டுக்கு அழைத்து வரப்படுகிறாள். கணவன் அருந்ததி என்னும் சிறிய நக்ஷத்திரத்தை அவளுக்கு முதலில் காட்டுகிறான். அச்சிறிய நக்ஷத்திரத்தை அவளுக்குக் காட்டுவதற்கு அந்த நக்ஷத்திரமிருக்கும் திசையிலுள்ள ஒரு மரக்கிளையைப் பார்க்கச் சொல்லுகின்றான். அம் மரக்கிளைக்கு அப்பாலுள்ள ஒரு பெரிய பிரகாசமுள்ள நக்ஷத்திரத்தைப் பார்க்கும்படி அவளிடம் கூறுகின்றான். இப்படிப் படிப்படியாக அவள் கண்கள் அருந்ததி நக்ஷத்திரத்திடம் செல்லுமாறு தூண்டுகின்றான். தெரிந்த ஸ்தூலப் பொருளைக்கொண்டு சூக்ஷ்மப் பொருளை அறிந்து கொள்ளும் இவ்வெளிய முறைக்கு அருந்ததி நியாயம் என்று பெயர்.

சர்வ வியாபகமுள்ளதாயும் எல்லாக் காலத்துக்கும் ஏற்புடையதாயும் உள்ள சமயத்தை நம் பழங்கால ரிஷிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். தற்கால நவீன விஞ்ஞானம் ஜட உலகில் அறிந்துவரும் உண்மைகளெல்

லாம் அவர்கள் கண்டுபிடித்த மதத்தில் அடங்கி இருக்கின்றன. விஞ்ஞான வளர்ச்சியினால் குறுகிய சமயங்களெல்லாம் அழியும் நிலையில் இருக்கும்பொழுது இந்து ஒருவன் தன் சமயத்திலுள்ள உண்மைகளுக்கு விஞ்ஞானம் ஆராய்ச்சி விளக்கம் தந்து கொண்டிருப்பதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றான். பழங்கால ரிஷிகள் தங்கள் உள்ளத்தை உயர் நிலைக்குக் கொண்டுபோய்க் கண்ட உண்மைகளில் சிலவற்றை விஞ்ஞானம் சாதாரண அறிவுக்கு விளங்கும்படி செய்து கொண்டிருக்கிறது என்பதை இந்து அறிகின்றான்.

இந்து ஒருவன் தன் மதத்திலுள்ள எதையும் விட்டுவிட வேண்டியதில்லை. புதியது எதையும் அவன் தேடிக்கொண்டு போக வேண்டியதும் இல்லை. முன்னோர்கள் கண்டுபிடித்துள்ள உண்மைகளிலிருந்து சில வற்றை எடுத்துத் தன் தேவைக்கு உபயோகித்துக் கொண்டால் போதும். அப்படிச் செய்யும் பொழுது அவன் மேன்மேலும் முன்னேறிக்கொண்டே வருவான். அப்படிச் செய்வதே மறுமலர்ச்சியாகும்.

வங்கநாட்டு இளைஞர்களே! உங்களை நான் கனிப்பட்ட முறையில் வேண்டிக் கொள்கின்றேன். வெளிநாட்டவர்கள் ஹிந்துக்களை எத்தீமைகளுக்காகத் திட்டுகின்றார்களோ அத்தீமைகளுக்கு உண்மையில் நாமே காரணம் என்பதை வெட்கத்துடன் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். முற்றிலும் எழுச்சி அடைந்திருக்கிறோம். தெய்வத்தின் அருள் துணைக்கொண்டு நம்மை நாம் பரிசுத்தர்களாக்கிக் கொள்வோம். சனாதன தர்மம் உபதேசிக்கின்ற லக்ஷியங்களை இந்தியா முழுவதும் அடைவதற்கு நாம் வேண்டிய உதவி செய்வோம்.

முதலில் பொறாமையை ஒழித்துக் கட்டுவோம். யார் மீதும் பொறாமைப்படாதீர்கள். நல்ல செயல் செய்யும் ஒவ்வொருவருக்கும் கைகொடுக்க ஆயத்தமாக இருங்கள். மூவுலகங்களுக்கும் உங்களுடைய நல்லெண்ணத்தை வழங்குங்கள். சனாதன தர்மத்தை உறுதியாகப் பற்றி நடப்போம். ஹிந்துக்கள், பௌத்தர்கள், ஜைனர்கள் ஆன்ம நெறியைப் பின்பற்றுபவர்கள் ஆகிய அனைவருக்கும் அடிப்படையாகவிருப்பது சனாதன தர்மமாகும். ஆத்மா அழிவற்றது; பிறப்பற்றது; எங்கும் வியாபித்துள்ளது; நித்தியமானது. இந்த ஆத்மனின் பெருமைகளை வேதத்தாலும் விளக்க முடியாது. அவ் ஆத்மனின் பெருமைக்குமுன் சூரியனும் சந்திரனும் ஒரு துளிக்குச் சமானமாகும். ஒவ்வோர் ஆணும் பெண்ணும் புழுவிலிருந்து தேவர்கள் வரையிலும் ஆத்மனின் தோற்றமாகும். அப்பொருள்களுக்கிடையில் சொருபத்தில் வித்தியாசம் இல்லை. அவைகளுக்கிடையிலுள்ள பண்பாட்டிலும் வளர்ச்சியிலும்தான் வித்தியாசம் உண்டு.

ஆத்மனின் சக்தி எல்லையற்றது. அவ் எல்லையற்ற சக்தியை ஜடப்பொருளின்மீது பிரயோகித்தால் பிரபஞ்ச அபிவிருத்தி உண்டாகிறது. அவ்எல்லையற்ற சக்தியைச் சிந்தனையின்மீது பிரயோகித்தால் அறிவு வளர்ச்சி ஏற்படுகிறது. அவ்எல்லையற்ற சக்தியை நம்மீது பிரயோகித்தால் நாம் தெய்வங்களாகின்றோம்.

முதலில் நம்மை நாம் தெய்வங்களாக ஆக்கிக்கொள்வோம். பிறகு மற்றவர்கள் தெய்வங்களாவதற்கு உதவுவோம். முதலில் நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வோம். பிறகு உலகத்தை ஆயத்தப்படுத்துவோம். இது நம்முடைய கொள்கையாகவிருக்க வேண்டும். மனிதனைப் பாவி என்று சொல்லாதே. தெய்வம் என்பதை அவனுக்கு எடுத்துச் சொல்லு. பேய் ஒன்று இருப்பதாக வைத்துக்கொண்டாலும் அதைப்பற்றி நாம் நினைக்கக் கூடாது. எப்பொழுதும் நாம் கடவுளையே நினைத்துக்கொண்டிருக்க வேண்டும். பேய் பிசாசைப்பற்றி நினைப்பது நம் வளர்ச்சிக்குத் துணைபுரியாது. உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்பது கோட்பாடு. எண்ணிய முடித்தல்வேண்டும் நல்லவையே எண்ணவேண்டும். கீழான எண்ணம் வேண்டாம். திண்ணிய நெஞ்சமும் தெளிந்த நல்அறிவும் நமக்கு உண்டாக நாம் யாண்டும் தெய்வச் சிந்தனையில் மூழ்கி இருக்கவேண்டும். (தொடரும்)

ஆத்மசொரூப விளக்கம்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1976 ஆம் ஆண்டில் சேலம் அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[376 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஜாக்ரதா அவஸ்தையில்தான் நாம் சாதனைகள் செய்ய முடியும். சாதனை பூர்த்தியாகும் வரையில் பிறப்புக்கள் எடுத்தாகவேண்டும். ஒவ்வொரு பிறப்பிலும் பிரம்மதேவன் மனத்தோற்றத்தில் நாம் ஒரு கிரணமாக அமைந்திருக்கின்றோம். ஜாக்ரதமும் சொப்பனம் போன்று நிலையற்றது. ஜாக்ரதமும் சொப்பனமும் எத்தகையவை என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஓர் உபமானக் கதையில் கூறியுள்ளார். நல்ல மனப்பான்மையுடைய தம்பதிகள் இருந்தார்கள். அவர்களுடைய மணத்துக்குப் பிறகு இல்லறத்தை முறையாக நடத்தி வந்தார்கள். மணமாகிச் சில ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களுக்கு ஒரு மகப்பேறு வாய்த்தது. அம்மகவு சத்புத்திரனாகவும், நல்ல சம்ஸ்காரங்களோடு கூடியவனாகவும் இருந்தான். எட்டு வயது வரையிலும் நோய்வாய்ப்படாது வாழ்ந்து வந்தான். சிறந்த புத்திமான் என்று அவனை எல்லாரும் போற்றினார்கள். எட்டாவது வயதில் அவன் நோய்க்கு ஆளானான். பெற்றோர்கள் சிறந்த சிகிச்சை முறையைக் கையாண்டார்கள். எனினும் அது பலன் அளிக்கவில்லை. ஒரு நாள் நடு இரவில் அவன் மாண்டுபோனான். அவனுடைய தாய் கதறிப் பதறி அழுதுகொண்டு தன் கணவனை எழுப்பினாள். கணவன் எழுந்திருந்து சிந்தனையற்றவனாகவும் தளர்ச்சியுற்றவனாகவும் உட்கார்ந்திருந்தான். மகன் மாண்டுபோன செய்தியை மனைவி அவனுக்குக் கூறினாள். அதைக்கேட்டும் அவன் முன்போலவே அமர்ந்திருந்தான். ''என்நெஞ்சம் உருகுகின்றது. உங்கள் நெஞ்சம் உருகவில்லையா? உங்களுக்கு உணர்ச்சி இல்லையா?'' என்று மனைவி மீண்டும் அவனைக் கேட்டாள். அப்பொழுதுதான் அவனுக்கு முழுவிழிப்பு வந்தது. அவன் பகர்ந்ததாவது: ''எனக்கு இப்பொழுது ஓர் ஐயம் ஏற்பட்டுள்ளது. இப்பொழுதுதான் நான் ஒரு கனவு கண்டேன். அக்கனவில் நான் ஓர் அரசனாக இருந்தேன். எனக்கு ஏழு புத்திரர்கள் வாய்த்திருந்தார்கள். ஒவ்வொரு புத்திரனும் ஒவ்வொரு கலைஞானத்தில் சிறந்தவனாகவிருந்தான். எல்லாக் குடிமக்களும் அவர்களுடைய கலை ஞானங்களைப் போற்றி ரசித்துக் கொண்டிருந்தார்கள். நானும் ரசித்துக்கொண்டிருந்தேன். நீ என்னை அச்சொப்பனத்திலிருந்து கலைத்துவிட்டாய். அவ்வேழு புத்திரர்களும் மறைந்து போய்விட்டார்கள். நீ ஒரு புத்திரன் போய்விட்டான் என்று சொல்லுகின்றாய். ஏழு புத்திரர்களோடு வாழ்ந்த வாழ்க்கையைச் சொப்பனம் என்று தள்ளுவதா? ஒரு புத்திரனோடு வாழ்ந்த வாழ்க்கையைச் சொப்பனம் என்று தள்ளுவதா? எதைத் தள்ளுவது என்று தெரியாது நான் திகைத்துக்கொண்டிருக்கின்றேன்.''

ஜாக்ரதா அவஸ்தையும் சொப்பனம் போன்றதுதான் என்பதை அறிந்துகொள்வதற்குச் சொப்பனம் மிகவும் பயன்படுகிறது. பூலோகத்தில் மரணம் அடைகின்றவர்கள் வேறு ஓர் உலகத்தில் இருக்கின்றார்கள் என்று புராணம் சொல்லுகிறது. உண்மையில் அவர்கள் தூங்குகின்ற நிலையிலேயே இருக்கின்றார்கள். சொப்பனத்தில் நாம் காண்கின்ற பொருள் மங்கலாகத் தெரிகின்றது. விழித்துக்கொண்டவுடன் நாம் கனவில் கண்டவர்கள் யாவரும் மறைந்துபோகின்றார்கள். ஜாக்ரதா அவஸ்தையில் உள்ள தெளிவு சொப்பனத்தில் இல்லை. அதுபோன்று பூலோகத்தில் உள்ள தெளிவு பிதுர்லோகத்தில் இல்லை.

ஆத்ம சாதனத்துக்குப் பூலோகம் நன்கு பயன்படுகிறது. சொப்பனம் காண்பதற்கு நிகராகப் பிதுர்லோகம் இருக்கின்றது. இறந்து போனவர்கள் ஒரு லோகத்தில் இருக்கிறார்கள் என்பதும் ஆங்கு அவர்கள் உறவாடுகிறார்கள் என்பதும் நம் கற்பனை. சொப்பனத்தில் நாம் இப்பொழுது பெற்றுள்ள சரீரம் இருப்பதில்லை. மனமும்

ஒடுங்கிய நிலையில் இருக்கிறது. செடி, கொடி, மரம் முதலியன தோன்றுநிலையில் இருக்கின்றன. அதே போன்று மரணத்தில் ஜீவன் தோன்று நிலையில் இருக்கின்றான். தக்க சூழ்நிலை உண்டாகும்பொழுது ஜீவன் உடல் எடுத்துப் பூலோகத்திற்கு வருகின்றான். பிதுர்லோகத்தைப் பற்றிப் பெரியதாகக் கற்பனை செய்ய வேண்டாம்.

கந்தர்வ லோகத்தைப் பற்றியும் பேசப்படுகிறது. சில சமயங்களில் வானத்தில் மாளிகைகள் தென்படுகின்றன. அக்காட்சியைப் பார்க்கின்றவர்கள் அதைக் கந்தர்வ லோகம் என்று கருதுகின்றார்கள். அம்மாளிகை ஒருவனுக்குத் தெரிவது போன்று மற்றொருவனுக்குத் தென்படுவதில்லை. தலைக்குப் பித்தம் ஏறிவிட்டால் பகலில் நட்சத்திரம் தென்படும். இது மனதினுடைய குறைநிலை. மனதின் நிறை நிலையில் இத்தகைய தோற்றங்கள் தென்படா. மயங்கி இருக்கின்ற நிலையில், சலனப்பட்டுக் கொண்டு இருக்கின்ற நிலையில், அக்ஞானத்தில் தத்தளித்துக்கொண்டு இருக்கின்ற நிலையில் புறத்தில் சில காட்சிகள் தென்படும். அக்காட்சிகளுக்கு நாம் மதிப்புத் தரக்கூடாது. நீரில் உன்னுடைய நிழலைக் காண்பதற்கு நிகராகக் கந்தர்வ லோகக் காட்சி உனக்குத் தென்படுகிறது. நீரில் அசைவு உண்டாகும் பொழுது நீரில் தென்படுகின்ற பிம்பமும் அசைகின்றது. தடாகம் அசைவற்றிருப்பதாக வைத்துக் கொள்வோம். தடாகத்திற்குப் பக்கத்தில் உள்ள மரம், செடி, கொடிகளின் பிம்பங்களும் அசையாதிருக்கின்றன. தேங்கி அசைவற்றுள்ள நீரில் சந்திரனுடைய பிம்பம் மற்றொரு சந்திரனைப் போன்று அழகாகத் தென்படுகிறது. காற்றடித்தால் தடாகத்தில் சலனம் உண்டாகின்றது. தடாகத்தில் உள்ள பிம்பங்கள் அசைகின்றன. நீரில் சலனம் உண்டாகும் பொழுது அதில் தென்படுகின்ற பிம்பங்கள் அசைகின்றன. அப்பொழுது அசையாத பொருள்களும் அசைவது போல் தென்படுகின்றன. நீரில் சலனமுண்டாகும் பொழுது பிம்பத்தை உள்ளபடி காணமுடிவதில்லை. இமயமலையிலுள்ள மானசரோவரத்தில் இந்தக் கோட்பாடு நன்கு விளக்கப்படுகிறது. ஆங்குக் காலை ஒன்பது மணி வரை காற்று வீசுவதில்லை. அப்பொழுது மானசரோவரம் வரைந்த படம்போன்று அசைவற்றிருக்கிறது. மானசரோவரம் மனோ தத்துவத்துக்கு விளக்கமாக அமைந்திருப்பதால் அதற்கு அப்பெயர் வைத்துள்ளார்கள். சரோவரம் என்றால் தடாகம் என்பது பொருள். மனதை மானசரோவரம் போன்று தூயதாக்கினால் மனதில் பர தத்துவத்தினுடைய காட்சியைப் பெறலாம். மானசரோவரத்தில் கயிலையினுடைய பிம்பம் தெளிவாகத் தெரிவது போன்று தூய மனதில் பரத்தின் காட்சி தெளிவாகத் தென்படுகிறது. சேற்று நீரில் தரையிலுள்ள பொருளொன்றும் தென்படாது. அங்ஙனம் மாசுபடிந்த உள்ளத்தில் ஆத்ம சொரூபம் தென்படுவதில்லை. மாசுபடிந்துள்ள உள்ளம் உண்மையை உள்ளபடி காட்டித் தருவதில்லை. மாசுபடிந்த உள்ளம் தன்னியல்பிற்கேற்பப் புறப்பொருளைச் சிருஷ்டி பண்ணுகிறது. உண்மையில் புறத்தில் அத்தகைய காட்சி இல்லை. இத்தத்துவ உண்மையைப் புராண பூர்வமாகச் சொல்லுமிடத்துக் கந்தர்வ லோகம் என்று சொல்லுகிறார்கள். தத்துவ ஞானிகளுக்குக் கந்தர்வலோகம் மனோ சிருஷ்டியாகும்.

பிரம்மலோகத்திற்கு ஒரு சிறப்புத் தரப்பட்டிருக்கிறது. கிரம முக்திக்குப் போகின்றவர்கள் யாவரும் பிரம்மலோகத்தில் தவத்திலிருக்கின்றார்கள். பிரம்மதேவனுடைய ஆயுள் பூர்த்தியாகும் வரையில் அவர்கள் ஆங்குத் தவம் செய்துகொண்டிருப்பார்கள். ஒவ்வொரு பிரம்மதேவனும் ஒவ்வொரு சிருஷ்டிக்கு முதல் கர்த்தாவாக அமைகின்றான். பிரம்மாவினுடைய காலம் அகண்டாகாரத்தில் ஓடுகிறது. ஜீவர்களுடைய தொகை பிரம்மதேவனாவான். உடல் முழுவதும் உயிர்த்தத்துவங்கள் இருக்கின்றன. அவ்வுயிர்த் தத்துவங்களின் தொகையை உடல் என்று சொல்கிறோம். உடலைப் பிரம்மதேவனாக வைத்துக்கொண்டால் உடலிலுள்ள ஒவ்வோர் உயிர்த்தத்து

வமும் ஜீவாத்மா ஆகிறது. நம் சரீரத்தில் ஓர் உயிர்த்தத்துவம் மடிகின்றபொழுது மற்றோர் உயிர்த்தத்துவம் வடிவெடுக்கிறது. பிண்டத்தில் நிகழ்வதுபோன்று அண்டத்திலும் நிகழ்கிறது.

நம்முடைய சரீரம் பிண்டம். பிரம்ம தேவனுக்கு எது சரீரமாகவிருக்கிறதோ அது அண்டம். அனந்தங்கோடி ஜீவர்கள் பிரம்மதேவனுடைய சரீரமாகவிருக்கின்றனர்கள். நம் சரீரத்தில் உயிர்த்தத்துவம் இருப்பதுபோன்று பிரம்மதேவனுடைய சரீரத்தில் ஜீவர்கள் இருக்கின்றனர்கள். பிரம்ம தேவனுக்கு முக்தி வருகின்றபொழுது பிரம்மலோகத்தில் தவத்திலிருப்பவர்கள் யாவரும் கிரம முக்திக்குப் போகின்றனர்கள். பிறகு நெடுங்காலம் ஓய்ந்த நிலை உண்டாகிறது. அடுத்து மற்றொரு பிரம்ம தேவன் மகாவிஷ்ணுவின் உந்திக் கமலத்திலிருந்து வெளிவருகின்றான். அந்தப் பிரம்ம தேவன் மற்றோர் உலகைச் சிருஷ்டிக்கின்றான். பூர்வஜன்மத்தில் முக்தி அடையாதவர்கள் பிரளய காலத்தில் தோன்றா நிலையிலிருந்து சிருஷ்டியில் பிறப்பெடுத்து வருகிறார்கள். இங்ஙனம் ஜீவர்களாகிய நாம் பிரம்மாக்கள் காலத்தில் வளர்ந்திருக்கிறோம். ஆகையால் நாம் சாமானியமானவர்கள் அல்லர். நம்முடைய பிறப்பைக் கணக்கில் எடுத்தால் அது கணக்கிலடங்காததாகப் போய்க்கொண்டிருக்கும். அரசாங்க அலுவலகத்திலுள்ள வேலைக்காரன் சொல்லுவதாவது: "நான் இவரைப்போன்று எத்தனையோ கவர்னர்களைப் பார்த்திருக்கின்றேன்." நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை கவர்னர் மாறி அமைந்து கொண்டேயிருப்பார். ஆனால் வேலைக்காரனோ அங்கேயே இருந்து வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருக்கின்ற கவர்னர்களைப் பார்த்துக்கொண்டே இருப்பான். அவன் போன்று நாம் பல பிரம்மாக்களைப் பார்த்திருக்கின்றோம். எத்தனையோ பிறவிகள் எடுத்து அப்பிறவிகளிலெல்லாம் நம்மைப் பக்குவப்படுத்தி வந்திருக்கின்றோம். ஜீவன் முக்தி அடையாது கிரம முக்திக்குத் தகுதியாகும்பொழுது பிரம்மலோகத்திலிருந்து தவம் செய்து கொண்டிருக்கின்றோம். எந்தப் பிரம்மா காலத்தில் நாம் பிரம்மலோகத்தில் தவம் செய்கின்றோமோ அந்தப் பிரம்மதேவன் முக்தி அடையும் பொழுது நாமும் முக்தி அடைகின்றோம். பிரம்மலோகத்தில் தபஸ் செய்வதைவிட இப்பூலோகத்தில் நாம் ஆத்ம சாதனையில் ஈடுபட்டிருப்பது தலைத்தரமானது. அதை முன்னிட்டே 'எண்ணரிய பிறவிகளில் மானுடப் பிறவிதான் யாதினும் அரிது அரிது காண்' என்னும் கோட்பாடு வந்துள்ளது. மானுடப் பிறவியில் ஆத்ம தத்துவ விசாரம் செய்து அந்தக்கரணத்தைச் சுத்திசெய்து நித்திய, அநித்திய வஸ்துவின் தரத்தை அறிந்து நித்தியத்தில் நிலைபெற்றவர்களாக இருப்போமானால் நாம் அடைந்த பண்பாட்டுக்கு நிகராக எந்த யோகமும் ஈடாகாது.

மானுட ஜன்மம் அத்தகைய சிறப்புடையது. கிடைத்தற்கரிய மானுடப் பிறவியைப் பெற்றான பிறகு இம்மானுடப் பிறவியைப் பரதத்துவத்தை அறிதல் பொருட்டு ஈடுபடுத்தாது இன்று இருந்து நாளைக்கு அழிந்துபோகும் சுகபோகத்தில் ஈடுபட்டுக் காலத்தை விரயம் செய்யலாகாது. மானுடப் பிறவியை எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்பது தெரியுமா? 'யதாதர்சே ததா ஆத்மனி' என்பது உபநிஷதம். வேதாந்தம் தர்பணம் என்று சொல்லப்படுகிறது. கண்ணாடியில் நாம் பிம்பத்தைக் காண்கின்றோம். அதற்கு நிகராக அந்தக்கரணத்தின் பரிபாகத்துக்கு ஏற்ற பிரகாரம் உலகம் நமக்குத் தெளிவுபட்டதாகத் தென்படுகிறது. மனம் மலினப் பட்டு வர வர உலகை மயக்க நிலையிலிருந்து பார்க்கின்றோம். மனதைச் சரியாகக் கையாண்டால் மனதினுடைய பரிபாகத்துக்கேற்றவாறு இவ்வுலகக் காட்சி மாறி அமைகின்றது.

பாமரர்களுக்கு விளங்குகின்ற பாங்கில் மகாபாரதம் தத்துவத்தை விளக்குகின்றது. நல்லியல்பு படைத்தவர்களுக்குச் சான்றாகப் பாண்டவர்கள் விளங்குகின்றனர்கள். அசுர இயல்பு படைத்தவர்களுக்குச் சான்றாகக் கௌரவர்கள் விளங்குகின்றனர்கள்.

பாண்டவர்களும் கௌரவர்களும் சகோதரர்களாவார்கள். உலகத்திலுள்ள நல்லவர்களும், கெட்டவர்களும் பரமாத்மாவிடமிருந்து வந்தவர்கள். பரமாத்மாவிடமிருந்து வந்தவர்களாகையால் அவர்கள் ஒருவருக்கொருவர் வேற்றார் அல்லர். பாண்டவர்களும் கௌரவர்களும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தெய்வ இயல்பும் அசுர இயல்பும் ஒரே மனிதனிடத்து அமைந்திருக்கின்றன. பாண்டவர்களும் கௌரவர்களும் துரோணாச்சாரியர் என்னும் ஒரே குருவிடம் பயிற்சி பெற்றார்கள். பாண்டவர்களும் கௌரவர்களும் ஒரே குடும்பத்தில் பிறந்து ஒரே சூழ்நிலையில் வாழ்ந்து வந்தார்கள். ஒரு சமயம் பாண்டவர்களில் மூத்தவரான தர்மர் உலகத்தில் கெட்டவன் ஒருவனைப் பார்த்துக் கொண்டு வரும்படி அனுப்பப்பட்டார். கௌரவர்களில் மூத்தவனான துரியோதனன் அதே சமயத்தில் அதே உலகில் நல்லவன் ஒருவனைப் பார்த்துத் தேடிக் கொண்டுவரும்படி அனுப்பப்பட்டான். தர்மர் கெட்டவனைத் தேடிக்கொண்டு புறப்பட்டுப் போனார். புறத்தோற்றத்தில் கெட்டவன் போன்று தென்பட்ட மனிதனிடம் தர்மர் சிநேகம் வைத்துப் பழகி வந்தார். புறத்தோற்றத்தில் கெட்டவனாகவிருந்தபோதிலும் உள் அமைப்பில் அவன் நல்லவனாகவே இருந்தான். உலகத்திலுள்ள பலருடன் தர்மர் சிநேகம் வைத்துப் பழகிவந்ததில் யாவரும் நல்லவர்களாகவே இருந்ததைப் பார்த்தார். எனவே அவர் உலகில் யாரும் கெட்டவர்கள் இல்லை என்ற முடிவுடன் வந்தார். அதே உலகிலுள்ள மக்களிடம் இணக்கம் வைத்துப் பழகிப் பார்த்து விட்டு துரியோதனன் நல்லவர்களே இல்லை என்ற முடிவுக்கு வந்தான். யுதிஷ்டிருடைய முடிவு இவ்வுலகத்தில் கெட்டவர்களே இல்லை என்பதாகும். நல்லவர்களே இல்லை என்பது துரியோதனுடைய முடிவு. ஓர் உலகம் ஒரே சமயத்தில் ஒருவருக்கு நல்லதாகவும் மற்றொருவருக்குக் கெட்டதாகவும் விளங்குகிறது. இவ்வுண்மை நமக்கு மேலும் விளங்குவதற்கு மற்றோர் உதாரணம் எடுத்துக்கொள்வோம். ஒரே மண்ணில் பக்கம் பக்கமாகப் புகையிலையையும் கரும்பையும் பயிரிடுவதாக வைத்துக்கொள்வோம். இரண்டுக்கும் ஒரே நீரைப் பாய்ச்சுவோம். ஒரே எருவை இரண்டுக்கும் போடுவோம். இரண்டும் பெரியதானபிறகு புகையிலையை எடுத்துக் கடித்துப் பார்த்தால் அதன் எல்லாப்பகுதிகளும் கசப்பு மயமாகவிருக்கும். கரும்பை எடுத்துக் கடித்துப்பார்த்தால் அதன் எல்லாப் பகுதிகளும் இனிப்பாக இருக்கும். ஆகையினால் நலம், கேடு புறவுலகில் இல்லை. அவை நம்மிடத்தில்தான் இருக்கின்றன. நம்முடைய மனம் நல்லதாகவிருந்தால் உலகம் நல்லதாகத் தோன்றும். நம் மனம் கெட்டதாகவிருந்தால் உலகம் கேடுடையதாகத் தென்படும். மனதை நல்ல மனதாகத் திருத்தி அமைப்பது ஆத்ம சாதனமாம்.

உலகம் நல்லதாகமட்டும் தென்படுவதன்று. அதற்கு மேலும் மனிதத்தன்மையை ஞானிகள் அதனிடத்துக் காண்கின்றார்கள். ஆத்ம ஞானிகளுடைய மனம் பரிசுத்தம் அடைய அடையப் பிரபஞ்சமாக எது இருக்கின்றதோ அது தெய்வக் காட்சியாக மாறுகின்றது. பிரபஞ்சமாக விளையாடிக்கொண்டிருப்பவன் ஈசன். பிரபஞ்சத்திலுள்ள இத்தனையுமாக ஈசன் இருக்கின்றார். இதனை 'ஈசாவாஸ்யம் இதம் சர்வம்' என்று உபநிஷதம் பகர்கிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்வதாவது: ''நாராயணனே அனைத்துமாக இருக்கின்றார். புலியாக வந்திருப்பவரும் நாராயணன். மானாக வந்திருப்பவரும் நாராயணன். பசுவாக வந்திருப்பவரும் நாராயணன். பாம்பாக வந்திருப்பவரும் நாராயணன். போக்கிரியாக வந்திருப்பவரும் நாராயணன். பக்தனாக வந்திருப்பவரும் நாராயணன். ஞானியாக வந்திருப்பவரும் நாராயணன். நாராயணனே இத்தனை வடிவங்களிலும் விளையாடுகிறார். எல்லாவுயிர்களையும் நாராயணனாகக் கண்டு பழகுவதற்கிடையில் புலி நாராயணனுக்குப் பக்கத்தில் போய்விடாதே.'' மனம் முற்றும் பரிபாகம் அடைந்துவிட்டால் புலி என்ற காட்சி மறைந்துபோய்விடும். அதுவரையி

லும் புலி நாராயணனுக்கு எட்ட இருந்தே பழகவேண்டும்.

ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதரைத் தரிசிப்பதற்கு வங்காளத்திலிருந்து தமிழ்நாட்டுக்குப் பாதயாத்திரை வந்துகொண்டிருந்தார். கோதாவரிக்குப் பக்கத்தில் தண்டகாரண்யம் என்ற வனம் உண்டு. அதன்வழியாக வந்தபொழுது, 'கிருஷ்ண கிருஷ்ண, கேசவ முராரி' என்று ஆனந்தமாக நாமஜபம் செய்துகொண்டே நடந்து வந்தார். அவருடைய மனம் முழுவதும் தெய்வ சான்னித்தியத்தில் இருந்தது. அவர் ஜபம் செய்துகொண்டே நர்த்தனம் புரிந்துகொண்டு வந்தபொழுது அவருடன் புலியும் சேர்ந்து ஆனந்தமாக ஆடிக்கொண்டு வந்தது. கிருஷ்ணசைதன்யரிடம் வந்த சிஷ்யர்கள் நடுங்கிய வண்ணம் ஜபம் செய்துகொண்டு வந்தார்கள். சிஷ்யர்கள் காட்சியில் புலியாகத் தென்பட்டது ஸ்ரீ கிருஷ்ண சைதன்யருடைய காட்சியில் நாராயணனாகத் தென்பட்டது. முற்றிலும் நாம் ஆத்ம பரிபாகம் அடைந்துவிட்டால் போக்கிரிகளும் நாராயணன் சொரூபமாகத் தென்படுவார்கள். மனபரிபாகம் அடையாத நிலையில் போக்கிரியினிடத்திலும் புலியினிடத்திலும் தூரவிருந்து பழக வேண்டும். புலி நாராயணனிடத்தில் போகக்கூடாது. ஆனால் அதே சமயத்தில் புலியும் நாராயணன் என்பதை மறந்துவிடக்கூடாது. எல்லாரிடத்திலும் நாராயணன் இருக்கிறார் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் எவ்வுயிர்க்கும் நாம் தீங்கு செய்யமாட்டோம்.

யுதிஷ்டிரன் அஜாத சத்ரு. அவர் கெட்டவர்களையும் தெய்வ சொரூபமாகப் பாராட்டியதால் யாருக்கும் விரோதி அல்லர். அதனால் அவருக்கு ஒரு நஷ்டமும் ஏற்பட்டுவிடவில்லை. துரியோதனன் நல்லவர்களையும் கெட்டவர்களாகவே எண்ணி வந்ததால் அவன் ஒரு லாபத்தையும் அடைந்துவிடவில்லை. நாம் அனைத்தையும் தெய்வ சொரூபமாகக் கருதிப் பழகவேண்டும். அப்பொழுது சாதனையில் நாம் முன்னேற்றம் அடைகின்றோம். உலகத்திலுள்ள கேட்டை மனதில் வாங்கினால் துரியோதனன் போன்று நாமும் கீழ்மை அடைவோம். துரியோதனன் கேட்டையே கண்டதனால் தன்னுடைய தாயாதிகளுக்கும் கேடு செய்வதையே தன் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருந்தான். அதன் விளைவாக அவன் அழிந்தான். யுதிஷ்டிரன் நல்லதையே கண்டு பழகியதனால் ஆத்ம பரிபாகம் அடைந்து வந்தார். பூலோக வாழ்க்கையில் வந்த கஷ்டங்களிலிருந்து மனம் வேதனைப் படாது மீண்டு வந்தார். கஷ்டங்களுக்கிடையில் கஷ்டம் வந்து விட்டதே என்று எண்ணாமலிருந்தது அவர் அடைந்திருந்த மனபரிபாகமாகும்.

வனவாச காலத்தில் இமாலயத்திலிருந்தபொழுது திரௌபதி யுதிஷ்டிரனைப் பார்த்துக் கேட்டதாவது: ''தாங்கள் தர்மத்தை விட்டுப் பிசகாது நடந்து வருகின்றீர்கள். அப்படியிருந்தும் தங்களுக்கு ஏன் இவ்வளவு துயரம் வரவேண்டும்?'' யுதிஷ்டிரன் பதில் சொன்னதாவது: ''தேவி! கண்ணுக்கு எதிரில் தென்படுகின்ற இமயமலையைப் பார். அது வானளாவி வளர்ந்திருக்கிறது. சிவபெருமான் ஆழ்ந்த தியானத்தில் ஈடுபட்டிருப்பது போன்று தென்படுகின்றது. அதைப் பார்த்த மாத்திரத்தில் என்னுடைய மனம் அதீதத்துக்குச் செல்கிறது. இத்தகைய பேரின்ப வாழ்க்கையைத் துயரம் என்று எப்படிச் சொல்ல முடியும்?''

ஆத்ம பரிபாகம் அடைந்து வரவரச்சோதனைகள் சோதனைகளாகத் தென்படுவதில்லை. உலகக் கஷ்டங்கள் கஷ்டங்களாகத் தென்படுவதில்லை. ஆத்ம பரிபாகம் அடைந்தவர்கள் எல்லா நிலைகளிலும் ஈசன் தங்களோடு விளையாடி வருகிறார் என்று உணர்கிறார்கள். உண்மையில் பரம்பொருள்தாம் இத்தனை விதங்களாக விளையாடிக் கொண்டிருக்கின்றார். மனபரிபாகம் அடைந்து மூலப் பொருளை உள்ளது உள்ளபடி அறிய அறிய துயரத்தை வெல்லுகின்றோம். அப்பொழுது பிரபஞ்ச மயமான வாழ்க்கையில் எவ்வித இடைஞ்சலும் இல்லை. 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்பது அவர்களுக்கு விளங்குகிறது. வனவாச

வாழ்க்கையின் ஆரம்பத்தில் பீமனும், திரௌபதியும் அவ்வாழ்க்கையைக் கஷ்ட மாக உணர்ந்தார்கள். ''பன்னிரண்டு ஆண்டு கள் எதற்காக இக்கஷ்டத்தை அனுபவித் துக் கொண்டிருக்கவேண்டும்? கௌரவர்கள் சூதாடி நம்மிடமிருந்து நாட்டைப் பிடுங்கிக் கொண்டார்கள். நாம் படையெடுத்துச் சென்று அவர்களோடு போர் செய்து வென்று ராஜ்யத்தை அவர்களிடமிருந்து திரும்பிப் பெறலாம். அதற்கேற்ற வல் லமை நம்மிடத்திலிருக்க வனத்தில் நாம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க வேண்டிய தில்லை.'' இங்ஙனம் இக்கருத்தைப் பீமனும் திரௌபதியும் யுதிஷ்டிரனிடம் தெரிவித் தார்கள். யுதிஷ்டிரன் அதற்குப் பகர்ந்த தாவது: ''நாம் சொன்ன சொல்லைக் காப் பாற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். சொன்ன சொல்லிலிருந்து பிசகினால் வாழ்வு அனர்த்த மாகப் போய்விடும். நாம் பெரியப்பாவுக் குப் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் செய்வதாக வாக்குக் கொடுத்திருக்கிறோம். அவ்வாக்கிலிருந்து நாம் ஒரு நாளும் பிசகக் கூடாது. வனவாச வாழ்க்கையாக அமைந்த பன்னிரண்டு ஆண்டுகளும் நமக்குக் கிடைத் தற்கரிய பேறு ஆகும். இக்காலத்தை நாம் ஆழ்ந்து தவத்தில் ஈடுபடுத்துவோம்.''

நல்லவர்களுக்குத் தலைவிதி என்பது ஒன்று இல்லை. எத்தகைய கடினமான சூழ்நிலை யையும் அவர்கள் தவத்துக்குப் பயன்படுத்து கிறார்கள். தவத்துக்கு நிகரான செயல் இல்லை. பாண்டவர்கள் பன்னிரண்டு வரு ஷங்களும் ஆழ்ந்து தவத்தில் ஈடுபட்டார் கள். மானுட சக்திக்கு அப்பாற்பட்ட சக்தி யைப் பெற்றார்கள். வாழ்க்கையில் பெரு நிலையை அடைந்தார்கள். நம் வாழ்க்கை யிலும் உடைமையும் வறுமையும் மாறிமாறி வரும். நாம் நல்ல ஆத்ம சாதகர்களாக இருப்போமானால் கேடுகாலம், தலைவிதி, கஷ்டகாலம் என்றெல்லாம் சொல்லமாட் டோம். அப்படிப் பேசுகிறவர்கள் அக்ஞா னத்தில் இருக்கின்றார்கள். அவர்கள் வாழ்க் கைத் தத்துவத்தை அறிந்தவர்களல்லர். வாழ்க்கைத் தத்துவத்தைச் சரியாக அறிந்து கொள்பவர்கள் கர்மத்தைத் தலைவிதியாகக் கொள்ளாது கர்மத்தைக் கிடைப்பதற்கரிய பேறாகக் கருதுகின்றார்கள்.

மனபரிபாகம் அடைந்திருப்பவர்கள் பிரதி கூலமான சூழ்நிலையையும் ஆத்மசாதனத் துக்குப் பயன்படுத்துகின்றார்கள். வாழ்க் கைத் தத்துவத்தை அறியாதவர்களுக்கு அனுகூலம், பிரதிகூலம் என்ற இரண்டு நிலை கள் இருக்கின்றன. தவத்தில் ஈடுபடுகின்றவர் களுக்குப் பிரதிகூலமான சூழ்நிலையும் பயன் படுகிறது.

தவஞ்செய்வார் தம்கருமம் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு

என்பது குறள். கௌரவர்கள் ஆசையின் வசப்பட்டுக் கேடு செய்துகொண்டார்கள். பாண்டவர்கள் வனவாசத்தையும் தவத்தில் ஈடுபடுத்தினார்கள். அதன் விளைவாக அவர் கள் தெய்வத்துக்குரியவர்களானார்கள்.

ஒவ்வொரு மனிதனுக்கும் பூலோக வாழ் வில் ஏராளமான வாய்ப்புகள் இருக்கிறன. யுதிஷ்டிரன், துரியோதனன் ஆகிய இருவ ரையும் எடுத்துக்கொண்டால் யுதிஷ்டிரன் ஒரு கோடியில் இருக்கின்றார். துரியோத னன் மற்றொரு கோடியில் இருக்கின்றான். இவ்விருவருக்குமிடையில் நாம் இருக்கின் றோம். சிலர் யுதிஷ்டிரன் பக்கத்தில் இருக்கின்றார்கள். பலர் துரியோதனன் பக்கத்திலிருக்கின்றார்கள். துரியோதனனை ஒதுக்கித் தள்ளிவிட்டு யுதிஷ்டிரனை லக்ஷிய மாகக் கொண்டு மனதைப் பண்படுத்திப் படிப்படியாக மேல்நிலைக்கு வரவேண்டும். யுதிஷ்டிரன் நலத்தையே கண்டதுபோன்று ஆத்ம சாதகர்கள் அனைத்தையும் தெய்வ சொரூபங்களாகக் கண்டு பழக வேண்டும். ஒவ்வோர் உயிரோடும் இணக்கம் வைக்கும் பொழுது தெய்வத்தோடு இணக்கம் வைப்ப தாகப் பாவித்து அந்தக்கரணத்தைச் சுத் தப்படுத்தி வரவேண்டும். அந்தக்கரணம் சுத்தம் அடையும்பொழுதுதான் மானுட நிலையிலிருந்து நாம் தெய்விகப் பெருநிலைக் குப்போகின்றோம். மானுட வடிவத்திலிருந்து கொண்டு பறவை நிலையில் இருக்கின்றவர் கள் இருக்கின்றார்கள். மானுட வடிவத்தில ருந்துகொண்டு விலங்கு நிலையில் இருப்பவர் கள் உண்டு. மானுட வடிவத்தில் மானுட

நிலையிலிருப்பவர்களும் உண்டு. மானுட வடிவத்தில் அசுர இயல்பு படைத்தவர்களா யிருக்கிறார்கள். மானுட வடிவத்தில் தெய் வங்களாகவிருப்பவர்களும் உண்டு.

மேற்கூறிய நிலையில் நம்மை எந்த நிலை யில் வேண்டுமென்றாலும் வைத்துக்கொள்ள லாம். அது நம்முடைய மனபரிபாகத்தைப் பொறுத்திருக்கிறது. இப்பூலோக வாழ்க் கைக்கு நாம் வந்திருப்பது நம்மைப் பண் படுத்துவதற்காக என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஸ்ரீ ராமகிருஷ் ணர் பகர்வதாவது: ''கடவுள் வழிபாட்டுக் காக நாம் மானுட வடிவு எடுத்திருக்கிறோம். மற்றவைகளெல்லாம் கடவுள் வழிபாட்டுக்கு அடுத்தபடியாகத்தான் இருக்கவேண்டும்.'' கடவுள் வழிபாட்டில் அந்தக்கரண சுத்தி ஏற்படுகின்றது. கிடைத்தற்கரிய மானு டப் பிறவியை நன்கு பயன்படுத்தித் தெய்வ அருளுக்கு நாம் முற்றிலும் பாத்திரமாக வேண்டும்.

உடல், மனம், ஆன்மா என்ற மூன்று பகுதி கள் உண்டு. உடல் வாழ்வு எல்லா உயிர் களுக்கும் பொது. உடல் வாழ்வில் பற்றுள்ள உயிர்வகைகள் உடல் இன்பத்தைப்பெறு வதில் ஓயாது முயல்கின்றன. உடலின்பத் துக்கு மேல் ஓர் இன்பம் உண்டு என்பதை அறியாத உயிர்கள் உடல் வாழ்விலேயே கட்டுப்பட்டுக்கிடக்கின்றன. உடல் வாழ் வுக்கு மேல் ஓர் இன்பம் உண்டு என்பதை அறிகின்ற நிலை மனோவாழ்வு ஆகிறது. மனோ வளர்ச்சி அறிவு நிலைக்கு நம்மை உயர்த்துகிறது. ஆணவம், அஹங்காரம், செருக்கு, பொறாமை முதலிய சிறுமைகள் மனோவாழ்வில் வந்தமைகின்றன. அச் சிறுமைகளுக்குள் கட்டுண்டு கிடக்கின்ற மனிதன் அதற்கப்பாலிருக்கும் ஆன்மீக இன் பத்தை அறியாதவனாக இருக்கின்றான். மனோவாழ்வைக் கடந்து அப்பால் செல்வது மானுட வாழ்வின் குறிக்கோளாகும்.

மானுடன் உடல் வாழ்விலும் மனோ வாழ் விலும் கட்டுப்பட்டுக்கிடக்கின்ற நிலையைக் கடந்து ஆன்மீக வாழ்வில் பற்றுடையவனாக வேண்டும். உடலின்பத்தைப் பெறுவதற் கும் ஆன்மீக இன்பத்தைப் பெறுவதற் கும் அறிவு துணை செய்கிறது. உடலின்பத் தைப் பெறுவதற்கு அறிவைப் பயன்படுத்து பவர்கள் உலகாயதர்கள் ஆகின்றார்கள். ஆன்மீக இன்பத்தைப் பெறுவதற்கு அறி வைப் பயன்படுத்துபவர்கள் ஞானிகள் ஆகின்றார்கள். உடலின்பத்திலும் பெயர், புகழ் முதலானவற்றிலும் நாட்டம் கொண் டிருப்பவர்கள் அறிவின் மூலம் ஆணவ அஹங்காரத்தை வளர்த்துக் கொள்கிறார் கள். தன்னில் தானாக இருக்கும் பெருநிலைக் குப் பங்கமாக இருக்கும் அனைத்தையும் பொருளற்றவைகளென்று புறக்கணிப்பதற் குத் தங்கள் அறிவைப் பயன்படுத்துபவர் கள் பாரமார்த்திக வாழ்வில் முன்னேற்ற மடைகின்றார்கள். மனதைப் பாரமார்த்திக நெறியில் செலுத்துவதற்கு இப்பிரபஞ்ச வாழ்வை நாம் பயன்படுத்த வேண்டும். பிரபஞ்சத்தில் வரும் இன்பத்தையும் பிர பஞ்ச அறிவையும் பெறுவது மட்டும் நம் குறிக்கோளன்று. அவற்றைக் கடந்து செல் வதே நம் குறிக்கோள். மனம் உடல் உணர்ச் சியிலும் பிரபஞ்ச உணர்ச்சியிலும் கட்டுப் படாது விலகி இருக்கும்பொழுதுதான் பார மார்த்திக உண்மை தெளிவாக விளங்கு கிறது. சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கு வது தெய்வத்தின் திட்டமாகும். அத்தெய் வத் திட்டத்துக்கு மனிதன் தன்னை ஒப் படைக்கவேண்டும். மனிதன் தான் செய் கின்ற செயல் மூலம் தன்னைத்தானே திருத் திக்கொள்கின்றான். உலகைத் திருத்துவதற் காக மனிதன் வரவில்லை. இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். மனிதன் உல கத்தில் எக்காரியத்தைச் செய்தாலும் அக் காரியத்தின் மூலம் தன் சித்தமலத்தை அறுக்கவும் தன்னைச் சிவமாக்கவும் முயல்வா னானால் அவன் தெய்வத்தின் திட்டத்தை நிறைவேற்றுபவன் ஆகின்றான். அப்பொழுது அவன் தெய்வத்தின் அருளுக்குப் பாத்திர மாகின்றான். தெய்வ அருளுக்குப் பாத்திர மாகின்ற பாரமார்த்திகப் பெருவாழ்வு வாழ்ந்துவர முயல்வோமாக. நம் உள் ளத்தே குடிகொண்டிருக்கின்ற பரம்பொருள் கிருபைகூர்ந்து சதா நம்மை நல்வழியில் நடாத்தி வருவாராக. (முற்றும்)

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-171

949 பஞ்சபூதேசீ பஞ்ச பூ தே சீ — ஐம்பூதங்களின் தலைவி.

ஐம்பெரும் பூதங்களாவன: நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாசம். மரத்தினின்று காய் உண்டாகி அது கனியாகிப் பழுக்கின்ற பொழுது அக்கனியினிடத்து மேல் தோல், உள்தோல், சுளை, விதை முதலியன தாமாகவே உண்டாகின்றன. அதே விதத்தில் பரதேவதையாகிய அன்னை பராசக்தி பிரபஞ்சமாகத் தோன்றி வருகிறபொழுது அவள் தானே இந்த மஹா பூதங்கள் ஐந்தாக வடிவெடுக்கின்றாள். வடிவெடுத்திருப்பது மட்டுமல்லாது அவைகளைத்தானே ஆண்டும் வருகின்றாள். இதற்குத் தக்க சான்று தென்னிந்தியாவில் உள்ள சிவத் தலங்களில் காணலாம். சிவமும் சக்தியும் சொருபத்தில் ஒன்று. செயல்படுகிற பகுதி சக்தி எனவும் அதற்கு ஆதாரமாயிருக்கிற பகுதி சிவம் எனவும் சொல்லப்படுகின்றன. ஆதாரம் இன்றி ஆதேயமில்லை. பின்பு ஆதேயமில்லாது ஆதாரம் பொருளற்றதாம். அன்னை பராசக்தி காஞ்சியில் பிருதுவி அல்லது மண்ணில் சிவலிங்கம் பிடித்து வைத்து அதைத் தானே வழிபட்டாள். அதன் விளைவாகச் சிவசக்தியின் சான்னித்தியத்துக்கு ஆங்கு மாதா காமாட்சி சமேத ஏகம்பரேஸ்வரர் என்னும் பெயர் வந்துள்ளது. திருவானைக் கோயிலில் சிவசக்தி என்னும் மெய்ப்பொருள் நீரினால் ஆக்கப்பெற்ற லிங்கமாக இலங்குகின்றது. இந்த ஸ்தலத்தில் அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் என்னும் நாமம் வந்துள்ளது. அடுத்தபடியாக நெருப்பு மயமாக அமைந்துள்ள பரவஸ்துவுக்குத் திருவண்ணாமலையில் அபீதகுசாம்பிகை சமேத அருணாசலேஸ்வரர் என்னும் பெயர் வந்துள்ளது. இப்பெயரைத் தென்மொழியில் தெரிவிக்குமிடத்து உண்ணாமுலைத் தாய் சமேத அண்ணாமலையார் எனப்படுகிறது. அடுத்தபடியாகக் காற்றாக இலங்கும் பரவஸ்துவானது காளஹஸ்தியில் ஞானப்பூங்கோதையம்மை சமேத காளத்தீஸ்வரர் என இயம்பப்படுகிறது.

இனி, சிதம்பரத்தில் சிவகாமி சமேத நடராஜமூர்த்தி என்னும் பெயர் ஆகாசவடிவெடுத்துப் பரவஸ்துவுக்கு வந்துள்ளது.

அன்னை பராசக்திக்குப் புறம்பாகப் பிரகிருதி ஏதுமில்லை. ஆகையால் புலப்படுகிற அனைத்தையும் பரதேவதை மயமாகப் பாவித்து வணங்குவது உசிதம்.

அன்னை பராசக்தியும் மஹாவிஷ்ணுவும் புராண பூர்வமாகத் தங்கையும் தமையனும் ஆக இவர்களிருவரும் இலங்குகின்றனர்.

பொருள் ஒன்று, வடிவங்களிரண்டு. இப்படி அமைந்துள்ள தங்கையானவள் தமையனால் பஞ்சரத்தினமாலையொன்று அணிவிக்கப்பட்டவளாக இலங்குகின்றாள். அந்தப் பஞ்சரத்தினங்களானவை பவளம், மாணிக்கம், மரகதம், இந்திரநீலம், வைரம்—ஆகியவைகளைக் கொண்டு அமைந்தது. இந்த ஐந்து ரத்தினங்களும் பஞ்ச பூதங்களிலிருந்து தோன்றி வந்தவைகளாம். இக்காரணத்தை முன்னிட்டும் அன்னை பராசக்திக்குப் பஞ்சபூதேசீ என்னும் பெயர் வந்துள்ளது.

950. பஞ்சஸங்க்யோபசாரிணீ பஞ்சசங்க்யோபசாரிணீ — ஐந்து வித திரவியங்களைக் கொண்டு உபசரிக்கப்படுகிறவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

அன்னை பராசக்தியானவள் வழிபாட்டுக்கு மிக எளியவள் ஆகின்றாள். அவனருளாலே அவன் தாள் வணங்கி என்னும் கோட்பாட்டை அவளருளாலே அவள் தாள் வணங்கி என்று இயம்புவதும் பொருந்தும். ஏனென்றால் அவனும் அவளும் சொருபத்தில் ஒன்றே. இயற்கையில் அகப்படுகிற பொருள்களுள் தூயவைகளாயுள்ள ஏதேனும் ஐந்துபொருள்களைத் தேர்ந்தெடுத்து வைத்துக்கொண்டு அவளை வணங்குவது சாத்தியம். சந்தனம், புஷ்பம், சாம்பிராணி தூபம், நெய், அல்லது எண்ணெய் விளக்கு, நைவேத்தியம் அல்லது படைப்புக்குரிய தூய உணவு ஆகிய இந்த ஐந்துபொருள்களும் வழிபாட்டுக்கு நன்கு உதவுகின்றன. இவைகளைச் சேகரிப்பது எல்லார்க்கும் சாத்தியம். பக்தி நிறைந்த

தூய மனதுடன் இவைகளை ஆயத்தப்படுத்த ஆத்ம சாதகர்கள் கடமைப்பட்டிருக்கின்றனர்.

951. शाश्वती சாச்வதீ — யாண்டும் நிலைத்திருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

அன்னை பராசக்தி ஒருகாலத்தில் இருந்து மற்றொரு காலத்தில் மறைந்துபட்டுப் போகிறவள் அல்லள். காலாதீதத்தில் அவள் இனிது நிலைத்திருக்கிறாள். ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தில் இல்லாது போகின்றவளும் அல்லள். வானவில் அல்லது இந்த்ர தனுஸ் ஏதேனும் ஓரிடத்தில் தோன்றிப் பிறகு அங்கேயே அது மறைந்துபட்டுப் போகிறது. ஆகவே அது சாசுவதமானதன்று. அன்னை பராசக்தியோ நீக்கமற எங்கும் நிறைந்திருப்பவள். தன் சொரூபத்தினின்று சிறிதளவும் பிசகாதவள் ஆதலால் அவள் சாசுவதமானவள். அகிலப் பிரபஞ்சமும் மாயா காரியமாக ஒரு காரணத்தை முன்னிட்டுத் தோன்றிப் பிறகு மாயமாய் மறைந்துபோகிறது. அன்னை பராசக்தியோ எப்பொழுதுமே சொரூபத்தில் எந்த விதமான மாறுதலுமில்லாது சாசுவதமாக இருந்து வருகிறாள்.

952. शाश्वतैश्वर्या சாச்வதஐச்வர்யா— யாண்டும் எதனிடத்தும் ஆதிக்கம் செலுத்துபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

ஆளும் தன்மைக்கும் ஏராளமாகப் பொருள் படைத்திருப்பதற்கும் ஐச்வர்யம் என்னும் நாமம் அமைந்திருக்கிறது. அன்னை பராசக்தி உலகனைத்தையும் ஈன்றெடுத்து அன்புடன் வளர்த்து வருவது மட்டுமன்று. அவளுடைய ஆதிக்கமும் ஆட்சி முறையும் நெறி பிறழாது எங்கும் நடைபெற்று வருகின்றன. ஆட்டு இடையன் ஒருவன் நூற்றுக்கணக்கான ஆடுகளை மைதானத்திலும் காட்டிலும் மேய்த்து வருகிறான். கவனிப்பாரற்றுத் திரிவதுபோன்று அந்த ஆடுகள் எங்கெங்கேயோ அதன தன் போக்கில் போய் மேய்ந்துகொண்டிருக்கின்றன. ஆயினும் இடையன் அவைகள் மீது சரியானபோக்கில் கண்பார்வை வைத்திருக்கிறான். ஆட்டுக்கு எதிரியாயுள்ள நரி, சிறுத்தை முதலியன தென்பட்டால் உடனே எத்தகைய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை இடையன் அறிகிறான். திட்டப்படி நடவடிக்கையும் எடுக்கிறான். வீட்டுக்குத் திரும்பும்பொழுது நொண்டியாய்ப் போன ஆடு ஒன்றைத் தானே தூக்கித் தோளில் போட்டுவருகிறான். ஆட்சிமுறையும் தாயான தன்மையும் சேர்ந்து அவனிடத்து அமைந்திருக்கின்றன. அன்னை பராசக்தியின் பாங்கு குறையில்லா நிறைநிலையில் அமைந்திருக்கிறது. உயிர் வகைகளுக்கிடையில் உள் பிணக்கும், பிறர் எதிர்ப்பும் வாராதபடி அவள் நன்கு பார்த்துக்கொள்ளுகிறாள். உயிர் வகைகள் அமைதியுடன் இனிது வாழாது தங்களுக்கிடையிலேயே சண்டை சச்சரவுகளை உண்டுபண்ணிக் கொள்வார்களாகில் அதற்கேற்ற தண்டனை முறை வழுவுபவர்களுக்கு விதிக்கப்படுகிறது. உலக மக்களுடைய ஆட்சி முறையில் ஆளுகின்ற அதிகார வர்க்கத்துக்குத் தெரியாத பாங்கில் நெறி வழுவி நடப்பது சாத்தியம். அம்முறையில் தண்டனையினின்று தப்பித்துக்கொள்ளுவதும் சாத்தியம். ஆனால் அன்னை பராசக்தியின் ஆட்சி முறையில் அத்தகைய நெறி வழுவு நிகழ்வதில்லை. நிகழ்ந்தால் அதற்கேற்ற தண்டனை அப்போதைக்கப்போதே விதிக்கப்படுகிறது. இயற்கையிலே அமைந்துள்ள பாங்குகளனைத்தும் பராசக்தியின் ஆட்சிமுறைக்குரிய சட்ட திட்டங்களாம். சான்றொன்று எடுத்துக்கொள்வோம். தீயில் கை வைத்தால் அது சுடுகிறது. யாருக்கும் தெரியாது இரகசியமாகத் தீயில் கை வைத்து அது சுடுவதினின்று யாருமே தப்பித்துக்கொள்ள முடியாது. ஆனால் அதே தீயைக்கொண்டு நல்லுணவு சமைக்கலாம். உலக ஆட்சி முறைக்குத் தெரியாது ஒருவன் திருடலாம். அத்திய செயலுக்குத் தண்டனை வாராது அவன் தப்பித்துக்கொள்ளவும் செய்யலாம். ஆனால் அன்னையின் ஆட்சி முறை அத்தகையதன்று. திருடுதலுக்கேற்ற தண்டனை உடனே வருகிறது. பண்பட்ட சிலர்க்கு அத்தண்டனை உடனே விளங்குகிறது. விளங்கப்பெறுதவன் மேலும் கீழ்மையில் மூழ்குகிறான்.

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்

என்பது தெய்விகப் பேரமைப்பு. அறநெறி என அது பெயர் பெறுகிறது. அறநெறி வழுவுகிறவன் அப்போதைக்கப்போதே விழ்ந்தவனாகிறான். இதுவே அன்னையின் ஆட்சிமுறையாம்.

ஐச்வர்யம் என்னும் சொல்லுக்கு ஏராளமாக மூலப்பொருள் படைத்திருப்பது என்னும் விளக்கம் ஒன்று உள்ளது. பிரபஞ்சம் முழுதும் அன்னையினிடத்திருந்து வந்தது. அதில் அமைந்திருக்கும் பொருள்களனைத்தும் அன்னைக்கே சொந்தம். வேண்டியவாறு அவையாவையும் பயன்படுத்தும் சுதந்திரமும் அவளுக்குண்டு. ஒரு கணப்பொழுதில் ஓர் அரசனை ஆண்டியாக்கவும் ஆண்டியைத் தூக்கி அரசன் நிலையில் வைப்பதும் அவளுக்கு விளையாட்டாக வந்தமைகின்றன. இதற்கு மேலாக அண்டங்களைத் தோற்றுவிப்பதும் அவைகளைத் துடைத்துத் தள்ளுவதும் விளையாட்டுப் போன்று அன்னையிடத்து அமைந்திருக்கின்றன.

அன்னை பராசக்தியின் ஐச்வர்ய மகிமையை அறிய வருகிற ஆத்ம சாதகன் அதைக் குறித்து மயங்குவதில்லை. அதில் கருத்தும் செலுத்துவதில்லை. அன்னைக்கும் தனக்குமுள்ள பிரியாத இணக்கத்தில் மட்டும் அவன் கருத்தைச் செலுத்துகிறான்.

953. शर्मदा சர்மதா—இன்பத்தைத் தருபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

அன்னை பராசக்தி தானே உலகம் ஏழுமாயிருக்கிறாள். இவ்வுலகங்களில் ஆங்காங்குத் தோன்றி வளர்ந்து வரும் உயிர் வகைகளுக்கு அப்போதைக்கப்போது தேவையாயிருக்கும் இன்பத்தை அவள் தந்தருள்கின்றாள். ஆதலால்தான் உயிர்வகைகளனைத்தும் வாழ்க்கையிலே பெரும் பற்றுதல் வைத்திருக்கின்றன.

ஸ்தாவர உலகத்தை முதலில் ஆராய்வோம். ஹிமாசலம் போன்ற மலைப்பிரதேசத்தில் குளிர்காலத்தில் உறைபனிக்கட்டி விழ்ந்து மரம் செடி கொடிகளெல்லாம் பட்டுப்போகும்படி செய்கின்றது. அந்நிலையில் அவை யாவும் இன்புற்று உறங்குகின்றன. வெளித்தோற்றத்துக்கு அவைகள் பட்டுப் போனவைகள் போன்று தென்படுகின்றன. உண்மையில் நித்திரையில் அவைகள் சுகித்திருக்கின்றன. பின்பு வசந்த காலம் வருகின்றபொழுது வெறும் கவையாகவும் கொம்பாகவும் இருந்தவைகள் தளிர்த்து வருகின்றன. அப்படித் தளிர்க்கும்பொழுது அவை அடைகின்ற இன்பத்தை மற்றவர்களும் கண்டு ரசிக்க முடியும்.

மரம், செடி, கொடிகள் பூத்துக் காய்த்து நிறைநிலையடையும் காலத்தில் வண்டு இனங்கள் அப்பூக்களைச் சுற்றி ரீங்காரமிட்டுக் கொண்டிருப்பது இன்பத்தை விளக்குதற்கு அறிகுறியாகிறது.

மரச்சோலையில் ஆங்காங்கு அமர்ந்திருக்கும் புள்ளினங்கள் பாடுதல் மூலம் தாங்கள் அடைகிற இன்பத்தை வெளியிடுகின்றன. அடுத்தபடியாக விலங்கு வகைகள் துள்ளிக் குதித்து ஓடிவிளையாடுவதன் மூலம் அவைகளடையும் இன்பத்தை வெளிப்படுத்துகின்றன. இவையாவுக்கும் மேலே மானுடவர்க்கம் அப்போதைக்கப்போது புரிகின்ற ஆடல் பாடல் வாயிலாகத் தாங்களடைந்துள்ள சுக ஜீவனத்தை வெளிப்படுத்துகின்றன.

இனி, இயற்கையில் மாறியமையும் பருவங்கள் உயிர்வகைகளுக்குத் தம்போக்கில் இன்பத்தை ஊட்டுகின்றன. இளவேனிற் காலம் வருகின்றபொழுது குளிரைத் துடைத்துத் தள்ளுதலில் ஒருவித இன்பம். முதுவேனில் வெக்கையின் கொடுமையைக் குளிர்ந்த நன்னீர் அருந்துதல் வாயிலாகவும், புழுக்கத்தை விசிறி வீசி இனிய இளம் காற்றாக மாற்றுவதன் வாயிலாகவும் மக்கள் இன்புறுகின்றனர். மழைக்காலத்தில் படலம் படலமாகக் கார்மேகம் கட்டி வருகிறது. அக்காட்சியைப் பார்த்து மயில்போன்ற பறவைகள் தோகையை விரித்துக்கொண்டு ஆனந்தத் தாண்டவமாடுகின்றன. இவையாவுக்கும் மேலாகப் பொழிகிற மழையைக் குறித்து மனிதனடைகின்ற ஆனந்தம் இவ்வளவு அவ்வளவு அன்று. ஆகவே அன்னை பராசக்தி உயிர்வகைகளனைத்துக்கும் காலமெல்லாம் இன்பத்தை ஊட்டிக் கொண்டிருப்பதால் சர்மதா என்னும் பெயர் அவளுக்கு வந்து அமைந்திருக்கிறது.

ஜயதேவர் சரிதம்

(388ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகவான் காட்சி மறைந்த பின்பும் ஜயதேவருடைய மனம் அக்காட்சியிலேயே மூழ்கி ஆனந்தமடைந்திருந்தது. பகவானுடைய லீலைகள் அவருடைய வாயிலிருந்து அவரையும் அறியாமல் பாக்களாக வெளிவந்தன. அப்பாக்கள் அஷ்டகங்களாக அமைந்திருந்தன. அவர் இருபத்தைந்து அஷ்டகங்கள் பாடினார். இருபத்தைந்து அஷ்டகங்களிலும் ராதாவின் திருவடியைப் பகவான் திருமுடியில் அணிந்துகொண்டார் என்ற அடி அமைந்திருந்தது. ராதாவின் திருவடி பகவான் திருமுடியில் இருந்தது என்ற அஷ்டகங்களை வெளியிடுவதற்கு ஜயதேவர் அச்சமடைந்தார். அப்படிப் பாடுவது சரிதானா என்பதை அறிந்துகொள்வதற்குப் பெரியோர்களை நாடித் தீர்த்தயாத்திரை சென்றார். தீர்த்த யாத்திரையைப் பாதயாத்திரையாகவே செய்தார். அரசனும் ஜயதேவருடைய மனைவியும் அவருடன் நடந்தே தொடர்ந்து யாத்திரை செய்தனர். அவர்கள் வாரணாசியை அடைந்தார்கள். ஆங்குக் காசி விசுவநாதரைத் தரிசனம்செய்தார்கள். ஆங்குள்ள பெரியோர்கள் பலரையும் சந்தித்தார்கள். வாரணாசியில் தங்கியிருந்தபொழுது பரமசிவன் ஜயதேவர் கனவில் தோன்றித் தம் பெயரில் ஐந்து அஷ்டகங்கள் செய்வாரானால் அவருக்குற்ற சந்தேகத்தை நிவர்த்தி செய்வதாகக் கூறி மறைந்தார். ஜயதேவர் கனவிலிருந்து விழித்தெழுந்ததும் காசிவிசுவநாதர் மீது ஐந்து அஷ்டகங்கள் பாடினார்.

காசிவிசுவநாதர் ஒரு பண்டிதர் வடிவத்தில் பல மாணாக்கர்களுடன் ஜயதேவர் இருக்கும் மடத்துக்கு வந்தார். ஜயதேவர் அப்பண்டிதரைப் பார்த்ததும் அவருடைய பாதங்களில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினார். அப்பண்டிதர் ஜயதேவரிடமிருந்த இருபத்தைந்து அஷ்டகங்களையும் வாங்கிக்கொண்டார். வாரணாசியிலுள்ள பண்டிதர்கள் எல்லாரையும் வரவழைத்தார். அப்பண்டிதர்கள் முன் அவ் அஷ்டகங்களை வாசித்துக் காண்பித்தார். காசியிலுள்ள பண்டிதர்களைப் பார்த்து அப்பண்டிதர் பகர்ந்ததாவது: ''பண்டிதர்களே, வேதத்தின் சிரசின்மேல் பகவான் பாதங்கள் இருக்கின்றனவென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. ஆனால் இந்த ஜயதேவர் பகவான் சிரசின்மேல் ராதாவின் பாதங்கள் இருக்கின்றனவென்று பாடியுள்ளார். இது உங்களுக்குச் சம்மதமா?'' என்று கேட்டார். அதற்கு அப்பண்டிதர்கள் ''மூடனும் இப்படிப் பாடமாட்டான்'' என்று ஆக்ஷேபனை செய்தார்கள். ஜயதேவர் அவர்களை வணங்கிக் கேட்டுக்கொண்டதாவது: ''பண்டிதர்களே, நான் அறியாமல் செய்த தவறைப் பொறுத்துக் கொள்ளுங்கள்'' என்றார். அதற்கு அப்பண்டிதர் ஜயதேவரைப் பார்த்துப் பகர்ந்ததாவது: ''நீ ஒரு கவிஞனா? உன்னுடைய கவிதை இக்காசியில் சிறப்படைய முடியுமா? முக்கால் மூடனை முழுமூடன் கொண்டாடுவதைப் போன்று கல்வி அறிவு இல்லாதவர்கள் உனக்குக் கவிஞன் என்ற பட்டம் கொடுத்திருக்கின்றார்கள். நான் உன்னுடைய அஷ்டகங்களைக் கங்கையில் விட்டெறியப் போகின்றேன்'' என்று கூறி அவைகளைக் கங்கையில் விட்டுக் கொண்டு போனார்.

சிவனார் அஷ்டகங்களைக் கையில் ஏந்திக் கொண்டு ''கங்காதேவியே! உன் மணாளன் மீது பாடியிருக்கும் ஐந்து அஷ்டகங்களிலும் திருமால்மீது பாடியிருக்கும் இருபத்தைந்து அஷ்டகங்களிலும் ஒரு பிழையுமில்லை என்பது உண்மையானால் உனக்குள் விடும் இந்த அஷ்டகங்களை உன் திவ்யகரங்களால் எடுத்து என்னிடம் கொடு'' என்று கூறிக் கங்கையில் விட்டார்.

சிவனார் சடை முடியிலிருந்து வெளிவந்து வெகுநாளாயிற்று. இன்றைக்கு அவரைக் காணும் பேறும் அவரோடு பேசும் வாய்ப்பும் இவ் அஷ்டகங்கள் மூலமாகக் கிடைத்தது என்று மகிழ்ந்து, கங்காதேவி அவ்வஷ்டகங்களை ஒவ்வொன்றாக எடுத்துச்

சிவனார் கையில் தந்தார். இவ்வஷ்டகங்களில் எவ்விதக் குறையுமில்லையென்றும் கங்காதேவி பகர்ந்தார். ''கங்காதேவியே! நீ சிவன் முடிமேல் என்றும் உன் அடிகளை வைத்திருப்பவளாகையால் ராதாவின் பாதங்கள் பகவான் முடிமேலிருக்கின்றன எனப்பாடியுள்ள கருத்துக்குச் சம்மதம் தெரிவித்துள்ளாய். எனக்கு அது சம்மதமில்லை'' என்று கூறித் திருமால்மீது பாடியிருந்த இருபத்தைந்து அஷ்டகங்களை மீண்டும் கங்கையில் வீசி எறிந்தார். அவ்வமயம் பகவான் ராதா சமேதராகக் கருடவாகனத்தில் ஏறி யாவரும் பார்க்கும் வண்ணம் அந்தரத்தில் நின்று அவ்விருபத்தைந்து அஷ்டகங்களையும் தமக்குரியன என்று கங்கையில் விழாமல் தாங்கிக்கொண்டார். பண்டிதராக அங்கு வந்திருந்த சிவனாரும் பார்வதி சமேதராக ரிஷபவாகனத்தில் ஏறிக் காட்சி தந்தார். ஜயதேவர் பரமானந்தம் அடைந்தவராக அவ்விரு தெய்வங்களையும் துதி செய்தார். ''ஸ்ரீ விஷ்ணுதேவா, நீர் ஜகத்துக்குக் காரணமாகின்றீர். சகல கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமாயிருக்கின்றீர். எல்லாவுயிர்களையும் காப்பாற்றுகின்றீர். பக்தர்களைப் பரிபாலிக்கும் பொருட்டு அந்தரத்தில் நாராயண ரூபியாகப் பிரகாசிக்கின்றீர். உம்மை நான் சேவிக்கின்றேன். உம்மிடத்தில் நான் சரணாகதி அடைகின்றேன்.'' இங்ஙனம் ஜயதேவர் விஷ்ணுவைத் துதிசெய்தார். தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். அரம்பையர் நடனம் ஆடினார்கள். பகவான் தம் கரத்திலிருந்த இருபத்தைந்து அஷ்டகங்களையும் ஜயதேவர் கையில் தந்து ''ஜயதேவரே! எம்முடைய இரகசியம் உமக்குத்தான் தெரியும். மற்றவர்கள் அதை அறிந்துகொள்ள இயலாது. நீர் பாடியுள்ள பாகவதத்தையும் அஷ்டகங்களையும் அன்புடன் அனுதினமும் பாராயணம் செய்கின்றவர்கள் ஹிருதயத்தில் நான் மனமுவந்து குடியிருப்பேன்'' என்று கூறி மகாவிஷ்ணு மறைந்தார். பரமசிவன் ஜயதேவரைப் பார்த்து, ''ஓ! ஜயதேவரே, நீர்செய்துள்ள சிவாஷ்டகங்களையும் உன் சரிதத்தையும் கேட்கின்றவர்களுக்கு ஐசுவரியத்தை அளிப்பேன்'' என்று கூறி மறைந்தார். தேவரிஷிகளும் 'ஜயதேவா' என்று அன்புடன் சொல்கின்றவர்களுக்கு ஜயம் உண்டாகக் கடவது என்று ஆசீர்வாதம் செய்து தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றார்கள்.

இந்நிகழ்ச்சிக்குப் பின் வாரணாசியிலுள்ள பண்டிதர்கள் எல்லாரும் ஜயதேவரைப் பகவான் என்றே தீர்மானித்தார்கள். அவரைப் பூஜிக்கவும் தொடங்கினார்கள். ஜயதேவர் வாசுதேவனையும், மஹாதேவனையும் தரிசித்த மகிழ்ச்சியினாலும் தவமேலீட்டினாலும் நிர்மல மனம் உடையவரானார். மனதில் பேரானந்தம் பொங்கி எழத் தெய்வப் பித்து உடையவரானார். பேரானந்தத்தில் மூழ்கியவராகக் காடென்றும் நாடென்றும் பாராமல் நடந்து ஒருவேளை ஜோதிசொரூபமாகவும் மற்றொருவேளை அரூபமாகவும் உலாவிக் கொண்டிருந்தார். ஜயதேவரின் உன்னத நிலையை அறிந்த பத்மாவதி அரசனிடம் பகர்ந்ததாவது: ''அரசனே! என் கணவர் தேகாத்மபுத்தியைக் கடந்து பரத்தோடு லயமாகிவிட்டார். இனி நம்முடன் அவர் பேசமாட்டார். எனவே நீர் உன் நாட்டிற்குச் சென்று நீதியுடன்ஆட்சி செய்வாயாக'' என்றாள். அதற்கு அரசன் பகர்ந்ததாவது : ''நித்திய அநித்தியப் பொருளைப் பற்றித் தெளிவாக அறிந்துள்ள விவேகிகள் அநித்திய சுகத்தைத்தரும் ஆட்சியை விரும்புவார்களா? சத் குருநாதர் சேவையை விடுவார்களா? விஷயப்பொருள்களைத் தொடுவார்களா? சத்சங்கத்தைவிட்டு நீங்குவார்களா? குருவை விட்டுப் பிரிவார்களா? என் அன்னையே! என்னை எப்படிப் போகச் சொன்னீர்கள்?'' என்று பத்மாவதியின் திருவடிகளில் வீழ்ந்து அழத் தொடங்கினார். அரசன்மீது உள்ள அன்பின் மேலீட்டால் ஜயதேவர் ''உனக்கு என்ன குறை நேரிட்டது?'' என்று கருணையுடன் அரசனைக் கேட்டார். அரசன் பணிந்து பகர்ந்ததாவது : ''எளியவர்களைக் காப்பாற்றுபவரே! இவ்வுடலிலுள்ள பிராணன் எப்பொழுது வேண்டுமென்றாலும் நீங்கும். இவ்வுடல் நிலையற்றது. நீர் மேல் குமிழி

யைப்போலவும், நீர்மேல் எழுதும் எழுத்தைப் போலவும், மின்னலைப் போலவும், அருகு நுனியிலுள்ள பனியைப்போலவும் உள்ள இவ்வுடலை மெய்யென்று நம்பிப் பொய்யனாய்ப் போனேன். நாயும், நரியும், பேயும், கழுகும் பிடுங்கித்தின்னும் இப் பிணத்துக்கு மணம் செய்து பேதையாய்ப் போனேன். இவ்வுடலுக்குச் சுகம் கொடுக்க விரும்பிப் பலருக்கு மகவாய்ப் பிறந்தேன். இரத்தமும், நரம்பும் சதையும் பொருந்திய இவ்வுடல் நான் என்று கருதி அஞ்ஞானியாய்ப் போனேன். பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசை என்னும் மூவாசைகளில் கட்டுண்டு துன்பத்துக்காளானேன். அஞ்ஞானத்தினாலும், துன்மார்க்கர் உறவாலும், மனோ இச்சையாலும், பஞ்சேந்திரியங்களின் ஆசையில் அகப்பட்டுச் சம்சாரம் என்னும் சாகரத்தில் அழுந்தி கரையேறுதற்கு ஒருவழியும் காணாமல் வெகுநாளாய்த் தவித்துக் கொண்டிருக்கின்றேன். நித்தியத்தைத்தேடாமல் அநித்தியத்தில் பற்றுடையவனாய் அழிந்துபோனேன். வாழ்க்கையில் மகிழ்ச்சி அணுவளவும் இல்லை. அனுபவிப்பதோ அளவற்ற தொல்லை. மரணமோ புலியைப்போல் பயங்காட்டிக் கொண்டு முன்னிலையில் நிற்கிறது. மரணத்தை நினைத்தாலோ கிடுகிடென்று நெஞ்சம் நடுநடுங்குகிறது. பிரம்ம ஞானம் இல்லாதவர்கட்குப் பிறப்புஇறப்புப்பற்றிய துன்பம் ஒழியாது என்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. மானுட ஜன்மம் எடுத்தும், மக்களுக்கு மன்னனாய் இருந்தும், மெய்ஞ்ஞானத்தை அறியும் விவேகியாய் இருந்தும், அகண்டானந்தத்தைத் தரும் கருணாநிதியாகிய உம்மைச் சரணடைந்தும் பிறவியை அறுத்துப் பெருநிலையை அடையும் மார்க்கம் தெரிந்துகொள்ளாமல் போனால் இனி எப் பிறப்பில் மெய்ப்பொருளைக் காண்பேன்? குழந்தைக்குத் தாயும், பக்தனுக்குத் தெய்வமும், குடிமக்களுக்கு அரசனும், பகலுக்குச் சூரியனும், வீரனுக்குத் தைரியமும், வேந்தனுக்குப் படையும், மனைவிக்குக் கணவனும், கணவனுக்கு மனைவியும், தவத்துக்கு வைராக்கியமும், உலகத்துக்கு மழையும் துணையாய் இருப்பனபோல அடியேனுக்குத் தாங்கள் துணையாய் இருத்தல் வேண்டும். தேவரீராகிய தாங்கள் என்னை ஆனந்தக் கடலில் மூழ்கியிருக்கச் செய்யவேண்டும்.''

அரசன் இவ்வாறு ஜயதேவரிடம் பகர்ந்தபோது அரசனுடைய தீவிரமான பக்குவத்தை அறிந்து அரசனை மார்புடன் அணைத்துக்கொண்டு ஜயதேவர் பகர்ந்ததாவது: ''ஓ வேந்தனே! சர்க்கரை என்று சொன்னால் இனிப்புத் தோன்றுமா? அன்னம் என்று உரைத்தால் பசி நீங்குமா? கங்கை என்று சொன்னால் பாபம் போகுமா? தீபம் என்று சொன்னால் இருள் நீங்குமா? வேதாந்தம் என்று சொன்னால் சந்தேகம் போகுமா? மருந்து என்று சொன்னால் பிணி நீங்குமா? குரு என்று சொன்னால் கிருபை உண்டாகுமா? தெய்வம் என்று சொன்னால் அன்பு உண்டாகுமா? அங்ஙனம் வாசா ஞானத்தால் ஆனந்தம் உண்டாகுமா? வைராக்கியமில்லாத ஞானம் பயனற்றது. வைராக்கியங்களில் பலவகைகள் உண்டு. பாபம் செய்யக்கூடாது; புண்ணியமே செய்யவேண்டும். ஒழுக்கமாக இருக்கவேண்டும். ஈசுவரத்தியானம் செய்ய வேண்டும் என்று நினைப்பது புராணவைராக்கியம். இறந்த பின் சவத்தைச் சுடுகாட்டுக்குக் கொண்டுபோகும்போது மட்டும் இந்த உடல் வாழ்வு என்ன வாழ்வு? இதில் என்ன சுகம் இருக்கிறது? உலகம் இந்திரஜாலம் போன்றது என்று நினைப்பது ஸ்மசான வைராக்கியம். பிரசவ வேதனை பொறுக்கமாட்டாமல் இனி இவ்வுடல் இன்பம் கூடாதென்று தீர்மானிக்கும் ஸ்திரீயைப் போலக் குடும்பத்தில் ஒரு கஷ்டம் வரும்பொழுது குடும்ப வாழ்வில் துன்பமேயன்றி இன்பம் அணுவளவும் இல்லை என்று குடும்ப வாழ்வை ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பேரின்பத்தை அடைய வேண்டுமென்று நினைப்பது பிரசூத வைராக்கியம். குடும்பத்தில் கலகம் ஏற்பட இனி இக்குடும்பத்தார்களுடன் கூடி இருப்பது கூட்வே கூடாது என்று கோபித்துக்கொண்டு வீட்டை விட்டுச் சென்று தனியனாக இருக்க எண்ணுவது சலன வைராக்கியம். அக்கிரமம் செய்தவர்

களை வெட்டி இரண்டு துண்டாக்கவேண்டு மென்று கோபமடைந்து அதைச் செய்து முடித்துவிட்டுத் துறவியாகப் போக நினைப் பது மூட வைராக்கியம். விருப்பமான பொருள்களைப் புசித்துப் போகத்தில் மூழ் கிச் சோம்பலின்றி இரவும் பகலும் உழன்று எதிர்த்தவர்களை வென்று எதற்கும் அஞ்சா தவனுகக் கர்வம் கொண்டிருப்பது ராஜச வைராக்கியம். சிவனே பிரதான தெய்வம் திருமாலே பிரதான தெய்வம் என்று சொல் லுவதும், தங்கள் சமயத்தைப் பின்பற்று பவர்களுக்கே மோட்சமுண்டென்று மற்ற தேவதைகளைத் தூஷிப்பதும் மத வைராக் கியம். மெய்ஞ்ஞான குருவை அடைந்து அவர் அருளால் தன் நிஜசொருபத்தை உணராமல் போலிக் குருமார்கள் போதிக் கும் போதனையில் நான் என்னும் அஹங் காரம் விருத்தியடையச் செய்துகொண்டு அப்போலி நிலையில் நம்பிக்கை வைத் திருப்பது அஞ்ஞான வைராக்கியம். மலம் நிறைந்த இவ் அநித்திய தேகத்தை என் றைக்கும் அழியாமல் வைக்கும் பொருட்டுக் காயகல்பம் புசித்துப் பிராணவாயுவை அடக்கிச் சோதி தரிசனம் பெற்று முடிவில் சூனிய பாவத்தை அடைந்திருப்பது ஹட வைராக்கியம். வேதாந்த சாஸ்திரங்களைச் சத்குரு முன்னிலையில் விசாரித்துப் பிரபஞ் சம் அநித்தியம் என்றும், தான் நித்தியம் என்றும், பிரம்மமே தான் என்றும், எல் லாம் பிரம்மம் என்றும் திடப் பிரக்ஞை யால் ஆனந்தத்தையடையாது இறுமாப்புக் கொண்டிருப்பது அபல வைராக்கியம். இத் தகைய அஞ்ஞான வைராக்கியர்களால் கற்பகாலம் ஆனாலும் ஆனந்தத்தை அடைய முடியாது. ஏனென்றால் ஆங்கு நான் என் னும் அஹங்காரம் எஞ்சியிருக்கிறது. நான் என்னும் அஹங்காரம் செருக்கை உண் டாக்குமேயன்றி இனிமையையும் சாந்தத் தையும் தராது. போர்க்களத்தில் தன்னை எதிர்த்தவன் எவனானாலும் அவனை எதிர்த்து வெற்றிபெறும் அதிசூரனைப் போலவும், நியாய மன்றத்தில் உற்றார், மற்றோர், எளி யோர், வலியோர் என்ற பாரபட்சம் பார்க் காமல் தீர்ப்புக் கூறும் சத்திய நியாயாதி பதியைப் போலவும் யாவரும் சம்மதிக்கும் ஞானமார்க்கத்தைக் கண்டிப்பான முறை யில் ஞானியானவன் எடுத்துச் சொல்ல வேண்டும். யாவருக்கும் சமமாகப் படைக் காத அநீதனைப் போலவும், ஈ எறும்பு முத லான ஜீவர்கள் அனைத்திடத்தும் சமபாவம் கொள்ளாத அஞ்ஞானியைப் போலவும், தன் மக்கள், பிறர் மக்கள் என்று குழந்தை களிடத்தில் வேற்றுமை புத்தியைக் காட்டும் வெறியனைப் போலவும், தன்னுயிரைப் போன்று மன்னுயிர்களைக் கருதாத அசட னைப்போலவும், புகழ்ச்சிக்கு மகிழ்ந்து இகழ்ச்சிக்குத் துன்பப்படும் அவிவேகியைப் போலவும், மனதிலொன்றும் வாக்கி லொன்றுமாகப் பேசும் வஞ்சகனைப் போல வும் ஞானி நடந்துகொள்ளலாகாது. மேலும் சைவம் தான் முக்கியம் என்றும், வைஷ்ணவம்தான் முக்கியமென்றும் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. ஞானிகள் ஒவ் வொருவரும் தங்கள் தங்கள் போக்கில் மார்க்கத்தை விளக்கியிருப்பார்கள். எனவே மார்க்கங்களைக் குறித்துச் சண்டை போட் டுக்கொண்டிருக்கக் கூடாது.

"ஜாக்ரதம், சொப்பனம், சுஷுப்தி, துரி யம், துரியாதீதம் என்று ஐந்து அவஸ்தை கள் இருக்கின்றன. சத்குரு முன்னிலையில் இவ்வைந்து அவஸ்தைகளையும் நன்ருக விசாரம் செய்யவேண்டும். நான் என்பது அற்றுப்போனல்தான் ஞானம் உண்டாகும். ஞானமில்லாத பக்தியும், ஞானமில்லாத சித்தியும், ஞானமில்லாத வைராக்கியமும் பயன்படா. ஞான வைராக்கியம்தான் முக் திக்குத் துணைபுரியும். அணுமுதல் அண்டம் வரையில் பிரம்மமே நிறைந்திருக்கிறது. பரிபூரணமாகிய பரப்பிரம்மத்துக்கு அன் னியமாக நான் என்பது இல்லை. யாண்டும் இருப்பது பிரம்மம். தவளையை உண்ணும் நாகப் பாம்பைப்போன்று நான் என்னும் அஹங்காரத்தையும், எனது என்னும் மம காரத்தையும் அழித்துவிடுபவன் பூரண வைராக்கியம் உடையவனுகின்ருன். உடல் போகத்தைக் குறித்து மனதில் எழுகின்ற எண்ணங்களை யெல்லாம் மாய்த்துவிடுவது யதார்த்த வைராக்கியம். (தொடரும்)

ஆத்ம போதம்

(திரு. V. S. நரசிம்மன்)

एतस्माज्जायते प्राणो मनः सर्वेन्द्रियाणि च ।
खं वायुर्ज्योतिरापः पृथिवी विश्वस्य धारिणी ॥

एतस्मात् (ஏதஸ்மாத்) இந்தப் பரம்பொருளிலிருந்து प्राणः (ப்ராண:) பிராணன் मनः (மன:) மனம் सर्व इन्द्रियाणि च (ஸர்வ இந்த்ரியாணி ச) அனைத்துப் புலன்களும் खं (கம்) ஆகாயம் वायुः (வாயு:) காற்று ज्योतिः (ஜ்யோதி:) தீ आपः (ஆப:) நீர் विश्वस्य (விச்வஸ்ய) அகில அண்டத்தின் धारिणी (தாரிணீ) ஆதாரமாகிய पृथिवी (ப்ருதிவீ) நிலம் जायते (ஜாயதே) உண்டாகின்றன.

''இந்தப் பரம்பொருளிடமிருந்தே பிராணன், மனம், இந்திரியங்கள், ஆகாசம், காற்று, தீ, நீர், நிலம் (அண்டத்தின் ஆதாரமாக இருப்பது) ஆகிய அனைத்தும் தோன்றுகின்றன.''

வெளியே காணும் பிரபஞ்சம், தனித்த ஜீவனுகத் திகழ்பவனின் மனம், பிராணன் அனைத்திற்கும் ஆதாரம் 'ஸத்' பொருள் ஒன்றே. அண்டத்திலும், பிண்டத்திலும் காணப்படுவது இதுவே. இந்தச் சுலோகம் முண்டக உபநிஷத்தில் (II. i. 3) இருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.

निर्गुणो निष्क्रियो नित्यो निर्विकल्पो निरञ्जनः ।
निर्विकारो निराकारो नित्यमुक्तोऽस्मि निर्मलः ॥

निर्गुणः (நிர்குண:) குணங்கள் அற்ற निष्क्रियः (நிஷ்க்ரிய:) செயல்கள் அற்ற नित्यः (நித்ய:) நிலைத்த निर्विकल्पः (நிர்விகல்ப:) வேறுபாடுகள் அற்ற निरञ्जनः (நிரஞ்ஜன:) வேறு பொருளின் சேர்க்கையால் உண்டாகும் மாசு ஏதுமற்ற निर्विकारः (நிர்விகார:) மாற்றமேதுமற்ற निराकारः (நிராகார:) உருவமற்ற निर्मलः (நிர்மல:) அழுக்கற்ற नित्यमुक्तः (நித்யமுக்த:) நித்ய முக்தனுக (இருக்கிறேன்).

குணம் செயல்கள் அற்ற, நித்யமான, விகல்பம் மாசு விகாரம் உருவம் அழுக்குஆகியவையற்ற நித்ய முக்தனுக இருக்கின்றேன்.

பரம்பொருளைக் குறிக்க எதிர்மறைச் சொற்கள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. 'நேதி' என்ற முறையை நாம் அறிவோம். 'Finite always puts a metaphysical block' என்று உரைப்பதை ஒட்டி இத்தகைய வர்ணனைகள் அமைகின்றன.

अहमाकाशवत्सर्वं बहिरन्तर्गतोऽच्युतः ।
सदा सर्वसमस्सिद्धो निस्सङ्गो निर्मलोऽचलः ॥

अहं (அஹம்) நான் आकाशवत् (ஆகாசவத்) வெட்டவெளியைப் போல் सर्वं (ஸர்வம்) எங்கும் बहिः (பஹி:) வெளியிலும் अन्तः (அந்த:) உள்ளேயும் गतः (கத:) இருப்பவன் अच्युतः (அச்யுத:) நிலை பெயராதவன் सदा (ஸதா) என்றும் सर्व समः (ஸர்வ ஸம:) அனைத்திலும் ஸமமாக सिद्धः (ஸித்த:) இருப்பவன் निस्सङ्गो (நிஸ்ஸங்கோ) பற்றற்று निर्मलः (நிர்மல:) மாசற்று अचलः (அசல:) அசைவற்று (இருப்பவன்).

''நான் வெட்டவெளியைப் போன்று எங்கும், உள்ளும், புறமும் இருப்பவன். நிலை பெயராது, அனைத்திலும் ஸமமாக, பற்று மாசு அசைவு ஆகியவை அற்றிருப்பவன்.''

உள்ளும், புறமும் நீக்கமற நிறைந்திருக்கும் பொருளைக் குறிக்க ஆகாசம் சிறந்த உதாரணம் ஆகும். ''பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரண ஆனந்தமே'' என்பார் தாயுமானவர்.

'நள்ளுங் கீழும் மேல்உளும் யாஉளும்
எள்ளும் என்னெயும் போல் நின்ற எந்தையே
(திருவாசகம்)

யோகவாசிஷ்டத்தில் வேறு ஓர் உதாரணம் தரப்படுகின்றது. ''ஆகாயத்தில் வைக்கப்பட்டுள்ள குடம் உள்ளும், புறமும் சூன்யமாகக் (வெற்றிடமாக) காணப்படுகின்றது; அதே குடத்தைச் சமுத்திரத்தில் ஆழ்த்தினல் உள்ளும், புறமும் நீர் நிறைந்து பூரணமாகக் காணப்படுகின்றது.''

அந்த: சூந்யோ பஹி: சூந்யோ சூந்ய கும்ப இவ
ஆகாசே
அந்த: பூர்ணே பஹி: பூர்ணே பூர்ண கும்ப இவ
அர்ணவே.

'சூந்யம்' என்னும் போது அங்கு உலக வாசனைகள் இல்லை என்றும், 'பூரணம்' என்னும் போது அங்குத் தெய்விக போதமே

நிறைந்து இருக்கின்றது என்றும் பொருள் கொள்ளவேண்டும்.

नित्य शुद्ध विमुक्तैक मखण्डानन्दमद्वयम् ।
सत्यं ज्ञानमनन्तं यत्परं ब्रह्माहमेव तत् ॥

नित्य (நித்ய) நிலைத்துள்ள, शुद्द (சுத்த) தூய்மையான, विमुक्त (விமுக்த) விடுதலை அடைந்த, एकं (ஏகம்) ஒன்றான, अखण्ड (அகண்ட) பிரிவுகள் அற்ற, आनन्द (ஆனந்த) மகிழ்ச்சி நிரம்பிய, अद्वयम् (அத்வயம்) இரண்டற்ற, सत्यं (சத்யம்) மெய்ப்பொருளாய், ज्ञानं (ஞானம்) அறிவு வடிவாய், अनन्तं (அநந்தம்) எல்லையற்று, परं ब्रह्म (பரம் ப்ரஹ்ம) பரப்பிரம்மமாய், (உள்ளது) यत् (யத்) எதுவோ, तत् एव (தத் ஏவ) அதுவே, अहं (அஹம்) நான்.

"நித்ய, சுத்த, விமுக்த, ஏக, அகண்ட, ஆனந்த, இரண்டற்ற சத்ய, ஞான, எல்லையற்ற பரப்பிரம்மமே நான்."

'தத் த்வம் அஸி' என்ற மஹாவாக்கியத்தில் உள்ள 'தத்' என்ற பரம்பொருளின் ஸ்வரூப லட்சணங்களை மூன்று சுலோகளில் குறிப்பிட்டுள்ளார். 'நிர்க்குணோ...' என்ற சுலோகம், 'நித்ய சுத்த...' என்ற பாடலில் உள்ள சொற்கள் பரம்பொருளைக் குறிக்கின்றன. நிர்க்குண ஆநந்த, நித்யாநந்த... என்ற பெயர்கள் வழங்கி வருவதை நாம் பார்க்கின்றோம். குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும்போது இறைவனின் திருநாமத்தை இடுவது வழக்கம். அதுபோன்று துறவிகளும் பரம்பொருளைப் பற்றியசிந்தனையில் மனம் ஆழ்ந்திருக்க வேண்டும் என்பதற்காக இத்தகைய பெயர்களை ஏற்றுக் கொள்கின்றனர்போலும். தியான சுலோகம் ஒன்றில் இதே கருத்துப் பிரதிபலிக்கின்றது.

நித்ய சுத்த புத்த முக்த பாவம் ஈசம் ஆத்மஹ
பாவயன் ஷட் இந்த்ரியாணி சம்நியம்ய நிஸ்சல:
அஸ்தி வஸ்து சித்கனம் ஜகத் ப்ரஸாக்ஷி காரணம்
நநஷ்வரம் ததுத்பவம் ஜகத் தமோனுஜம் ச யத்
தத் பதைக வாசகம் ஸதாம்ருதம் நிரஞ்ஜனம்
சித்த வ்ருத்தி த்ருக் ஸாக்ஷகம் ததஸ்மியஹம்
[ததஸ்மியஹம்

பொருள்களைவேறுபடுத்திக் காட்டும் பிரிவுகள் மூன்று வகையானவை. 1. விஜாதீய பேதம்: ஓர் இனத்தை வேறு ஒன்றிலிருந்து பிரித்துக்காட்டுவது. பசுவும் குதிரையும் போல. 2. ஸஜாதிய பேதம்: ஒரே இனத்தைச் சேர்ந்த இரு பொருள்களைப் பிரிக்க இது பயன்படும். வெள்ளைக் குதிரை, கறுப்புக் குதிரை என்று பாகுபடுத்துவதைப் போல. 3. ஸ்வகத பேதம்: ஒரே பொருளின் பல் வேறு பாகங்களைப் பாகுபடுத்துவது. ஒரு குதிரையின் அங்கங்களை வால், கால், பிடரி என்று பிரித்துக் காண்பதைப் போல.

அகண்டமான பரம்பொருளிடம் மூன்று பேதங்களையும் காணவியலாது.

பழனி ஆண்டவர் மலையில் ஐக்கிய வழிபாடு

திரு. S. விஸ்வநாதன் அவர்கள் நிதியிலிருந்து ஆண்டுதோறும் பழனியில் வழிபாடு நிகழ்கிறது. இவ்வாண்டு டிசம்பர் மாதம் 9ஆம் தேதி வியாழக்கிழமை திருப்பராய்த்துறை ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுலப்பள்ளி எட்டாம் வகுப்பு மாணவர்களையும், திருப்பராய்த்துறை விவேகானந்த ஆரம்பப்பள்ளி ஐந்தாம் வகுப்பு மாணவர்களையும், திருவேடகம் விவேகானந்த மேல்நிலைப்பள்ளி மாணவர்களையும், கரூர் விவேகானந்த உயர்நிலைப்பள்ளி மாணவர்களையும் பழனிக்கு அழைத்துச் சென்று ஸ்ரீ தண்டாயுதபாணி சந்நிதியில் ஐக்கிய வழிபாடு செய்ய ஏற்பாடாகி உள்ளது. உச்சிக்கால பூஜைக்குப்பின் திரு A. சேனாதிபதி M. P. அவர்கள் நிர்வாகத்தில் நடந்து வரும் பழனி அடிவாரத்தில் உள்ள சங்கரண்டாம் பாளையம் பட்டக்காரர் மடத்தில் பக்தர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்படும். அன்று நிகழும் ஐக்கிய வழிபாட்டிலும் சமாராதனையிலும் கலந்து கொள்ளுமாறு அன்பர்களும் தாய்மார்களும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள். அன்று காலை 9 மணிக்குக் கந்தர் அநுபூதி ஓதிக்கொண்டு மாணவர்கள் மலைமீது ஏறுவார்கள். பகல் 10-30 முதல் 11-30 வரைபழனியாண்டவர் சந்நிதியில் ஐக்கிய வழிபாடு நிகழும்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (331) வாழ்க்கையில் ஒவ்வொரு வருக்கும் பல பிரச்னைகள் தோன்றுகின்றன. அப்போது கடவுளைச் சார்ந்திருப்பதா? கடமையைச் செய்வதா? அல்லது நாமே ஆராய்ச்சி செய்து பார்ப்பதா?

அறிவைத் தீட்டிப் பலப்படுத்துவது வாழ்க்கையின் குறிக்கோள். நாள்தோறும் வடிவெடுக்கிற பிரச்னைகள் அறிவைத் தீட்டுதற்குப் பயன்படுகின்றன. பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் மாணுக்கனுக்குக் கணக்குப் போட்டு வீட்டு வேலை தருகிறுர். அவன் தானே முயற்சி செய்யாது தன் வீட்டிலுள்ள முதியோர்களைக்கொண்டு வீட்டுக் கணக்கை முடிப்பானுகில் அதன் மூலம் அவன் அறிவு வளர்ச்சியடையாது. தான் உண்ணும் உணவைத் தானே ஜீரணம் பண்ணுதற்கு நிகராக முயன்று அவரவர் அறிவை அவரவரே முன்னேறச் செய்யவேண்டும். பிரச்னைகளைத் தீர்ப்பதற்குக் கடவுளைச்சார்ந்திருப்பது முறையன்று. அது கடவுளின் செயலும் அன்று. கடவுளிடத்துப் பிரார்த்தனை பண்ணுவதன் வாயிலாக நாம் நம்முடைய திறமையைப் பலப்படுத்துகிறேம். பின்பு திறமையைக்கொண்டு நமக்குண்டாகும் வாழ்க்கைப் பிரச்னைகளை நாமே சரிப்படுத்த வேண்டும். இது விஷயத்தில் முதியோர்களுடைய அபிப்பிராயம் கேட்கலாம்.

கேள்வி: (332) ஆக்கும் கருவியான லிங்கத்தை அழிவுக்கடவுளான சிவனுக்கு அடையாளமாகக் கொண்டு வணங்குகிறேமே, இது சரியா?

சிவலிங்கம் கடவுளுக்கு வடிவமில்லை என்பதற்கு அறிகுறியாகும். ஏனென்றுல் வடிவம் எடுத்துள்ள மூர்த்தி ஒருவருக்குக் கை, கால் முதலிய உறுப்புக்கள் உண்டு. சிவனுக்கு உருவம் உண்டு என்பதற்கு அறிகுறியாக அவர் நடராஜ மூர்த்தியாக வணங்கப்படுகிறுர். ஆக, கடவுள் வடிவத்திலும் இருக்கிறுர்; வடிவத்தைக் கடந்தவராகவுமிருக்கிறுர். இதற்குச் சான்றென்று எடுத்துக்கொள்வோம். நாம் பருகும் நீர் உறைபனிக் கட்டியாகின்றபொழுது அதற்கு வடிவம் உண்டு. பருகும் நீர் நிலையிலிருக்கிறபொழுது அதற்குச் சொந்த வடிவமில்லை. எந்தப் பாண்டத்தில் போட்டு வைக்கின்றேமோ அந்தப் பாண்டத்தின் வடிவத்தை அது எடுத்துக்கொள்கிறது. பிறகு ஆவியாக மாறுகிறபொழுது அதற்கு வடிவம் ஏதுமில்லை. இதே பாங்கில் பரம்பொருள் எத்தனை உயிர் வகைகளாக இலங்குகின்றுரோ அத்தனை வடிவங்கள் அவருக்குண்டு. இனி, பேரானந்தப் பேரறிவு நிலையில் வடிவங்களனைத்தையும் கடந்து அவர் இருக்கிறுர். படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்துவிதச் செயல்கள் அகிலாண்டமெங்கும் ஈசனுடைய செயலாக இருந்து வருகின்றன. இது அவரைப் பற்றிய உண்மை. ஆதலால் ஈண்டு எழுப்பிய கேள்வி பொருளற்றது.

கேள்வி: (333) உயிர்களைப் படைத்து நடாத்திச் செல்பவர் கடவுள். மக்கள் தங்கள் ஆசைகள் நிறைவேறப் பிரார்த்தனை செய்வது சரியா?

தெரிந்த ஒன்றைக் கொண்டு தெரியாத ஒன்றை ஆராய்ச்சி பண்ணுவது பொருந்தும். குழந்தையொன்று தனக்கு வேண்டிய ஒன்றைத் தாய் தந்தையரிடம் கேட்கிறது. கொடாவிட்டால் அது அடம்பண்ணுகிறது. இந்த உரிமை மகவாகப் பிறந்த உயிர் ஒன்றுக்கு உண்டு. அதே விதத்தில் நமக்குவேண்டியதைத் தெய்வத்திடத்துப் பிரார்த்தனை பண்ணுவது முறைமை. ஆனல் பிரார்த்தனை பண்ணுவதில் மற்றெரு முறைமையுமுண்டு. தெய்வத்திடத்தில் நாம் எதைக் கேட்கிறேமோ அதற்குத் தகுதியுடையவர்களாக நம்மை நாம் செய்துகொள்ளவேண்டும். இதற்கு இரண்டொரு சான்றுகள் எடுத்துக்கொள்வோம். வீட்டு அறையின் கதவு, ஜன்னல்களை மூடிவைத்துக்கொண்டு நல்ல காற்று வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தனை பண்ணுவது மடமை. ஜன்னல்களையும் கதவுகளையும் திறந்துவைத்தால் நல்ல காற்று அறைக்குள் தானுகவே வருகிறது. நீரில் நீந்த விரும்புகிற ஒருவன் வெறும்

பிரார்த்தனை பண்ணிக் கொண்டிருந்தால் போதாது. அவன் நீந்திப் பழகவேண்டும். அதற்கிடையில் அத்துறையில் தன் திறமை ஓங்கவேண்டுமென்று பிரார்த்தனை பண்ணலாம். இக்கோட்பாடு கல்வித்துறைக்கும் பொருந்துகிறது. மானுடன் ஒருவன் எதற்குத் தகுதியுடையவனாகத் தன்னைச் செய்துகொள்கிறானோ அதை ஈசன்கொடுத்து உதவுகிறார். ஜீவப்பிரயத்தனமும் ஈசனின் அனுக்ரஹமும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன. ஆதலால் பிரயத்தனம் பண்ணாது வெறும் பிரார்த்தனை மட்டும் பண்ணிக் கொண்டிருப்பது போதாது. பிரயத்தனத்துக்கு ஏற்றபலனைப் பரமன் கொடுத்து உதவுகிறார்.

கேள்வி: (334) உத்தராயணம், மஹா சங்கராந்தி போன்று எல்லா விழாக்களையும் அறிவியல் பூர்வமாக விளக்க இயலுமா?

விழாக்களில் பெரும்பான்மை காலதேச நிமித்தத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருக்கின்றன. காலத்தை அனுசரித்து வரும் விழாக்கள் சில உள. உத்தராயணப் புண்ணியகாலம், சங்கராந்தி ஆகியவை காலத்தில் வரும் மாறுதலை முன்னிட்டாம். அதே விதத்தில் நவராத்திரி விழா அல்லது சக்தி வழிபாடு மழை பெய்து ஓய்ந்த பிறகு சரத் காலத்தில் வருகிறது. மஹா சிவராத்திரி குளிர்காலம் முடிந்து இளவேனிற் காலம் துவங்குகிறபொழுது வருகிறது. ஆக இவை போன்ற விழாக்கள் காலத்தை அனுசரித்து வருபவைகளாம். ஸ்ரீ ராம நவமி, கிருஷ்ணாஷ்டமி ஆகியவைகள் நிமித்தத்தை அடிப்படையாகக் கொண்டவைகள். பெருமக்களின் தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டவைகள். துலாஸ்நானம், கங்காஸாகர ஸ்நானம், கும்பமேளா முதலிய விழாக்கள் இடத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தவைகளாம். ஆகவே நாம் அனுஷ்டித்து வரும் விழாக்களில் பெரும்பான்மை காலத்தையும், இடத்தையும் நிமித்தத்தையும் அடிப்படையாகக் கொண்டவைகளாம்.

கேள்வி: (335) ஒரு பிறவியில் பெண்ணாகப் பிறக்கும் ஜீவன் கடவுளை அடையும் வரை அது எடுக்கும் பல பிறவிகளில் பெண்ணாகவே பிறக்குமா? அல்லது ஆண் பெண் என மாறி மாறிப் பிறக்குமா?

இயற்கையின் அமைப்பில் ஆண்பால் பெண்பாலாகிய இருபாலார்க்கும் சம அந்தஸ்தும் தன்மையும் உண்டு. இக்கோட்பாட்டை அனுசரித்தே சிவனார்அர்த்தநாரீஸ்வரராக அதாவது மாது ஒருபாகம் ஆனவவராக இலங்குகின்றார். மன அமைப்புக்கேற்பச் சரீர அமைப்பு மாறியமைகிறது. சிற்றுயிர் பேருயிராகப் பரிணமிப்பதும் மன அமைப்பை ஒட்டியதாம். அந்தந்தப் படித்தரத்தில் ஆண் இயல்புக்கும் பெண் இயல்புக்கும் சிறிது வித்தியாசம் உண்டு. ஆண் அமைப்பை ஆண்மை என்றும் பெண் அமைப்பைப் பெண்மை என்றும் பகர்கிறோம். பராக்ரமம், முன்னிட்டம் முதலியன ஆண்மைக்குரிய பண்புகள். அச்சம், நாணம் முதலியன பெண்மைக்குரிய பண்புகளாம். ஜீவாத்மா ஒன்றனிடத்து அமைகிற மன அமைப்புக்கு ஏற்றவாறு அது ஆண் ஆக அல்லது பெண் ஆகப் பிறக்கிறது. ஒரு பிறவியில் ஆணாயிருப்பது மற்றொரு பிறவியில் பெண் ஆவதும், அதே விதத்தில் பெண்ணாயிருப்பது ஆண் ஆவதும் இயற்கையின் பாங்குகளாம். இந்த இரண்டு பால்களுக்கிடையில் ஆண்பாலினிடத்து நிறைவுநிலை சற்று உயர்ந்தும் பெண்பாலினிடத்து அது சற்றுத் தடைபட்டும் இருப்பது வெளிப்படை. ஆண், பெண் இரண்டும் அல்லாதது அலி எனப் பகரப் பெறுகிறது. பண்பில் அது இன்னும் கீழ்நிலையிலிருக்கிறது.

பால் வேற்றுமை மனப்பாங்குக்கேற்ப உடலில் அமைகிறது. பால் வேற்றுமையைக் கடந்தது ஆத்மா. ஆத்ம ஞானம் ஆண்களுக்கே சாத்தியம், பெண்களுக்குச் சாத்தியப்படாது என்பது சமுதாயத்தில் சிலர்க்கிடையில் புகுந்திருக்கிறது. ஆனால் இந்தக் கொள்கைக்கு ஆதாரமில்லை. சரீரத்தில் வாழ்ந்திருப்பதற்கு இடையில் சரீர உணர்ச்சியைத் தாண்டியிருப்பது ஆத்ம சாதனத்தின் குறிக்கோள்.

கயிலைமலை யாத்திரை

(சுவாமி குஹானந்தர்)

[398ஆம் பக்கத் தொடர்ச்சி]

டார்ச்சூலாவிலிருந்து ராணுவத்தினர் முகாம்கள் அமைத்திருக்கின்றனர். வழியில் மலைவாசிகளையும் சந்திக்கின்றோம். அவர்கள் நம்மைப் பார்த்தவுடன் கைலாசபதிக்கு ஜே என்று சொல்லி நமஸ்காரம் செய்து அன்புடன் பழகுகின்றனர். தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆங்காங்குப் பலர் ராணுவத்தில் இருக்கின்றனர். தமிழ்ப் பேசும் சப்தம் கேட்டவுடன் அவர்கள் ஓடி வந்து எந்த ஊரிலிருந்து வருகிறீர்கள்? சற்று ஓய்வெடுத்துக்கொண்டு ஏதாவது சாப்பிட்டு விட்டுச் செல்லுங்கள் என்கின்றனர். தாங்கள் இன்ன ஊரைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி டீ, பிஸ்கட் கொடுத்து உபசரித்துச் சிறிது தூரம் உடன் வந்து வழி அனுப்புகின்றனர். குஞ்ச் என்னும் இடம் பத்தாயிரம் அடி உயரத்தில் உள்ளது. அங்கும் ஓரளவு விவசாயம் செய்கிறார்கள். உருளைக் கிழங்கு, முட்டைக்கோஸ், காரட், கோதுமை பயிரிடுகின்றனர். வேனிற்காலத்தில் மட்டும் பயிர்செய்ய முடிகின்றது என்கின்றனர். இரவில் நல்ல குளிர். கைகளுக்குக் கம்பளி உறையும், கால்களுக்குச் சாக்ஸ், தலைக்கு மங்கி குல்லாய் இவைகளுடன் உறங்கும் பைக்குள் புகுந்துகொண்டால்தான் குளிரைத் தாங்க முடிகிறது. காலையில் வெந்நீரில்தான் முகம் கழுவிப் பல் தேய்க்க முடிகிறது. இங்குத் தண்ணீர்க் கஷ்டம் இல்லை. முகம் கழுவிக்கொள்ள வெந்நீர் தருகிறார்கள். காலையில் எல்லாரும் ஏழு மணிக்குத் தான் எழுந்தார்கள். சிற்றுண்டி சாப்பிட்டு முடித்துச் சாமான்களை எல்லாம் மூட்டை கட்டி வைத்துக்கொண்டு ராணுவத் தலைவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். கேப்டனும், டாக்டரும் குதிரையில் 9 மணிக்குக் கேம்பிற்கு வந்தனர். இங்கிருந்து 24 கி. மீ. தூரம் செல்ல வேண்டும். அதிகம் ஏற்றமில்லை. மெதுவாக வாருங்கள் என்று சொல்லிவிட்டு அவர்கள் குதிரையில் முன் சென்றனர். காளி கங்கை ஓரத்திலேயே பாதை செல்கின்றது. இதற்குமேல் விவசாயம் அதிகம் இல்லை. மரங்களும் குறைவு. வழிநெடுக ஒருவகை முள்செடியில் பல வர்ணங்களில் ரோஜாபோன்ற அழகான பூக்கள் கொத்துக் கொத்தாக நிலத்திலிருந்து பூச்செண்டுகள் போன்று மலர்ந்திருக்கின்றன. ஆடுமாடுகள் நிறைய மேய்கின்றன. நடந்து செல்லும்போது குதிரைகளோ ஆட்டுக் கூட்டமோ வந்தால் மிகக் கவனமாக மலை ஓரத்தில் ஒட்டி நின்று கொள்ளவேண்டும். மறந்துபோய் மலைச் சரிவில் நின்றுவிட்டால் பெரிய ஆபத்தாகி விடும். அவைகள் நம்மீது மோதினால் பள்ளத்தில் ஆற்றில் விழுவதைத் தவிர வேறு வழியில்லை. சுமார் 7 கி. மீ. தூரம் சென்றதும் ராணுவத்தினர் மிகத்தரமான காப்பி போட்டு யாத்திரை வாசிகள் எல்லாருக்கும் கொடுத்தனர். டெல்லியில் இருந்து புறப்பட்ட பிறகு காபியைக் காண முடியாதிருந்தவர்கள் இரண்டு மூன்று டம்ளர்கள் காபி சாப்பிட்டனர். பின் சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டு பகல் சுமார் ஒரு மணிக்குக் காலாபாணி என்னும் இடத்திற்குப்போய்ச் சேர்ந்தோம். இந்த இடம் 11,800 அடி உயரத்திலுள்ளது. குளிர்காலத்தில் எங்கும் பனிதான் நிறைந்திருக்கும். இங்கு மரங்கள் வளர்வதில்லை. சிறு செடிகளும் புல் தரைகளுமேதான் உள்ளன. இங்கு ராணுவ முகாம், எல்லைப் போலீஸ் முகாம், இமிக்ரேஷன் ஆபீஸ் முதலியன இருக்கின்றன. உயர்ந்த மலையின் அடிப்பாகத்தில் சிறிய குளம் போன்ற ஒரு நீர்த்தேக்கத்தில் தண்ணீர் கறுப்பு நிறமாக இருக்கின்றது. அதனால் இந்த இடத்திற்குக் காலாபாணி—கறுப்புத் தண்ணீர் என்ற காரணப்பெயர் வந்துள்ளது. அதன் கரையில் சிறிய இரண்டு மண்டபங்கள் அமைத்திருக்கின்றனர். ஒன்றில் சிவலிங்கமும் மற்றொன்றில் அம்பிகையும் கோவில் கொண்டுள்ளனர். அந்த இடத்தின் அமைதியும்,

மலை, நதி, குளம், கோவில் முதலிய இயற்கை அழகும் அங்குச் செல்வோருடைய மனதை ஓர் உன்னத நிலைக்கு எடுத்துச் செல்கின்றன. ராணுவத்தினரும், காவலர்களும் அங்குச்செல்லும் யாத்ரீகர்களும் அங்குச் சிவனாரையும் அம்பிகையையும் வழிபாடு செய்யத் தவறுவதில்லை. மலையில் கிடைக்கும் புஷ்பங்களைக் கொண்டு அலங்காரம் செய்து வைத்திருக்கின்றனர். விபூதி, குங்குமம் வைத்திருக்கின்றனர். எல்லாரும் மண்டபத்துள் சென்று தொட்டு வணங்கலாம். இரண்டு கோவில்களிலும் இரண்டு பெரிய தட்டுகள் வைத்திருக்கின்றனர். அவற்றில் ஒவ்வொன்றிலும் சுமார் ஆயிரம் ரூபாய்க்கு மேல் ரூபாய் நோட்டுக்களும் நாணயங்களுமாக இருந்தன. அங்குச் செல்பவர் எல்லாரும் தங்கள் அளவிற்கேற்பக் காணிக்கையைப்போட்டு வணங்கி வருகின்றனர். விக்ரஹங்களைத்திருடிக்கொண்டுபோய் விற்பதையே தொழிலாகக் கொண்டுள்ள தமிழ்நாட்டு மக்களையும், திறந்த மண்டபத்தில் தட்டு நிறைய ரூபாயும் நோட்டுக்களும் இருப்பதையும் எண்ணிப் பார்த்தால் அங்குள்ள மக்களின் மனப்பண்பையும் நம்மவர்களின் பேராசை கொண்ட மனப்பான்மையையும் அறிந்து கொள்ளலாம். அங்கு இரண்டொரு சிறிய அறைகள் கட்டி உள்ளார்கள். பெரும்பாலோர் கூடாரத்தில் தான் தங்குகிறார்கள். பனிக்காலத்தில் எல்லாரும் கீழே வந்து விடுகிறார்கள். அங்குள்ள ராணுவத்தினர், காவலர் எல்லாரும் யாத்ரீகரிடம் மிக அன்பாகப் பழகுகிறார்கள். அவர்கள் பல மாகாணங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எல்லாரும் ஒரு குடும்பத்தினர் போன்று சேர்ந்து வாழ்கிறார்கள். பைதாரகாட் ஊரைச் சேர்ந்த திரு மாரித்தோலா என்பவர் அங்கு இமிக்ரேஷன் அதிகாரியாக இருக்கிறார். அவர் எங்களிடத்தில் மிக அன்போடு பழகித் தம் அறைக்கு அழைத்துச் சென்று பிஸ்கட், டீ எல்லாம் கொடுத்து உபசரித்தார். என்னிடம் (wind proof jacket) காற்றிலிருந்து பாதுகாக்கும்சட்டை இல்லாததைப்பார்த்துத் திபெத்தில் அது மிக அவசியம் என்றார். 'நான் கொண்டு வரவில்லை. இரண்டு மூன்று Swetterகள் வைத்திருக்கின்றேன், சமாளித்துக் கொள்வேன்' என்று சொல்லி விட்டு வந்து விட்டேன். அன்று மாலை 6 மணிக்கு எங்கள் கூடாரத்தைத் தேடிக்கொண்டு அவர் வந்தார். தம்மிடம் ஒரு புதுச்சட்டை இருப்பதாகவும் தயவு செய்து அதை அவசியம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் நம் எல்லையில் போகும்போதே அதன் அவசியம் தெரியும் என்றும், கைலாய யாத்திரைக்குத் தம்மால் இயன்ற இந்த உதவியைச் செய்வது தமக்குக் கிடைத்த பாக்கியம் என்று கருதுவதாகவும் சொல்லி அந்தச் சட்டையைக் கொடுத்துப் போனார். அந்தச் சட்டை உள்ளும், வெளியிலும் Fur என்னும் ஒருவித வழவழப்பான துணியாலும் மத்தியில் பறவைகளின் இறகுகள் வைத்தும் தைத்து உடம்போடு நன்றாக மூடிக் கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது. அன்று இரவே அந்தச் சட்டையின் உபயோகம் தெரிந்தது. கடும் குளிர் இருந்தது. மறுநாள் ஜூலை 1ம் தேதி. காலை 7 மணிக்கு முன் எழுந்து வெளியே யாரும் வர முடியவில்லை. காலை 7 மணிக்கு எழுந்து வெந்நீரில் பல் துலக்கி முகம் கழுவிக் கொண்டு காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டோம். காளிகங்கை ஓரத்தில் ஒரு வெந்நீர் ஊற்று இருப்பதாகச் சொன்னார்கள். அதில் குளிக்கவேண்டும் என்று சொன்னோம். சிலபேர் அதை ஆமோதிக்கவில்லை. குளித்து நாலைந்து நாட்கள் ஆகிவிட்டதால் தமிழ் நாட்டைச் சேர்ந்த நாங்கள் நாலைந்து பேர் மட்டும் அந்த வெந்நீர் ஊற்றைத் தேடிச் சென்றோம். ஒரு பர்லாங் தூரம் நதிக்கரையில் கீழ்ப்பக்கமாகச் சென்றபோது கீழே தண்ணீர் ஓடுவதற்குப் பக்கத்தில் இரண்டு ஊற்றுக்கள் தென்பட்டன. கீழே இறங்குவதற்குச் சரியான பாதை இல்லை. சிறிது சிரமப்பட்டுக் கீழே இறங்கினோம். இரண்டு வெந்நீர் ஊற்றுக்கள் நதியில் ஓடும் தண்ணீர் மட்டத்திற்கு இரண்டடிக்கு மேல் வருகின்றன. ஒன்று மிக லேசான சூடும், இன்னொன்று அதை விடக் கொஞ்சம் அதிகமான சூடும் உள்ளவையாக

இருக்கின்றன. முகந்து குளிப்பதற்கு இரண்டு மூன்று தகர டப்பாக்கள் வைத்துள்ளனர். உட்கார்ந்து குளிக்க வசதியாய் இருக்கிறது. நன்றாகக் குளித்து விட்டுச் சிவ சக்தி கோயில் சென்று சிறிது நேரம் தியானம் செய்துவிட்டு வந்து, இமிக்ரேஷன் ஆபிஸில் பாஸ்போர்ட்டில் முத்திரை வைத்து வாங்கிக்கொண்டு வழக்கப்படி ராணுவ வைத்திய அதிகாரியிடம் பரிசோதனை செய்துகொண்டோம். இதற்கு முன் தங்கியிருந்த கேம்புகளில் செய்த வைத்திய பரிசோதனையை விட இங்குக் கண்டிப்பான முறையில் பரிசோதனை செய்தார்கள். இதற்குமேல் தான் மிகக் கடினமான பாதை. 16500 அடி உயரம் போகவேண்டும். பனிமலையில் நடந்து ஏற வேண்டும். ஆதலால்தான் மிகக் கவனமாகப் பரிசோதனை செய்தாக வேண்டும் என்று அந்த டாக்டர் சொன்னார். ஒவ்வொருவருக்கும் பிளாஸ்டிக் பையில் 12 வகை மருந்துகள், 2 மெழுகு வர்த்தி, நெருப்புப்பெட்டி ஒன்று வைத்துக் கட்டிக்கொடுத்தார்கள். நான் 'அலோபதி மருந்துகளை உபயோகிப்பதில்லை, வேண்டாம்' என்றேன். அவசியம் கையில் வைத்துக்கொள்ளவேண்டும் என்றும் இதன் அவசியம் உங்களுக்கு நாளை தெரியும் என்று வற்புறுத்திக் கொடுத்தார். எங்கள் குழுவிலேயே நான் ஒருவன்தான் வேஷ்டி கட்டிக்கொண்டிருந்தேன். ''லிப்டிலே போகும்போது அவசியம் கால்சட்டை அணிந்துகொள்ள வேண்டும். வேஷ்டி கட்டிக்கொண்டு வந்தால் சங்கூமுக்கு மேல் போக அனுமதிக்கமாட்டேன்'' என்று கண்டிப்பாகச் சொன்னார். காலை ஒன்பது மணிக்குக் காலாபாணியில் இருந்து சங்கூம் என்னும் இடத்திற்குப் புறப்பட்டோம். காலாபாணிக்கு மேல் ஒன்பது கி. மீ. தூரம் மரங்களோ விவசாயமோ கிடையா. சிறு சிறு குத்துச் செடிகளும் வேனிற் காலத்தில் சில இடங்களில் புற்களும் இருக்கின்றன. சுற்றிலும் மலைச் சிகரங்களில் பனி மூடிக் காட்சியளிக்கின்றது. வழி நெடுகக் குத்துக் குத்தாகப் பூச்செடிகள் பட்டுப் பூச்சிகள் போன்ற வர்ணத்தில் காட்சி அளிக்கின்றன. ஆனால் அவற்றைப் பறிக்கவோமோந்து பார்க்கவோ கூடாது என்று டார்ச்சூலாவில் புறப்படும்போதே சொல்லியிருந்தார்கள். பாதி வழியில் ராணுவத்தினர் இன்றும் எல்லாருக்கும் தரமான காபி தயாரித்துக் கொடுத்தார்கள். பகல் ஒரு மணிக்குச் சங்கூம் கேம்பிற்குப் போய்ச் சேர்ந்து பகல் உணவு அருந்தி ஓய்வெடுத்தோம். ஓடை ஓரத்தில் ஒரு பெரிய மைதானத்தில் கூடாரங்கள் போட்டு வைத்திருந்தார்கள். தண்ணீர் வசதி ஓரளவு போதுமானதாக இருந்தது. 11,800 அடி உயரத்தில் காலாபாணி இருந்தது. அங்கிருந்து 13,000 அடி உயரத்திற்கு வந்து சேர்ந்தோம். ஓரளவான ஏற்றமாகவே பாதை அமைந்திருந்தது. மாலை ஐந்துமணிக்கே கடுங்குளிர். எல்லாரும் கூடாரத்தின் வாயிலை மூடிக்கொண்டு கையில் இருந்த கம்பளி ஆடைகளைத் தலை, கை, கால், உடல் முழுதும் மூடிக்கொண்டு படுத்துக்கொள்வதைத்தவிர வேறு வழி இல்லை. இரவு எட்டு மணிக்கு ஒரு கூட்டம் கூட்டிச் சில விஷயங்கள் சொல்லப் போவதாகக் கூறி எல்லாரையும் அழைத்தார்கள். ஒருகூடாரத்தில் எல்லாரும் கூடினோம். ராணுவத் தலைவரும் டாக்டரும் பேசினார்கள்: ''நாளைக் காலை லிப்புத்தடாகக் கணவாயைத் தாண்டித் திபேத்திற்கு நீங்கள் போகப்போகிறீர்கள். நாளை நடந்து போகும் பாதை முழுதும் பனிமூடிய பகுதி. வெயில் வந்துவிட்டால் பனி உருகி நடப்பது மிகவும் கஷ்டமாக இருக்கும். ஆதலால் எல்லாரும் காலை நாலரை மணிக்கே எழுந்து சிற்றுண்டியை முடித்துக்கொண்டு ஐந்தரைமணிக்குள் புறப்பட்டாக வேண்டும். பனிப்பகுதியில் நடப்பதற்கு முழங்கால் அளவிற்கு பூட்ஸ் தருகிறோம். அதை இந்திய எல்லையில் கொடுத்து விட வேண்டும்'' என்று பூட்ஸ்களைக் காட்டினார்கள். அவைகளுள் ஒவ்வொன்றும் ஒன்றரைக் கிலோவிற்குக் குறையாத பாரம் உள்ளதாக இருந்தது. அதைப் பார்த்ததும் இரண்டொருவரைத்தவிரமற்றவர்கள் அவற்றைத் தூக்கி நடக்க முடியாதென அவற்றை விரும்பவில்லை. போட்டோ காமிராக்கள் கொண்டு

போகலாம். படம் எடுத்த பிலிம்களை ராணு வத்தினரிடம் பெயர் எழுதிக் கொடுத்து வைத்துத் திரும்பி வரும்போது வாங்கிக் கொள்ளலாம். படம் எடுத்த பிலிம் யாரும் கொண்டுபோகக் கூடாது என்று சொல்லி வாங்கிக் கொண்டனர். இரவு உணவிற் குப் பிறகு படுக்கைக்குச் சென்றோம். மறு நாள் அதிகாலை நாலரை மணிக்கு எல் லாரையும் எழுப்பிவிட்டு விரைவில் மூட்டை கட்டித் தயாராகவேண்டும் என்று சொன் னார்கள். காலை ஐந்து மணிக்குள் பேருக்கு இரண்டொரு பூரியும் டீயும் சாப்பிட்டு விட்டுப் பூதகணங்கள் போன்று உடைகளை அணிந்துகொண்டுகேப்டன், டாக்டர், ராணு வத்தினர் பத்துப்பேர் காவலர் பதினைந்து பேருடன்கிளம்பினர். பாதையைச் சரிசெய்ய கடப்பாரை, மண்வெட்டி முதலியவற்றை எடுத்துக்கொண்டு பத்துப்பேர் முன்னால் சென்றனர். அதற்குப் பின் யாத்திரைவாசி கள் நடந்துசென்றனர். அதற்குப் பின் குதிரையில் செல்பவர்கள் வந்தனர். சாமான் கள் கொண்டுவரும் குதிரைகள் கடைசியில் வந்தன. சங்கும் என்ற இடத்திலிருந்து லிப்புலேக் கணவாய்க்கு ஐந்து கி. மீ. தூரம் போவதற்குள் சுமார் 4,000 அடி உயரம் ஏறியாகவேண்டும். சுமார் ஒரு கி. மீ. தூரம் மண் தரையில் சுமாரான ஏற்றமாக இருக்கிறது. அதன் பிறகு எங்குப் பார்த்தாலும் வெள்ளை வெளேரென்று ஒரே பனிமயமாக இருக்கிறது. வெள்ளை மணலைக் கொட்டி வைத்தது போன்று இருக்கிறது. முன்னால் சென்ற ராணுவ வீரர்களும் காவ லரும் எந்தப்பக்கம் நடந்து போக முடி யும் என்று பார்த்துப் பனிக்கட்டியாகவும் மணல்போன்றும் உள்ளவைகளை வெட்டிச் சரி செய்து பாதை அமைத்துக்கொண்டு சென்றார்கள். நாங்கள் அங்குச் செல்வ தற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு பனி அதிகம் விழுந்து பாதையே தெரியாமல் இருந்தது. முதலில் பனி ½ அடி உயரம்தான் இருந்தது. போகப்போக 1 அடி 1½ அடி யாக இருந்து சில இடங்களில் 3 அடி உயரத் திற்குப் பனி மணல் போன்று இருந்தது. இத்தகைய பாதையில் சுமார் 4 கிலோ மீட்டர் தூரம் நடப்பதற்குள் சுமார் நாலா யிரம் அடி உயரத்திற்கு ஏறியாகவேண்டும். ஒரே ஏற்றமாகவே இருக்கிறது. காலை 7 மணிக்குப் பனியுள்ள இடத்துக்குப்போய்ச் சேர்ந்தோம். பனி ½ அடி, 1 அடி உயரம் உள்ள இடங்களில் கால் வைத்தால் அந்த ஈரத்தினால் கீழே உள்ள மண் நனைந்து போய்க் கால் வழுக்குகிறது. ஒருகையில் தடி, இன்னொரு கையில் சிறிய பையில் உலர்ந்த பழங்கள். கையில் இரண்டு உறை கள் போட்டு இருந்ததால் கைத்தடியை நன் றாக இறுக்கிப் பிடிக்க முடியவில்லை. குச் சியை ஊன்றிப் பார்த்து அதன் ஆதரவோடு காலைத் தூக்கி வைத்தால் வழுக்குகிறது; அல்லது கால் உள்ளே போகிறது. மூக்கி லிருந்து தண்ணீர் வடிகிறது. மூச்சு விடு வதற்குப் பிராணவாயு போதவில்லை. வாயைத்திறந்துதான் மூச்சுவிட வேண்டி இருக்கிறது. கொஞ்சநேரம் ஆகவும் அந்தப் பனி மீது பட்டுவரும் வெயிலின் ஒளியில் கண் கூசுகிறது. நல்ல கூலிங் கிளாஸ் இல்லாது போனால் கண்ணைக் கெடுத்துவிடும் அளவில் அந்த ஒளியின் பிர காசம் இருக்கிறது. ஓர் அடி உயரம் பனி உள்ளவரை சாமான் தூக்கி வந்த குதிரை களும் சவாரிக் குதிரைகளும் வந்தன. அதற்கு மேல் குதிரைகளாலும் வரமுடிய வில்லை. குதிரையில் வந்தவர்களும் இறங்கி நடக்க வேண்டியதாயிற்று. எல்லைப் போலீஸ்காரர்களும், ராணுவத்தினரும் ஒவ் வொரு யாத்ரீகர் பக்கத்திலும் நின்று கையைப் பிடித்துக்கொண்டு நடந்தும்,கால் கீழே போனபோது தூக்கிவிட்டும், தைரியம் சொல்லிக் கொண்டு வந்தனர். நடக்க நடக்கப் பாதை தீரவில்லை. ஒரே ஏற்றம். ஒவ்வோர் அடி வைத்ததும் பெருமூச்சு வாங்குகிறது. மூக்கிலிருந்து நீர் வடிகிறது. கண்ணீர் விட்டுக் கடவுளை நினைப்பதன்றி வேறு வழியில்லை. முன்னால் போகின்றவர் களைப் பார்த்து நாமும் போய்ச் சேரவேண் டுமே என்ற ஆசை தூண்டக் கைத்தடியை ஊன்றிப் பார்த்துக் காலை வைக்கிறோம். நான்கு அடிக்கொருதரமாவது வழுக்குதல் அல்லது உள்ளே கால் போய் விடுதல்

நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. அவனருளின்றி அவன் தாள் வணங்க முடியாதென்பது நன்கு தெரிகின்றது. கடவுள் நாமம் ஒன்றையே கதியென நம்பிக் கஷ்டத்தைப் பொருட்படுத்தாது நடந்து செல்கின்றோம். போகப் போகப் பாதை நீண்டுகொண்டே இருக்கிறது. நான்கு கி. மீ. தூரத்தைக் கடக்க நான்கு மணிநேரம் பிடித்தது. அதில் இந்திய ராணுவத்தினர் உதவி ஒப்பற்றது. சிரமப்பட்டு ஒருவாறு லிப்பு லேக் கணவாய்க்குக் காலை பதினொரு மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். பெண்கள் பட்ட கஷ்டம் மிக அதிகம். களைப்படைந்து மயக்கமடைகிற நிலையில் வந்து உட்கார்ந்தனர். சிலர் படுத்தனர். அந்தக் கணவாய் 16,800 அடி உயரமும் சுமார் அறுபது அடி அகலமும் உள்ளதாக இரண்டு மலைகளுக்கிடையில் அமைந்திருக்கிறது. உச்சியில் நின்று பார்த்தால் கண்ணுக்கெட்டிய அளவு எங்குப் பார்த்தாலும் வெள்ளியை உருக்கி வார்த்ததுபோன்று பனி மூடிய மலைச் சிகரங்கள், பள்ளத்தாக்குகள், சமவெளிகள் தென்படுகின்றன. காற்று வீச ஆரம்பித்தால் உடம்பில் அம்பு குத்துவதுபோன்ற வலி ஏற்படுகின்றது. லிப்புத்தடாகம் என்பது இந்திய எல்லையில் உள்ள பனி நிறைந்த பரந்த பள்ளத்தாக்கு ஆகும். அதிலிருந்து தான் காளிகங்கை உற்பத்தியாகின்றது. ஆனால் காலாபாணி வரைக்கும்அதைவெறும் ஓடை என்றும் காலாபாணியின் குளத்துக்கருகிலிருந்து அதைக் காளிகங்கை என்றும் அழைக்கின்றனர். அது சமதரைக்கு வந்து அயோத்திப் பக்கம் வரும்போது சரயுநதி என்று பெயர் பெறுகிறது. கைலாய யாத்திரையிலேயே மிகக் கஷ்டமான நாட்கள் இரண்டாகும். அவற்றுள் ஒன்று லிப்புக்கு அப்பால் திபேத் போய்ச்சேரும் நாள் ஒன்றாகும். இரண்டாவது, கைலாயம் வலம் வரும்போது இரண்டாவது நாள் ஆகும். இந்த இரண்டு நாட்களிலும் ஏற்படுகின்ற கஷ்டம் வாழ்க்கையில் மறக்க முடியாததும் பெரிய அனுபவத்தைத் தரக்கூடியதுமாக உள்ளது. நான்கு மணிநேரம் உடம்புடன் போராடி இந்திய எல்லை போய்ச்சேர்ந்தோம். அங்கு நிற்க முடியவில்லை. உட்காரவோ படுக்கவோ வசதியில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்தோம். எங்களுக்கு முன் சென்றிருந்த முதற் குழுவினர் இந்திய எல்லைக்கு வந்த பிறகுதான் நாங்கள் எல்லையைத் தாண்டிப் போகவேண்டும் என்று சொல்லிவிட்டனர். அங்கு அவர்கள் வருகைக்காகக் காத்திருந்தோம். ஒருமணி நேரம் காத்திருந்த பிறகு முதற்குழுவினரின் சாமான்களைத் திபேத்தியக் கூலியாட்கள் கொண்டு வந்தனர். பகல் சுமார் பன்னிரண்டரை மணிக்கு முதல் யாத்திரைக் குழுவினர் ஒவ்வொருவராக வந்தனர். முதற் குழுவில் பதினெட்டுப் பேரைத்தான் தேர்ந்தெடுத்து அனுப்பினார்களாம். அதிலும் மூன்றுபேர் டெல்லியிலேயே யாத்திரை செய்யத் தைரியம் இல்லாது நின்றுவிட்டனர். இருவர் இரண்டொருநாள் பிரயாணத்திற்குப் பிறகு முடியாதென்று திரும்பிவிட்டனராம். அக்குழுவில் தமிழ்நாட்டினர் யாருமில்லை. ஒரு பெண்ணும் பன்னிரண்டு ஆட்வரும் சென்றிருந்தனர். அவர்கள் இந்திய எல்லைக்குத் திரும்பி வந்தபோது மிகவும் சோர்ந்துபோய்ப் பேசக்கூட முடியாத நிலையிலிருந்தனர். மிகக் கஷ்டமான யாத்திரை என்றும் சரியான உணவு வசதி இல்லை என்றும் கடும் குளிர் என்றும் இறைவன் அருளின் துணைகொண்டு தான் யாத்திரையை முடிக்கவேண்டியிருக்கிறது என்றும் சிரமப்பட்டுச் சொன்னார்கள். அவர்கள் வந்த பிறகு எங்களைத் திபேத் எல்லைக்குப் போகக் கேப்டன் அனுமதித்தார். அந்த எல்லையில் சுமார் பதினைந்து அடி அகலத்திற்கு (No Man Land) யாருக்கும் சொந்தமல்லாத பகுதியென்று வைத்திருக்கிறார்கள். அதற்குமேல் பாஸ்போர்ட் வைத்துள்ள யாத்ரீகர்களைத் தவிர மற்றவர்கள் யாரும் போகக் கூடாதென வைத்துள்ளார்கள். இந்திய ராணுவத்தினரிடமும், எல்லைப் போலீஸ்காரர்கள், குதிரைக்காரர்கள் எல்லாரிடமும் விடை பெற்றுக் கொண்டு கைலாசபதிக்கு ஜே என்று எல்லாரும் கூறி வழி அனுப்பத் திபேத் எல்லையில் இறங்கினோம். ஆரம்பத்திலேயே செங்குத்தான

இறக்கம். சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரம் திபேத் எல்லைப் பகுதியில் பனியில் நடக்க வேண்டும். அந்த மூன்று கிலோ மீட்டர் தூரம் போவதற்குள் மூவாயிரம் அடி கீழே இறங்கியாக வேண்டும். அதை விட அங்கு ஏற்பட்ட பெரிய ஏமாற்றம் டார்ச்சூலாவில் இருந்து ஆறு எல்லைப் போலீஸ்காரர்கள் எங்களுடனேயே நடந்து வந்தனர். காலா பாணியில் இருந்து இந்திய ராணுவத்தினர் மிக அன்பும் ஆதரவும் காட்டி எல்லைவரை கூட வந்தனர். சாமான் தூக்கி வந்த ஆட்கள், குதிரைக்காரர்கள் எல்லாரும் சற்று முன் பின்னாகக் கூட வந்தனர். திபேத் எல்லையில் இறங்க ஆரம்பித்ததும் திபேத் கூலிகள் எங்கள் சாமான்களைத் தூக்கிக் கொண்டு அந்தப் பனிமலை இறக்கத்தில் வேகமாக ஓடி விட்டனர். நாங்கள் யாத்திரை வாசிகள் 26 பேர், வெளி விவகார மந்திரி அலுவலகத்தைச் சேர்ந்த ஆபீசர் ஒருவர் ஆக 27 பேரைத் தவிர வழி காட்டக்கூட ஒருவரும் இல்லாது அனாதைகள் போல் ஆய்விட்டோம். பனிமலையின் இறக்கத்தில் காலை வைத்தால் கீழே இழுத்துக்கொண்டு போகின்றது. கீழே விழுவதும் எழுவதும் கயிலைநாதனைக் கண்ணீர் விட்டு வழுத்துவதும் தவிர வேறு வழியில்லை. "உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன், பின்னை ஒருவரை யான் பின் செல்லேன்" என்பதை அங்கு நிதர்சனமாக அனுபவிக்கவேண்டி வருகிறது. நாம் வழுக்கி விழும்போது பக்கத்தில் ஓர் அடிக்குள் முன் பின்னாக உள்ளவர்கள் கூட உதவ முடிவதில்லை. நம்மைப் பிடித்தால்அவர்களும் கீழே விழவேண்டி வரும். அனுதாபம் காட்டுவதைத் தவிர வேறு ஒன்றும் ஒருவருக்கொருவர் உதவமுடிவதில்லை. உச்சிவேளை வெயிலிலும் பனி இங்கு இருக்கின்றது. மேலே வெயில் காய்கின்றது. கீழே கால் பனிக்குள் சிக்கி விழுந்தால் விஷம் போன்று குளிர்கின்றது. எப்படியோ திண்டாடித் திணறி ஒரளவு அதில் நடக்கப் பழகினேம். அதாவது குதிக்காலை முதலில் வைத்து நடந்தால் வழுக்கல் குறைகிறது. அந்த மூன்று கிலோ மீட்டர் தூரம் நடப்பதற்குள் பத்துத் தடவைக்கு மேல் எல்லாரும் விழுந்திருப்பார்கள். எல்லாம் பனி மணலாக இருந்ததால் அடிபடுதலோ, காயம் படுதலோ இல்லை. மிகச் சிரமப்பட்டுப் பகல் 12-30 மணிக்குப் புறப்பட்டவர்கள் மாலை 4 மணிக்குப் பனித்தரையைக் கடந்து மண் தரைக்குப் போய்ச் சேர்ந்தோம். மண் தரையைப் போய்ச் சேர்ந்ததும் சொர்க்கத்திற்குப் போய்ச் சேர்ந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. திபேத் கூலி ஆட்கள் அந்த இடத்தில் சாமானை வைத்து விட்டுப் போய்விட்டார்கள். ஒரு மணி நேரம் காத்திருந்தோம். அங்கு யாரும் இல்லை. என்ன செய்வது என்றும் தோன்றவில்லை. மிகுந்தபசி. களைப்பால் உடல் எல்லாம் ஒரே வலி. கொஞ்ச நேரம் படுத்தும் உட்கார்ந்தும் என்ன செய்வதென்று புரியாமலும் திண்டாடிக் கொண்டிருந்தோம். மாலை 5 மணிக்கு எங்களுக்கும் எங்கள் சாமான்களை எடுத்துப் போகவும் குதிரைகள் வந்து சேர்ந்தன. அந்தக் குதிரைகளைப் பார்த்தால் எலும்புகளை எண்ணி விடலாம். அதன் முதுகின்மேல் மரக்கட்டையில் சேணம் போன்று செய்து அதன்மேல் ஒரு கம்பளித்துணி மட்டும் போட்டப்பட்டிருந்தது. அதுதான் சேணம். குதிரை மேல் ஏறி உட்கார்ந்ததும் அக்குதிரையின் எலும்பும் அந்தக் கட்டையும் உட்காரும் பகுதியை அழுத்தி வலி கொடுக்க ஆரம்பித்தன. வேறுகதியின்றி அதில் உட்கார்ந்து வலியை ஒரு மாதிரி சகித்துக்கொண்டு சென்றோம். அங்கிருந்து சைனக்காரர்கள் அலுவலகம் உள்ள தக்களக்கோட்டை என்னும் ஊருக்கு இருபது கிலோ மீட்டர் தூரம் என்று சொன்னார்கள். அந்தக் குதிரைகள் ஆறு மணி நேரம் 20 கி. மீ. தூரத்தை நடந்து முடித்தன. இரவு 11 மணிக்குச் சீனர்களின் அலுவலகம் போய்ச் சேர்ந்தோம். இருட்டு, குளிர், பசி, களைப்பு, உடம்பெல்லாம் வலி இவற்றுடன் சென்றோம். திபேத்தில் பீகிங் கால அளவுப்படி இந்திய நேரத்தைவிட 2-30 மணி நேரம் அதிகமாக வைத்துள்ளார்கள். அவர்கள் நேரப்படி இரவு 1-30 மணிக்கு நாங்கள் அங்குப் போய்ச் சேர்ந்ததும் முதலில் பாஸ்போர்ட், விஸா

எல்லாம் சரியாக உள்ளனவா என்று பார்த்துச் சாமான்களையெல்லாம் பரிசோதனை செய்தார்கள். அந்த அலுவலகத்தில் சுமார் இருபது பேர் இருந்தனர். அவர்களில் ஓர் ஆணுக்கும், ஒரு பெண்ணுக்கும்தான் ஓரளவு ஆங்கிலம் தெரிந்திருந்தது. அந்தப் பெண்தான் மொழிபெயர்ப்பாளராக இருந்து சைனாக்காரர்களுக்கும் எங்களுக்கும் பேசுவதற்கு உதவியாய் இருந்தாள். அந்தப்பெண் இல்லாது அவர்களோடு எந்தத் தொடர்பும் கொள்ளமுடியவில்லை. பாஸ்போர்ட், விஸா இவற்றைப் பரிசோதிக்கும்போதும் சாமான்களின்பரிசோதனையின்போதும்தங்குவதற்கு அறை காட்டும்போதும்அந்தமொழிபெயர்ப்பாளர் துணை வேண்டியிருந்தது. சாமான்கள் பரிசோதனை செய்யும்போது தங்க நகைகள், வெளிநாட்டுக் கடிகாரம், டேப்ரிகார்டர் போன்ற சாமான்கள் இருந்தால் அவற்றை வாங்கிக்கொண்டு போகும்போது தருவதாகக் கூறினார்கள். வெளிநாட்டுச் சாமான்களுக்கு அங்குக் கிராக்கி அதிகமாக உள்ளதாம். என்னுடைய சாமான்களைப் பரிசோதிக்க எடுத்தபோது மொழிபெயர்க்கும் பெண் இவர் இந்தியன் லாமா என்று சொன்னாள். அவர்கள் பரிசோதனை செய்யவேண்டியதில்லை என்று விட்டுவிட்டார்கள். சைனாக்காரர்கள் யாத்ரீகர்களோடு அன்பாகப் பழகுகிறார்கள். வேண்டியதை முடிந்தமட்டும் செய்து தருகிறார்கள். பரிசோதனை முடிந்ததும் தங்குவதற்கு அறைகளைக் காட்டினார்கள். ஒவ்வோர் அறையிலும் மூன்று, நான்கு கட்டில்களைப் போட்டு வைத்திருந்தனர். நல்ல மெத்தை, போர்த்திக்கொள்ள கோட்டு, அதன்மீது கம்பளப் போர்வை எல்லாம் நன்றாக இருந்தன. ஒவ்வோர் அறையிலும் ஒரு பக்கெட் வெந்நீர், ஒரு பக்கெட் குளிர்ந்தநீர், ஒரு பிளாஸ்கில் குடிக்க வெந்நீர், ஒரு பேசின், ஒவ்வொருவருக்கும் ஒரு சிறு துண்டு, சோப்பு, கண்ணாடி எல்லாம் வைத்திருந்தார்கள். ஆனால் குளிப்பதற்குத் தண்ணீர் இல்லை; இடமும் இல்லை. அந்தப் பேசினில் வெந்நீரைவிட்டுத் துண்டை நனைத்து உடம்பைத் துவட்டிக் கொள்ள வேண்டியதுதான். பிறகு கக்கூஸ் எங்கு உள்ளது என்று கேட்டோம். அந்தக் காம்பவுண்டிற்குள் ஒரு மூலையில் ஓர் இடத்தைக் காட்டினார்கள். ஆண்கள், பெண்களுக்கான மூன்று சீட்டுகளுள்ள இரண்டு அறைகள்தாம். அங்குத் தண்ணீர் கிடையாது. தண்ணீர் வேண்டுமானால் ஒவ்வோர் அறையிலும் மூன்று நான்கு காலி டப்பாக்கள் வைத்துள்ளதில் நீர் எடுத்துக்கொண்டு போக வேண்டும். கழிப்பறையை எத்தனை மாதங்களுக்கு முன் சுத்தம் செய்தார்களோ தெரியவில்லை. அந்த அறைக்குப் பக்கத்தில் போக முடியாதபடி துர்நாற்றம் வீசியது. வேறு வழியின்றி இரவில் அதைத்தான் உபயோகிக்கவேண்டியிருந்தது. இரவில் அந்தக் காம்பவுண்டின் கேட்டைப் பூட்டிவைத்துவிடுகின்றனர். இரவு 12-30 மணிக்குச் சாப்பாட்டிற்கு அழைத்தார்கள். ஏதாவது நல்ல உணவு கிடைக்கும் என்று ஆவலோடு உணவுக் கூடத்திற்குச் சென்றோம். அங்கு டேபிள், சேர், தட்டுக்கள், கத்தி, ஸ்பூன், இடுக்கி, முள் போன்றவைகள் வைக்கப்பட்டிருந்தன. பிறகுவேகவைத்த காய்கறிகள், வேகவைத்த வேர்க்கடலை என்று மூன்று நான்கு வகைகள் கொடுத்தார்கள். அவற்றுள் எதையும் சாப்பிட்முடியவில்லை. வழவழ என்று நமக்குப் பிடிக்காத ஒருவித நாற்றம் இருந்தது. ஒவ்வொன்றிலும் இரண்டொன்றைச் சாப்பிட்டுப் பார்த்துவிட்டுத் தண்ணீர் மட்டும் குடித்துவிட்டு வரவேண்டியதாயிற்று. மது வகைகள் நிறைய வைத்திருந்தார்கள். அதை விரும்பியவர்கள் வேண்டிய அளவு சாப்பிட்டுவிட்டு மேலும் பாட்டில்களில் வாங்கி வைத்துக்கொண்டனர். மற்றவர்கள் தங்கள் அறைக்கு வந்து கையில் இருந்த பிஸ்கட், முந்திரிப்பருப்பு, திராக்ஷை போன்றவைகளைச் சாப்பிட்டுப் படுத்தோம். திபேத் நாட்டில் தக்களக் கோட்டைதான் பள்ளமான பகுதி. அதன் உயரம் 12,000 அடி. இரவில் கடும் குளிர், பசி, களைப்பு, உடல், கை, கால்கள் எல்லாம் நல்ல வலி இருந்ததால் ஓரளவு நன்றாகத் தூங்கினோம். ஜூலை மாதம் மூன்றாம் தேதி காலை 7-30 மணிக்குத்தான் மெதுவாக எழுந்து பார்த்தோம். சைனாக்காரர்கள் நேரப்படி காலை 10 மணி.

அன்று காலை டிபன் எல்லாரும் வேண்டாம் என்று சொல்லிவிட்டோம். அன்று பகல் உணவிற்குச் சாதம், பருப்பு தருவதாகச் சொன்னார்கள். வெந்நீரில் முகம் கழுவி, பல் துலக்கிக் கையில் கொண்டுபோயிருந்த பால் டின்னைக்கொண்டு பால், காபி போன்ற வைகளைத் தயாரித்து ஏதோ ஒருமாதிரி காலை டிபனை முடித்தோம். தக்களக்கோட்டையில் இருந்து பார்த்தால் சுற்றிலும் பனிமூடிய உயர்ந்த சிகரங்கள், சமவெளிகள் ஆகியவை தெரிகின்றன. பனிநீர் உருகி நிறைய ஓடைகளாகப் பல இடங்களில் ஓடிக்கொண் டிருக்கின்றது. ஆனால் மரம், செடி, கொடி ஆகியவை எங்கும் தென்படவில்லை. காற்று வீசும்போது அப்பனியில் படிந்துவருவதால் உடலில் படும்போது கூர்மையான அம்பினால் குத்துவது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. தக்களக்கோட்டை என்னும் ஊரைச் சுற்றிச் சில இடங்களில் வேனிற்காலத்தில் குறைந்த அளவு கோதுமை, உருளைக்கிழங்கு போன்ற உணவு வகைகளைப் பயிரிடுகிறார்கள். அவை செழிப்பாக வளர்வதில்லை. மக்கள் தொகை மிகக்குறைவு. ஆடு மாடுகள் மேய்ப்பது தான் முக்கியத்தொழில். பள்ளமான இடங்களில் வெயில் காலத்தில் மட்டும் சுமார் அரைஅடி உயரத்திற்குக் கொஞ்சம் புல்வளர்கின்றது. அப்படிப் புல் உள்ள இடத்திற்கு ஆடு மாடுகளை ஓட்டிப்போய் அங்குச் சிறிய கூடாரங்கள் அல்லது கற்களை அடுக்கிச் சிறிய குகை போன்று அறைகள் அமைத்துக்கொண்டு அங்கேயே தங்கி வருகிறார்கள். அவர்களுடைய முக்கியமான உணவு அவர்கள் மேய்க்கும் ஆடு மாடுகளின் மாமிசமும் டீயும்தான். அவைகளின் தோலைப் பதம் செய்து சட்டைக்கும் படுக்கைக்கும் உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள். ஏதோ இரண்டொரு கம்பள ஆடைகள் வைத்துள்ளார்கள். வடிவத்தில் குள்ளமாகவும் முகம் தட்டையாகவும் அகன்றும் உள்ள ஆண்களுக்கு முகத்தில் ரோமம் அதிகம் வளராததால் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வித்தியாசம் காண்பது சுலபமாயில்லை. திபெத்தைச் சைனாக்காரர்கள் ஆக்கிரமித்துக்கொள்வதற்கு முன் அவர்கள் சுதந்திரமாகக் குளிர் காலத்திலே இந்தியா, நேபாளம் போன்ற பக்கத்து நாடுகளுக்குப் போய்ச்சேமித்து வைத்துள்ள ரோமங்களை விற்றுவிட்டுக் கோதுமை மாவு, வெல்லம், டீ முதலிய சாமான்களை வாங்கிக்கொண்டு வருவார்களாம். இப்போது சைனாக்காரர்கள், திபெத்தியர்கள் ஆடு, மாடு மேய்த்துக்கொண்டு தங்கியிருக்கும் இடங்களுக்கு லாரியைக் கொண்டுபோய் ரோமங்களை எடுத்துக் கொண்டு அவர்களுக்கு ரேஷன் போன்று ஓரளவு உணவுப் பண்டங்களைத் தந்து வருகிறார்கள். அவர்கள் சுதந்திரமின்றி அடிமைகளாக இருப்பதால் கவலையுடனும் காரியங்கள் செய்வதில் சிரத்தை இல்லாமலும் இருக்கிறார்கள்.

நாங்கள் தக்களக்கோட்டை போய்ச் சேர்ந்த பிறகு ஒருநாள் அங்கு ஓய்வு எடுத்துக்கொண்ட பிறகு மறுநாள் காலைதான் லாரியில் மானசரோவர், கைலாயம் ஆகிய இடங்களுக்குக் கொண்டு போய் விடுவதாகச் சைனாக்காரர்கள் சொன்னார்கள். முதல் நாள் பட்டினியுடன் காலை ஐந்து மணிக்குப் புறப்பட்டு இரவு பன்னிரண்டு மணிக்குப் போய்ச் சேர்ந்ததால் எங்களுக்கு ஓய்வு அவசியமாக இருந்தது. பத்து நாட்களுக்குப் பிறகு நல்ல அறை, கட்டில், மெத்தை ஆகியவை கிடைத்ததால் நல்ல உணவு இல்லாவிட்டாலும் படுத்திருந்தால் போதுமெனத் தோன்றிற்று. அவர்கள் நேரப்படி காலை பத்து மணிக்குப் பேங்க் திறப்பார்கள். எல்லாரும் அங்குச் சென்று டாலரைக் கொடுத்து யென் என்று சொல்லப்படும் சைனா நாணயமாக மாற்றிக் கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள். அந்தக் காம்பவுண்டிற்குள்ளேயே ஓர் அறையைக் கஸ்டம்ஸ் ஆபீசாகவும், பேங்காகவும், நிர்வாக ஆபீசாகவும் மாற்றிக்கொள்கிறார்கள். ஆட்களும் அதே நபர்களே. கஸ்டம்ஸ் ஆபீசர்களாகவும், பேங்கர்களாகவும், அலுவலக வேலைசெய்பவர்களாகவும் அவ்வப்போது அதற்கேற்ற உடையை மட்டும் மாற்றிக்கொண்டு வேலை பார்க்கிறார்கள். (தொடரும்)

குறிப்புகள்

நூறுபேர் தேவை

'எண்ணிய முடிதல் வேண்டும்; நல்லவே எண்ணவேண்டும்' என்று பாரதி கூறியுள்ளார். எண்ணியதை முடிப்பதற்குத் திண்ணிய நெஞ்சம் வேண்டும் என்றும் அவர் பகர்ந்துள்ளார். இன்றைய சமுதாயத்தை நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்கு நல்லெண்ணமும் அவ்வெண்ணத்தை முடிக்கும் திண்ணிய உள்ளமும் நமக்குத் தேவைப்படுகின்றன. लोकाः समस्ता सुखिनो भवन्तु லோகா:ஸமஸ்தா ஸுகினோ பவந்து என்று எண்ணுவது ஒரு நல்லெண்ணம். உலகிலுள்ள உயிர்களெல்லாம் இன்புற்று வாழட்டும் என்பது அதன் பொருள்.

இன்றைக்குச் சமுதாயத்தில் சுயநலம் புரையோடி இருக்கிறது. அதன் விளைவாக எல்லாத்துறைகளிலும் ஊழல்கள் மிகுந்திருக்கின்றன. இந்நிலையில் எத்தகைய நல்ல திட்டமும் மக்களுக்குப் பயனளிக்காத முறையில் செயல்பட்டு வருகிறது. மதப்பூசல்களும், சாதிப்பூசல்களும், மொழிப் பூசல்களும் சுயநலத்தின் அடிப்படையில் எழுந்திருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் நிவாரணம் தேட நூறு தியாகமூர்த்திகள் தோன்றவேண்டும். ''நூறுபேர் இருந்தால் இவ்வுலகத்தையே ஓர் ஆட்டு ஆட்டிவிடுவேன்'' என்று சுவாமி விவேகானந்தர் பகர்ந்துள்ளார். அவர் மனதில் எழுந்த அந்நல்லெண்ணம் நிறைவேறத்தான் போகிறது. அந்தக் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவ்வெண்ணம் நிறைவேறும் காலம் பொற்காலமாக அமையும். நூறுபேர் என்று அவர் குறிப்பிட்டது தோற்றத்தில் மட்டும் மக்களாக விளங்குபவர்கள் அல்லர். நூறு தியாகமூர்த்திகளையே அவர் குறிப்பிட்டிருக்க வேண்டும். அவர் எதிர்பார்க்கும் நூறு தியாகமூர்த்திகள் எப்பேர்ப்பட்டவர்களாக இருக்கவேண்டும் என்பதை ஆராய்வோம்.

கிருதயுகத்தில் சிறப்பு மிக்க சமுதாய வாழ்வு நடந்து வந்தது. சமுதாயத்தைத் திருத்தி அமைக்கவேண்டிய அவசியம் அப்பொழுது இல்லை. திரேதாயுகத்தில் சமுதாயத்தை ஒழுங்குபடுத்த ஒரு ராமன் தேவைப்பட்டார். துவாபரயுகத்தில் சமுதாயத்தைத் திருத்தியமைக்க ஒரு கிருஷ்ணன் தேவைப்பட்டார். இக்கலியுகத்தில் சமுதாயத்தைத் திருத்தியமைக்க நூறு தியாகிகள் தேவைப்படுகிறார்கள்.

சமுதாயத்தில் ஒரு பிரிவினர்கள் தங்களைப் பிராம்மணர்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களை மற்ற மக்களைவிட உயர்ந்தவர்களென்றும் மற்ற மக்கள் தங்கள் நிலைக்கு உயர்வதற்கு அனுமதிக்கலாகாது என்றும் எண்ணி வருகிறார்கள். வேதமந்திரங்களையும், வேதபாடங்களையும் மற்றவர்கள் ஓதுவதற்கு அருகதை இல்லை என்று அக்கூட்டத்தினர் எண்ணி வருகின்றனர். வேதம்ஓதுபவர்களெல்லாரும் வேதியர்கள் என்பதை அவர்கள் மறந்துவிட்டு வேதியர்கள் என்று சொல்லப்படுபவர்கள்தாம் வேதம் ஓதவேண்டும் என்ற பிழைபட்ட கருத்துக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். பிராம்மணர்களல்லாதவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் வேதம் ஓதி வேதியர் ஆகவேண்டுமென்ற விருப்பம் கொள்ளாது, வேதம் ஓதுதலே கூடாது என்றும், வேதம் ஓதுதலுக்குத் தடைபோட வேண்டும் என்றும் கருதிவருகின்றனர். இத்தகைய எண்ணம் அவர்களுடைய முன்னேற்றத்துக்குத் தடையாக அமைந்திருக்கிறது. உள்ளத்து அனையது உயர்வு என்பது கோட்பாடு. உள்ளத்தை உயர்த்தினால் தான் உயர்வடைய முடியும். உள்ளத்தை உயர்த்துவதற்கு வேதம் ஓதுவது சிறந்த உபாயமாகும். வேதத்தை வியாச பகவான் சரியான முறையில் வகுத்து வைத்துள்ளார். அவை முறையே ருக், யஜுர், ஸாமம், அதர்வணம் என்று நான்கு வகைப்படும். வேதத்தின் மூலமொழி சம்ஸ்கிருதமாகும். சம்ஸ்கிருதத்தைக் கற்பது சமுதாய முன்னேற்றத்துக்கு மிக முக்கியமானதாகும். சம்ஸ்கிருதத்தைப் பொது மொழியாகவும், வேதத்தை அனைவரும் கற்பதற்கு உரியதாகவும் செய்கின்ற

தியாக மூர்த்தி ஒருவர் தோன்ற வேண்டும். நம் நாட்டில் வேத பாடசாலைகள் ஊருக்கு ஒன்றுக்குக் குறையாமல் ஏற்பட வேண்டும். ஆங்கு வேதமும், பௌதிகமும், இரசாயனமும், கணிதமும், வரலாறும் பாடங்களாக அமைந்திருக்க வேண்டும். சம்ஸ்கிருதமும், பிராந்திய மொழியும், ஆங்கிலமும் பயிற்றுவிக்கப்பட வேண்டும். சமுதாய மக்கள் அனைவரும் சம உரிமையில் ஆங்குப் பயிலவேண்டும். ஒவ்வொரு துறையிலும் வல்லுநர்கள் தங்களிடத்திலுள்ள அறிவுத் திறமையைக் கரவாது பிரதிபலன் எதிர்பாராது சமுதாயத்துக்கு வாரி வழங்க வேண்டும். பள்ளிகளில்சுய நலத்தின் அறிகுறி எதுவும் இருக்கக்கூடாது. தியாகிகள்தாம் ஆங்குப் போதகர்களாக அமையவேண்டும். பண்டைக்காலத்தில் தியாகிகள்தாம் கல்விப் பொறுப்பில் இருந்து வந்தார்கள். அந்த நிலை திரும்பவும் உருவாகவேண்டும். இப்படிப் பள்ளிகளை உருவாக்கும் நிலையை எவ்வளவுக்கெவ்வளவு விரைவில் கொண்டு வருகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நாட்டிலுள்ள சுய நலப்பேயை விரட்டியோட்டலாம். இத்தகைய பள்ளிகளை உருவாக்கி விடுவோமானால் நாம் எதிர்பார்க்கும் நூறு தியாகிகளைப் பெற்று விடலாம்.

கூரிய மதியும், சாத்விகப்பண்பும் உடைய தலைசிறந்த மாணவர்கள்தாம் அறிவுத்துறையில் சிறந்த முன்னேற்றமடைவார்கள். அறிவுத்துறையில் ஊக்கமில்லாத மாணவர்கட்குத் தொழிற்கல்விக்கூடங்கள் அமைவது அவசியம். அவர்களுக்குச் சம்ஸ்கிருதத்தில் அடிப்படை அறிவு இருந்தால் போதும். பிராந்திய மொழியில் பொதுக்கல்வி சிறிது தரலாம். தொழில்துறையில் அவர்களுக்குத் தக்க பயிற்சி அளிக்கவேண்டும். தொழில் நுணுக்கங்களை அறிந்து நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு அவர்கள் தங்கள் ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும். தொழிலின் மூலம் நாட்டினுடைய வளம் ஓங்க வேண்டுமென்ற எண்ணத்தை அவர்கள் உள்ளத்தில் பதிய வைக்கவேண்டும். பொருளாதாரத்தில் நாடு நலிவுற்றால் அதற்குத் தாங்கள் பொறுப்பு என்ற உணர்ச்சியை அவர்களுக்கு ஊட்டவேண்டும். தொழில் மூலம் தனக்கு எவ்வளவு ஊதியம்கிடைக்கும் என்று எண்ணாது தான் செய்யும் தொழில்மூலம் நாட்டின் செல்வத்தை எவ்வளவு வளர்க்க முடியும் என்று எண்ணவேண்டும். இத்தகைய மனப்பான்மையையுடைய தொழிலாளர்களைக்கொண்ட தொழிற்கூடங்கள் உருவாகுமானால் நாம் எதிர்பார்க்கும் நூறு தியாகிகளைப் பெற்றுவிடலாம்.

பௌதிக விஞ்ஞானிகள் தாங்கள் எடுத்துக்கொண்ட ஆராய்ச்சியில் அல்லும் பகலும் மனதைச் செலுத்தினார்கள். அதன் விளைவாகத் தாங்கள் எப்பொருளை ஆராய்ச்சி பண்ணினார்களோ அப்பொருளைப்பற்றிய உண்மைகள் எல்லாம் அவர்கள் உள்ளத்தில் தெளிவாக விளங்கின. பரதரிசனம் பெற்ற ஞானிகளும் பரத்தைப் பற்றியே அல்லும் பகலும் நினைத்துப் பரத்தின் காட்சி பெற்றார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆறுமாத காலம் உணவைப்பற்றிய சிந்தனையில்லாதும் உறக்கத்தைப்பற்றிய சிந்தனை இல்லாதும் காளியைப்பற்றிய சிந்தனையிலேயே மூழ்கி இருந்தார். அதன் விளைவாக அவருக்குக் காளிதரிசனம் கிடைத்தது. சுவாமி விவேகானந்தர் இந்தியாவைப் பற்றிய சிந்தனையிலேயே மூழ்கியிருந்தார். இந்தியாவின் தென்கோடியில் கன்னியாகுமரியில் அமர்ந்து இந்தியாவைக் குறித்துத்தான் தியானம் செய்தார். இந்திய மக்களை உயர்த்தவேண்டுமென்ற எண்ணம் அவருடைய உள்ளத்தில் ஓயாது உதித்துக் கொண்டே இருந்தது. அமெரிக்காவில் சர்வமத மகாசபையொன்று நிகழ்ந்தது. அதற்கு இந்துமதத்தின் பிரதிநிதியாகச் சுவாமி விவேகானந்தரை இந்துக்கள் அனுப்பி வைத்தார்கள். இந்தியாவையும் மேனாட்டையும் இணைப்பதன்மூலம் இந்தியாவின் ஆன்மீகச் செல்வம் மேனாட்டுக்குப் போகவேண்டும் என்றும், அமெரிக்காவின் பொருள் செல்வம் இந்தியாவுக்கு வரவேண்டும் என்றும் சுவாமி விவேகானந்தர் திட்டமிட்டிருந்தார். அந்தத்திட்டத்தை நிறைவேற்ற அந்தச் சந்தர்ப்பத்தைச் சுவாமி விவேகானந்தர் பயன்படுத்திக்கொண்டார்.

இங்ஙனம் அவர் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இந்தியாவுக்கு நலம் தேடுவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார். சுவாமி விவேகானந்தர் பகர்வதாவது: ''இந்திய மக்களுடைய நிலையை எண்ணி எண்ணி உணவையும் உறக்கத்தையும் ஒழித்துவிட்டவர்கள்இருக்கின்றூர்களா? உடலின் நாடி நரம்புகளிலெல்லாம் மக்கள்படும் கஷ்டத்தைப்பற்றிய உணர்ச்சி ஊடுருவிப் பாய்ந்திருக்கின்றதா? இத்தகையவர்கள் நாட்டு மக்களுக்கு நலம் செய்யத் தகுதியுடையவர்களாகிறுர்கள்.'' இத்தகைய நாட்டுணர்வு கொண்டுள்ள நூறு தியாகிகள்தாம் நாம் எதிர்பார்க்கும் தியாகிகளாகின்றுர்கள்.

உடல் பலமும், உள்ளத் திட்பமும், ஊக்கமும் உடையவர்கள் உருவாகவேண்டும். நேரம் காலம் பாராது அயர்வின்றி நாட்டுக்காக உழைக்கும் மனநிலை படைத்தவர்களை உருவாக்கவேண்டும். உடல் பலம் பொருந்தியவர்கள் தங்கள் உடல் உழைப்பை நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்துவதில் ஆர்வமும், மகிழ்ச்சியும் கொண்டவர்களாகவிருக்கவேண்டும்.

இன்றைக்கு மக்கள் தங்களிடத்துள்ள அறிவையும், ஆற்றலையும் பொருள் சம்பாதிப்பதிலும், பிறரை ஏமாற்றுவதிலும் பயன்படுத்துகின்றுர்கள். பொருள் சம்பாதிக்கின்றவளவு அவர்களுக்குப் போகத்தில் நாட்டம் உண்டாகிறது. போக வாழ்வில் ஈடுபட ஈடுபடச் சுயநலம் தடித்து வருகிறது. பிறரை ஏமாற்றுவதன் மூலம் மனதைப் பாழ்படுத்தி வருகின்றுர்கள். எனவே தங்களைக் கீழ்மைப்படுத்திக் கொள்வதோடு சமுதாயத்தையும் கீழ்நிலைக்குக் கொண்டு வருகின்றுர்கள். இன்றைய கல்விமுறையும், நாட்டுச் சூழ்நிலையும் போகிகளையும், சுயநலக்காரர்களையுமே உருவாக்கி வருகின்றன. இந்தக் கல்வி முறையும், நாட்டுச் சூழ்நிலையும் அடியோடு மாறி அமையவேண்டும்.

கல்வி முறை எப்படி மாறவேண்டும் என்பதை முதலில் ஆராய்ந்தோம். அம்முறையில் கல்வியைக் கற்று வருகிறவர்கள் தியாகிகளாக வடிவெடுப்பார்கள். அந்தத் தியாகிகள்தாம் நாட்டின் சூழ்நிலையை மாற்றி அமைக்க முடியும். மனதைப் பாழ்படுத்தும் திரைப்படக் காட்சிகளையும், பத்திரிகைகளையும், நாவல்களையும் மேற்கூறிய முறையில் கல்வி பயின்று வருபவர்கள் அறவே புறக்கணித்து விடுவார்கள். அவைகள் நாட்டைப் பாழ்படுத்தும் நாச சக்திகள் என்பதை அவர்கள் அறிவார்கள்.

பிராம்மண குலத்தில் பிறந்தவன் ஒருவன் பறையர் குலத்தில் பிறந்தவன் ஒருவனேடு சமத்துவமாகப் பழகவேண்டும். அறிவிலும், பண்பிலும் ஒத்திருப்பவர்கள் பிராம்மணக் குடியில் பிறந்தவர்களானுலும் சரி, பறையர் குடியில் பிறந்தவர்களானுலும் சரி அவர்கள் சகோதரர்களாவார்கள். நான் ஓர் இந்தியன். நான் ஒரு தியாகி. நான் இறைவனுக்குரியவன் என்ற உணர்ச்சி ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ததும்பிக் கொண்டிருக்கவேண்டும். இதுதான் இந்தியாவின் லக்ஷியம். இந்த லக்ஷியத்தை நிறைவேற்றுகின்ற நூறு தியாகிகள் இன்றைக்கு நாட்டுக்குத் தேவைப்படுகிறுர்கள்.

ஒழிக என்ற கோஷம் நாட்டைவிட்டு ஒழியவேண்டும். வாழ்க என்ற ஆசிமொழி வளரவேண்டும். ஒன்றை வளர்ப்பது கஷ்டம். அழிப்பது சுலபம். ஒரு செடியை மரமாக்குவதற்கு வெகு சிரமப்படவேண்டும். ஆனுல் அச்செடியை அழிப்பதை விளையாட்டுப்போன்று செய்து விடலாம். சமுதாயத்தை உருவாக்கப் பல ஆயிரம் ஆண்டுகளாகும். ஆனுல் அதை நொடிப் பொழுதில் அழித்துவிடலாம். ஆக்க ரீதியான விஷயங்களையே நினைக்கவேண்டும்; பேசவேண்டும்; செயல்படவேண்டும்.

ஆங்கிலேயர்கள் ஆங்கிலத்தை உலகப் பொதுமொழி ஆக்கினுர்கள். ஆகையினுல் அவர்கள் உலகத்தில் செல்வாக்குப் பெற்றிருக்கிறுர்கள். உலகத்தையே உயர்த்தும் உயர்ந்த கருத்துக்கள் நம்மிடத்தில் இருக்கின்றன. அவற்றை ரகசியமென்று சொல்லிக் கொண்டு நம்மவர்களுள் ஒரு கூட்டத்தார் இருந்து வருகின்றனர். அவ்வுண்மைகளை உலகுக்கு உரியதாக்கவேண்டும். வேதத்துக்கு மறை என்று பெயர். மறை என்ருல் மறைத்துவைத்தல் என்பது பொருள்.

பேருண்மைகளையெல்லாம் வேதம் தன்னுள் மறைத்து வைத்திருக்கிறது. பண்பட்ட உள்ளம் படைத்தவர்களுக்குத் தாம் அவ்வுண்மைகள் விளங்குகின்றன. வேதபாராயணம் செய்வது மனதைப் பண்படுத்துகிறது. மனதைப் பண்படுத்துகின்ற செயல் மனிதனுகப் பிறந்த அனைவருக்கும் பொது. வேதத்தை அதற்குரிய சந்தத்தில் பாராயணம் பண்ணவேண்டும். அப்படிப் பாராயணம் செய்வதற்குச் சந்தப்படி வேதத்தை முறையாக அறிந்திருக்கிறவர்கள் மற்றவர்களுக்குப் புகட்டவேண்டும். வேதபாராயணம் செய்யும் குழந்தைகள் இந்தியாவில் எங்கோ சில இடங்களில் பயிற்சி பெறுகிறார்கள். ஆங்குப் பயிற்சி பெறுகின்றவர்களும் பிராம்மண குடும்பத்தில் பிறந்தவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு பள்ளியிலும் வேதபாராயணம் நிகழவேண்டும். வேதம் ஓதத் தெரிந்தவர்கள் இதைச் சேவை மனப்பான்மையோடு செய்ய முன்வரவேண்டும். வேதம் முறைப்படி ஓதத் தெரிந்தவர்கள் சேவை மனப்பான்மையோடு அதைப் பிறருக்குப் புகட்ட முன்வருவார்களானல் நாட்டில் பண்பாடு வளரும். வேதம் ஓதத்தெரிந்தவர்கள் அதைப் பிராம்மணரல்லாதவர்களுக்குப் புகட்டமறுப்பார்களானல் இந்துமதம் அழிவதற்கு அவர்கள் விதை போட்டவர்களாகிறார்கள். தங்களுக்குத் தாங்களே அழிவைத் தேடிக்கொள்பவர்களுமாகிறார்கள்.

வேதம் கற்க மாட்டோம், சம்ஸ்கிருதம் கற்க மாட்டோம் என்று சொல்லுவது எங்களை நாங்கள் உயர்த்திக்கொள்ளமாட்டோம் என்று சொல்வதற்கு நிகராகும். வேதமும் சம்ஸ்கிருதமும் அனைவருக்கும் பொது. அவற்றைக் கற்றுக்கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அவற்றைக்கற்கின்றவளவுதான் சமுதாயம் மேல் நிலைக்கு வரும்.

தன்னம்பிக்கையும், தெய்வ நம்பிக்கையும் உள்ளத்தில் ஆழ்ந்து இடம் பெறவேண்டும். உடல் பலம் பொருந்தியவர்கள், உள்ளத் திட்பம் பொருந்தியவர்கள் இவ்விரு நம்பிக்கைகளையும் தங்களிடத்தில் உண்டாக்கிக் கொள்ளவேண்டும். அறிவோடு பண்பும் வளரவேண்டும். அறிவையும் பண்பையும் எல்லாரிடத்திலும் வளர்க்கப் பாடுபடவேண்டும். ஜாதி உணர்ச்சியைச் சுட்டிக் காட்டக்கூடாது. மனிதாபிமான உணர்ச்சியும், ஆன்மீக உணர்ச்சியும் வளரவேண்டும். இன்றைக்கு மக்கள் கீழான உணர்ச்சிக்கு வசப்பட்டவர்களாக இருக்கிறார்கள். உணர்ச்சி வசப்பட்டு ஆக்கரீதியான செயல்கள் எதுவும் செய்வதில்லை. கீழான உணர்ச்சிக்கு வசப்படக்கூடாது. கீழான உணர்ச்சியை வென்று பழகவேண்டும். கீழான உணர்ச்சியை வெல்லுவதுதான் ஆன்மீகம் என்கின்றோம். தன்னம்பிக்கையும், தெய்வ நம்பிக்கையும் ஆன்மீக உணர்ச்சியை வளர்க்கப் பயன்படும். ஆன்மீக உணர்ச்சியில் விழிப்படையும்பொழுதுதான் தியாகமூர்த்திகள் உருவாவார்கள். ஆன்மீக எழுச்சி பெற்று ஆன்மீக உணர்ச்சியால் உந்தப்பட்டுச் செயல்படும் நூறு தியாக புருஷர்கள் தேவைப்படுகிறார்கள் என்று சுவாமி விவேகானந்தர் குறிப்பிடுகின்றார். அத்தகையவர்கள் மூலம்தான் உலகம் மகோன்னத நிலையை அடையும். சுவாமி விவேகானந்தர் மனதில் கொண்டிருந்த அத்தகைய நூறு தியாக மூர்த்திகள் உருவாகி விரைவில் உலகம் மகோன்னத நிலையை அடையுமாக.

செய்திகள்

நிகழ்பவை:

24-11-82 புதன்கிழமையன்று தீபாவளி விடுமுறைக்குப் பின் ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுலப்பள்ளி திறக்கப்படுகிறது.

7-12-82 செவ்வாய்க்கிழமை ஸ்ரீ சாரதா தேவியார் ஜயந்தியை முன்னிட்டு ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் இருபத்து நான்கு மணி நேரம் அகண்ட நாம பஜனையும், நண்பகல் ஒரு மணிநேரம் ஐக்கிய வணக்கமும் செய்வார்கள்.

12-12-82 ஞாயிற்றுக்கிழமை சேலம் ஜில்லா மேட்டூர் தாலுகா, சின்னத்தண்டா ஸ்ரீ ராமகிருஷ்ண குருகுலப் பள்ளியில் நிகழும் ஆண்டு விழாவில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் கலந்துகொண்டு பேசுவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

திருவாசகம்	பிரசார விலை ரூ.	23-00
ஸ்ரீமத் பகவத்கீதை 14-ம் பதிப்பு	,, ...	18-00
மஹாபாரதம்	,, ...	7-00
இராமாயணம்	,, ...	5-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,, ...	6-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி	,, ...	5-50
தினசரி தியானம்	,, ...	4-00
கர்மயோக விளக்கம்	...	10-00
ஞானயோக விளக்கம்	...	8-00
ராஜயோக விளக்கம்	...	8-00
பரமஹம்சரின் பெருமை	...	6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	...	6-00
கடவுளின் வடிவங்கள்	...	6-00
விவேகானந்த விவரணம்	...	4-00
அனுஷ்டான வேதாந்தம்	...	3-00
எதிர்கால இந்தியா	...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	...	2-50
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள்	விரிவுரை ...	3-50
பரிபூரணானந்தம்	ஷை ...	3-00
சின்மயானந்த குரு	ஷை ...	3-00
ஆனந்தமானபரம்	ஷை ...	3-00
சுகவாரி	ஷை ...	3-00
மௌனகுரு வணக்கம்	ஷை ...	3-00
எங்குநிறைகின்றபொருள்	ஷை ...	2-50
பரசிவ வணக்கம்	ஷை ...	1-00
கண்ணன் என்னும் கடவுள்	...	2-50
ஹரிச்சந்திரன்	(நாடகம்) ...	2-00
விரதவீரர் பீஷ்மர்	ஷை ...	1-50
விபீஷணன் சரணாகதி	ஷை ...	1-50
பரமஹம்சர் பாமாலை	...	1-50
காயத்ரீ	...	1-50
நன்மக்களைப் பெறுதல்	...	1-50
அமரநாத யாத்திரை	...	1-25
சந்நியாசி	...	1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	...	1-25
இறைவணக்கம்	...	1-00
குழந்தைகளின் களிக்கூடம்	...	1-00
இராவண தத்துவம்	...	1-00
வாலி மோட்சம்	(நாடகம்) ...	1-00
தவப்புதல்வர்கள்	,, ...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி	,, ...	1-00
தானவீரன் கர்ணன்	,, ...	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்	...	1-00
மார்க்கண்டேயன்	(நாடகம்) ரூ.	1-00
பிரஹ்லாதன்	(நாடகம்) ...	1-00
தபோபலன்	(நாடகம்) ...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்	...	1-00
நோய்க்கு இடம் கொடேல்	...	1-00
*ஆத்ம சக்தி	...	1-00
*ஆலய வழிபாடு	...	0-75
*சக்தி தத்துவம்	...	0-70
*சிவதத்துவம்	...	0-70
*மனிதனது நிஜசொருபம்	...	0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு	...	0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்	...	0-60
*கணபதி	...	0-60
*முருகக் கடவுள்	...	0-50
*விஷ்ணு தத்துவம்	...	0-50
கர்மகாண்டம்எது? ஞானகாண்டம்எது?		0-50
வர்ணாச்ரம தர்மம்	...	0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	...	0-30
விவேகானந்தரின் வீர கர்ஜனை	...	0-30
கந்தர் அநுபூதி	...	0-25
The Bhagavad Gita (11th Imp:)	...	24-00
Tirukkural (with plastic cover)	...	8-00
The Indian National Education	...	8-00
Ramakrishna Lives Vedanta	...	8-00
Facets of Brahman or The Hindu Gods	...	5-00
Daily Divine Digest (DELUXE)	...	4-50
Daily Divine Digest (Ordinary)	...	2-50
Mahabharata (with plastic cover)	...	6-00
Sri Krishna-The Manifest Divinity	,, ...	6-00
Sri Vishnu Sahasranama Stotram	...	4-00
The Bhagavad Gita (Small Size)	...	4-00
Siva Sahasranama Stotram	...	3-50
Bheeshma The Superman	...	3-50
Hinduism Hosts Christianity	...	3-00
Holy Bible—In the Light of Vedanta	...	1-50
Reminiscences of Master Mahashaya	...	1-50
*Introducing the Gita	...	1-50
The Garland of Paraaparam	...	1-50
*Key to Higher Life	...	1-25
*The Student	...	1-25
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami	...	1-00
*The Nursery School	...	1-00
*The School	...	1-00
*The Teacher	...	1-00

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதை, திருவாசகத்திற்கு ரூ. 5-00ம், மஞ்ஜரிக்கு ரூ. 1-80ம் மஹாபாரதத்திற்கு ரூ. 1-80ம் இராமாயணத்திற்கு ரூ. 1-60ம் தினசரி தியானத்திற்கு ரூ 1-40ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 3-00 முதல் ரூ. 5-00 வரையும் சேர்த்து அனுப்புங்கள். *இப்புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

Edited by SWAMI NITHYANANDA,

Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.